வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

MARUTHI MONEY EXCHANGE
மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk மலர் : 03 25.08.2022 வியாழக்கிழமை இதழ் : 261 பக்கங்கள் : 16 + VIII

# கடன் சலுகை விவகாரத்தில் சீன கொள்கை மாறவேண்டும்!

## ஜனாதிபதி ரணில் பகிரங்கம்

கொழும்பு, ஓகஸ்ட் 25

கடன் சலுகையை வழங்குவது தொடர்பில் சீனா தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கேட்டுள்ளார். சர்வதேச நாணய நிதியத்தின் ஊழியர் மட்டக் குழு நாட்டுக்கு வந்துள்ள நிலையில் ஜனாதிபதி இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

15

## கடன் வழங்கும் தரப்பினரின் போதிய உத்தரவாதம் தேவை

### ஐ. எம். எவ். மீண்டும் வலியுறுத்து

கொழும்பு, ஓக. 26

இலங்கைக்கு நிதி வசதிகளை வழங்குவதற்கு கடன் வழங்கும் தரப்பினரிடமிருந்து போதிய உத்தரவாதம் தேவை என சர்வதேச நாணய நிதியம் (ஐ. எம். எவ்.) அறிக்கை ஊடாக மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு இலங்கைக்கு வருகை தந்த சர்வதேச நாணய நிதியக் குழு நேற்று கலந்துரையாடலை ஆரம்பித்தது.

நிதி அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாட

15

## துப்பாக்கி சூடுகள் இருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஓக. 25

தென்னிலங்கையில் நேற்று மூன்று இடங்களில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவங்களில் இருவர் உயிரிழந்தனர். ஒருவர் காயமடைந்தார்.

காலி மாவட்டத்தில் எல்பிட்டியில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார். இதேபோன்று, கம்பஹா - படபொத - குருச சந்தியில் இன்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார். மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இந்தச் சூட்டு சம்பவத்தை நடத்தினர். இதில் வர்த்தக நிலைய

15

## நல்லூரான் தேருக்கு வரும் அடியவர்க்கான அறிவிப்பு



யாழ்ப்பாணம், ஓக. 25

வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் தேர் திருவிழா இன்று நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்க வரும் அடியவர்கள் தங்க நகைகள், பணம் என்பவற்றை எடுத்து வருவதைத் தவிர்க்குமாறு வட மாகாண மூத்த பிர

15



உலகப் புகழ் பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் சப்பை ரதத் திருவிழா நேற்று மாலை இடம்பெற்றபோது...!

இன்றைய பத்திரிகையுடன்

**அரோகரா**

ஈழநாடு நல்லூர் தேர்த்திருவிழா சிறப்பிதழ்

## நல்லூரானுக்கு இன்று தேர்!



யாழ்ப்பாணம், ஓக. 25

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழா இன்று வியாழக்கிழமை காலை 6.15 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கடந்த 2ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான பெருந்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 6.15 மணிக்கு தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவடையும். நாளை மறுதினம் மாலை 4.45 மணிக்கு பூங்காவனம் இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இனப்படுகொலை புகைப்படங்கள் எங்கள் ஊடாகவே வெளிவந்தன!

### சிறீதரன் எம். பி. தெரிவிப்பு

கிளிநொச்சி, ஓக. 25

நிர்வாணமாக்கப்பட்டு கொல்லப்பட்ட போராளிகளின் படங்கள் இனப்படுகொலையின் ஆதாரமாக எங்கள் ஊடாகவே வெளியே வந்தன என பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொசியில் நேற்று இடம்பெற்ற புகைப்படப்பிடிப்பாளர் தின நிகழ்வில் கலந்துகொண்டு

15

## சீனாவிடமிருந்து உரமுமில்லை கொடுத்த பணமும் இல்லை!

### விவசாய அமைச்சர் மகிந்த

கொழும்பு, ஓக. 26

சீன உர நிறுவனத்துக்கு செலுத்தப்பட்ட பணத்தை மீள பெறுவது தொடர்பாக முயற்சிகள் எடுக்கப்படுகின்றன என்று விவசாயத்துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில், செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், சீன உர நிறுவனத்துக்கு 6.9 மில்லியன் அமெரிக்க டொலர்

15

## சர்வதேசத்துக்கு அளித்த வாக்கு மீறப்பட்டுவிட்டது

### ஜீ. எல். பீரிஸ் சொல்கிறார்

கொழும்பு, ஓக. 25

புதிய சட்டம் கொண்டுவரப்படும் வரையில் தற்போதுள்ள பயங்கரவாத தடுப்பு சட்டத்தை பயன்படுத்தப் போவதில்லை என சர்வதேசத்துக்கு இலங்கை வாக்குறுதி வழங்கியது. - இவ்வாறான நிலையில் பயங்கரவாத தடை சட்டத்தைப் பயன்படுத்துவதால் சர்வதேசத்தின்

15

## பயங்கரவாத சட்டத்துக்கு எதிராக மீண்டும் கையெழுத்துப் பிரசாரம்!

### சுமந்திரன் எம். பி.

யாழ்ப்பாணம், ஓக. 25

பயங்கரவாத தடுப்பு சட்டத்தை இரத்து செய்யக் கோரி கையெழுத்து பிரசாரத்தை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

15

## இனி வரிசை இல்லை!

### அமைச்சர் மனுஷ நாணயக்கார

கொழும்பு, ஓக. 25

ஊழியர் சேமலாப நிதியைப் பெற்றுக்கொள்வதற்கு அடுத்த மாதத்திலிருந்து வரிசைகள் இருக்காது என்று தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

டிஜிற்றல் தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டு ஊழியர் சேமலாப நிதியைப் பெற்றுக் கொள்வதை இலகுபடுத்தப்போவதாகவும் அமைச்

15

## இப்படியும் நடக்கிறது...!

சர்வகட்சி அரசாங்கம் அமைப்பது தொடர்பாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துவரும் முயற்சிகள் தொடர்பாக நேற்றைய தினமும் இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியையும் இணைத்துக் கொண்டு பயணிப்பதுதான் உண்மையான சர்வகட்சி அரசாங்கமாக இருக்கும் என்று பலரும் கருத்துத் தெரிவித்து வந்ததாலேயே அவரும் கடைசிவரை தான் முயற்சி செய்வதாகக் காட்டிக்கொள்ள முயன்று கொண்டிருக்கிறார் என்றும் நேற்றைய பத்தியில் கோடிகாட்டியிருந்தேன்.

இப்போது, சஜித் இணைந்துகொள்வது இல்லை என்பதை நாட்டுக்கு அவர் தெளிவாகத் தெரிவித்துவிட்டதால், இனியும் எதற்காக ஜனாதிபதி ரணில் காலம் கடத்த வேண்டும்? உடனடியாகவே சர்வகட்சி அரசாங்கம் இல்லாவிட்டாலும் சர்வ கட்சியினரையும் இணைத்துக்கொண்டு தேசிய அரசாங்கம் ஒன்றையாவது அமைத்துக்கொண்டு பயணிக்க வேண்டும். அப்படிச் செய்தால் மாத்திரமே நாட்டில் நிலையான பொருளாதார ஸ்திரநிலையை ஏற்படுத்தலாம் என்று இப்போது பலரும் கருத்துச் சொல்லத் தொடங்கியிருக்கின்றனர்.

உண்மைதான், இனியும் காலம் கடத்தாமல் ஜனாதிபதி புதிய அமைச்சரவையை அமைக்க வேண்டும். ஜனாதிபதி தரப்பில் என்ன நடக்கின்றது என்பதை அறிய அவருக்கு நெருக்கமான ஒருவருடன் பேசினேன்.

அப்போது அவர் சொன்ன தகவல்கள் நமக்குப் புதியவையாக இருந்தன.

அமையவிருக்கும் புதிய அமைச்சரவையில் தமது கட்சியின் சார்பில் இடம்பெற வேண்டியவர்களின் பட்டியலை பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர் ஒருவர் ஜனாதிபதியிடம் சமர்ப்பித்திருக்கிறார். அந்தப் பட்டியலைப் பார்த்ததும் அதில் உள்ளவர்களின் பெயர்களைக்கூடப் படித்துப் பார்க்காமலே திருப்பி அனுப்பினாராம் ஜனாதிபதி. காரணம் வேறு ஒன்றுமல்ல, அதில் இருபத்திஐந்து பேரின் பெயர்கள் இடம்பெற்றிருந்தனவாம்.

முப்பது பேருடன் அமைக்க இருக்கும் அமைச்சரவையில் இருபத்தி ஐந்து பேரை பொதுஜன பெரமுனவுக்கு ஒதுக்குவதென்றால், அது ஏற்றுக்கொள்ளக்கூடியது இல்லைத்தானே.

பின்னர், இரண்டாவது பட்டியல் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. அதில் இருபது பேரின் பெயர்கள் - அதனையும் திருப்பி அனுப்பினார் ஜனாதிபதி.

இப்போது மூன்றாவதாகக் கிடைத்திருக்கும் பட்டியலில் பதினாறு பேரின் பெயர்கள் இடம்பெற்றிருக்கின்றனவாம். பதினாறு என்ற இலக்கத்தில் உடன்பட்டாலும் அதிலுள்ள நால்வரின் பெயர்கள் சங்கடத்தை ஏற்படுத்தியிருக்கின்றன ஜனாதிபதிக்கு.

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, நாமல் ராஜபக்ஷ, மகிந்தானந்த அளுத்கமகே, ரோகித அபேகுணவர்த்தன என்ற இந்த நால்வரும் அமைச்சரவையில் இடம்பெறுவதை ஏனைய கட்சிகளிருந்து அரசாங்கத்தில் இடம்பெற சம்மதித்திருப்பவர்கள் விரும்பவில்லை என்றும், இவர்கள் இடம்பெற்றால் அவர்கள் இணைந்துகொள்ள மாட்டார்கள் எனவும் அவ்வாறு எதிரணியில் உள்ளவர்களை இணைத்துக் கொள்ளாவிட்டால் அது சர்வகட்சி அரசாங்கமாக அல்ல, தேசிய அரசாங்கம் என்பதாகக்கூட இருக்காது என்றும் ஜனாதிபதி தரப்பில் இருந்து சொல்லப்பட்டிருக்கின்றதாம்.

இதுவே, இப்போது அமைச்சரவை தாமதத்துக்குக் காரணம் என்கின்றன ஜனாதிபதியுடன் நெருக்கமான வட்டாரங்கள்.

ஜனாதிபதிக்கும் பொதுஜன பெரமுனவுக்கும் இப்படியொரு கயிறிழுப்பு நடந்துகொண்டிருக்க, சிறீ லங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளும் கயிறு இழுப்பு நடந்துகொண்டிருக்கின்றது. அரசாங்கத்தில் சேர்வதை கட்சியின் தலைவர் மைத்திரி அவ்வளவாக ரசிக்கவில்லை என்றும் ஆனால், அப்படி இணைந்துகொள்ளாவிட்டால் கட்சியின் மேலும் சில முக்கியஸ்தர்கள் மைத்திரியை கழட்டிவிடத் தயாராக இருக்கின்றனர் எனவும் சொல்லப்படுகின்றது. அதனால் இறங்கி வந்திருக்கும் மைத்திரிஏற்கனவே கட்சியிலிருந்து வெளியேறி அமைச்சரவையில் இருக்கும் நிமால் சிறிபால டீ சில்வா, மகிந்த அமரவீர ஆகிய இருவரையும் மீண்டும் கட்சியில் இணைந்து கொள்ளுமாறும், கட்சியாக அரசில் இணைந்து கொள்ளலாம் என்றும் தூதுவிட்டுக் கொண்டிருக்கிறாராம்.

எது எப்படியோ, இந்த சிக்கல்களை எல்லாம் விரைந்து தீர்த்து அமைச்சரவையை முழுமையாக்கிக் கொண்டு அரசாங்கத்தை கொண்டுசெல்ல ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரவு - பகலாக பணியாற்றிக் கொண்டிருக்கிறாராம்.

ஐக்கிய மக்கள் சக்திக்குள்ளும், சில பெரிய தலைகள் ரணிலுடன் பேசிவருகின்றனர் என்ற கொசுறுத் தகவலும் கிடைத்தது.

- ஊர்க்குருவி.

# வேறு பாலின உறவாளர்களை பாதுகாக்கும் சட்டமூலம் ஜனாதிபதியிடம் கையளிப்பு!

கொழும்பு, ஓக. 25

நாட்டில ஆண் - பெண் உறவு அல்லாத ஏனைய பாலின உறவு கொள்ளும் (LGBTQ+) சமூகங்களின் உரிமைகளை பாதுகாக்கும் நோக்கில் தண்டனை சட்டக்கோவை திருத்தத்திற்கான சட்டமூலம் நேற்று பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான பிரேமநாத் சி. தொலவத்தவினால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

தண்டனை சட்டக்கோவை (திருத்தம்) (19வது சட்டம்) தண்டனை சட்டக்கோவையில் திருத்தம் செய்வதற்கான இந்த சட்டமூலம் நேற்று முன்தினம் சட்டத்தரணி பிரேமநாத் சி தொலவத்தவால் தனிநபர் பிரேரணையாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

ஆண் - பெண் உறவு அல்லாத ஏனைய பாலின உறவு கொள்ளும் சமூகம் தொடர்பாக இந்நாட்டில் மிகவும் பின் தங்கிய சிந்தனை காணப்படுவதோடு, இதன் காரணமாக, அன்றாட வாழ்க்கையில் மட்டுமன்றி, அரச மற்றும் சட்ட அமுலாக்க நிறுவனங்களிலும் கூட, இந்த சமூகம் பல்வேறு வகையான வன்முறை, அடக்குமுறை மற்றும் துன்புறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. மேலும், சில சந்தர்ப்பங்களில் அரசியலமைப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட அடிப்படை உரிமைகள் கூட இந்த சமூகம் தொடர்பில் மீறப்பட்டுள்ளமை பதிவாகியுள்ளது.

பாலியல் முனைப்புகள் மற்றும் பாலியல் அடையாளங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் தனிநபர்களுக்கு தண்டனை வழங்கும் செயல்பாடு விக்டோரியா காலத்தில் காலனித்துவ சட்ட கட்டமைப்புகளின் வாயிலாக உலகம் முழுவதும் பரவியது. ஆனால் நவீன மனநல மருத்துவத்தில், இது ஒரு குற்றமாகவோ அல்லது வக்கிரமாகவோ கருதப்படவில்லை. மேலும், அபிவிருத்தி அடைந்த நாடுகள் இந்த சமூகத்தை தண்டிக்கும் மற்றும் அவர்களின் உரிமைகளை கட்டுப்படுத்தும் சட்டங்கள் மற்றும் விதிகளைத் திருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு, சட்டத்தரணி பிரேமநாத் சி தொலவத்தவினால் இந்த தனிநபர் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இலங்கை வங்கி ஊழியர்கள் ஒரு நிமிடநேர கவனவீர்ப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 25

இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தினர் நேற்று யாழ்ப்பாணத்தில் ஒரு நிமிட விசித்திர கவனவீர்ப்பு ஒன்றை நடத்தினர்.

யாழ்ப்பாணம் வைத்திய சாலை வீதியிலுள்ள இலங்கை வங்கிக் கிளைக்கு முன்பாக மதியம் 1.20க்கு ஒன்றுகூடிய வங்கி ஊழியர்கள் பதாகைகளை தாங்கியிருந்ததுடன் மதியம் 1.21க்கு கலைந்து சென்றனர்.

இலங்கை வங்கித் தலைவர் மக்கள் பணத்தை முறைகேடாக பயன்படுத்துகின்றார் சட்டம் எங்கே?, பொதுமக்கள் பணத்தைப் பாதுகாக்குக - இலங்கை வங்கித் தலைவரின் மோசடிகரமான கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்துக, இலங்கை வங்கித் தலைவரின் மோசடிகரமான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விசாரணைக்காக தடயவியல் கணக்காய்வு ஒன்றை ஆரம்பிக்குக போன்ற வாசகங்கள் பதாகைகளை வங்கி ஊழியர்கள் தாங்கியிருந்தனர். (ஐ)

# பெண் தலைமை குடும்பத்துக்காக வீடு அமைக்கிறது இராணுவம்!

வடமராட்சி, ஓக. 25

பருத்தித்துறையில் பெண் தலைமை குடும்பம் ஒன்றுக்கு இராணுவம் வீடு ஒன்றை அமைத்து வழங்கவுள்ளது. இதற்கான அடிக்கல்லை யாழ். மாவட்ட இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் வந்தன வீர சூரிய நேற்று நாட்டி வைத்தார்.

பருத்தித்துறை ஜே/ 410 கிராம சேவகர் பிரிவை சேர்ந்த பெண் தலைமைக் குடும்பம் ஒன்றுக்கே இராணுவத்தினரால் இந்த வீடு அமைத்து வழங்கப்படவுள்ளது.



அடிக்கல் நாட்டும் நிகழ்வில், கட்டைக்காடு 55 வது படைப்பிரிவு தளபதி மேஜர் ஜெனரல் குணரத்ன, 551 வது படை பிரிவு தளபதி பிரிகேடியர் சிந்திக்க விக்கிரமசிங்க, 552 ஆவது படைப்பிரிவு தளபதி பிரிகேடியர் ஜெயவீர, 553 ஆவது படைப்பிரிவு தளபதி பிரிகேடியர் ஜெயகொடி, பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிறி, உதவி பொலிஸ் அத்தியட்சகர் சுஜீவ இத்துமால் கொட மற்றும் இராணுவ அதிகாரிகள், கிராம சேவகர்கள், பொதுமக்கள் எனப் பலர் பங்கேற்றனர்.

இந்த வீட்டை அமைப்பதற்கான நிதியுதவியை திருமதி செய்லா இமானுவேல் வழங்கியிருந்த நிலையில், அதற்கான ஏற்பாடுகளை ஓய்வு பெற்ற இராணுவ மேஜர் ஜெனரல் ரவி ரத்னசிங்கம் செய்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

## நயினாதீவு - நல்லூர் பஜனை பாத யாத்திரை

யாழ்ப்பாணம், ஓக. 25

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத்தில் இருந்து பஜனை பாத யாத்திரை கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது.

58ஆவது ஆண்டாக நடக்கும் இந்தப் பஜனை பாத யாத்திரை நல்லூர் கந்தப் பெருமானின் தேர்த் திருவிழா இன்று வியாழக்கிழமை நல்லூரை வந்தடையவுள்ளது. (ஐ)

## இந்துமுகம் ஆன்மீக சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக. 25

நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு வெளியிடப்படும் இந்துமுகம் ஆன்மீக சஞ்சிகை நேற்று வெளியிடப்பட்டது.

சஞ்சிகையை டான் தொலைக்காட்சி குழுமத்தின் தலைவர் எஸ். எஸ். குகநாதன் சஞ்சிகையை வெளியிட்டு வைத்தார்.

யாழ். பல்கலைக்கழக கலைபீடத்தின் முன்னாள் பீடாதிபதி ப. கோபாலகிருஷ்ணஐயா, யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர்கள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, என். சண்முகலிங்கன், மருத்துவர் யமுனானந்தா, மதுரகவி காரை. எம். பி. அருளானந்தன் ஆகியோரின் ஆக்கங்களுடன் சஞ்சிகை வெளியாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
25.08.2022 வியாழக்கிழமை
பிலவ வருடம், ஆவணி 09

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# தமிழ் புலம்பெயர் சமூகம்?

தமிழ் புலம்பெயர் அமைப்புக்கள் சிலவற்றின்மீதான தடை நீக்கப்பட்டுள்ளது. இது ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட ஒன்று. ரணில் - மைத்திரி ஆட்சிக் காலத்தில், சில புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் தனி நபர்கள்மீதான தடை நீக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, அவர்கள் கொழும்பை நோக்கி சாய்ந்தனர். இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - முக்கியமாக பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனே பிரதான காரணம். ஏனெனில், அதற்கான நம்பிக்கையை சுமந்திரன் அவர்களுக்கு வழங்கியிருந்தார். இன்றுள்ள அனைத்துத் தமிழ் புலம்பெயர் அமைப்புக்களும் தமிழீழ விடுதலைப் புலிகளால் வழிநடத்தப்பட்ட அமைப்புகள்தான். விடுதலைப் புலிகள்தான், புலம்பெயர் சமூகத்தை நிறுவனமயப்படுத்தினர். இதில் கே. பி. எனப்படும் குமரன் பத்மநாதனுக்கு பிரதான பங்குண்டு.

குமரன் பத்மநாதன் ஒரு கட்டத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து சற்று எட்ட வைக்கப்பட்டபோது, கணிசமான - அனுபவமுள்ள தமிழ் புலம்பெயர் செயல்பாட்டாளர்களும் அமைதியாகினர். எனினும், விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் தீர்மானகரமான கட்டத்தை எட்டியபோது, குமரன் பமத்மநாதன் மீளவும் சர்வதேசப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். உண்மையில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இருக்கின்றபோதே, ஒருவரை சர்வதேச பொறுப்பாளராக உத்தியோகபூர்வமாக நியமித்தாரென்றால் - அது கே. பி. மட்டும்தான். எனினும் கே.பி. மலேசியாவில் வைத்து கைது செய்யப்பட்டு இலங்கையில் சிறைப்படுத்தப்பட்ட பின்னர், கே. பியின் புலம்பெயர் சமூக செல்வாக்கு பெருமளவில் சுருங்கிவிட்டது. இப்போது கே. பி. ஒரு விடயமல்ல என்பதே உண்மை. ஒருவேளை கே. பி. கைது செய்யப்படாமல் இருந்திருந்தால் தமிழ் புலம்பெயர் சமூகம் பெரும் சக்தியாக திரட்சிபெற்றிருக்கலாம்.

தற்போதுள்ள நிலையில், தமிழ் புலம்பெயர் அமைப்புக்கள் எனப் பலரும் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டாலும்கூட, அவர்கள் அனைவரும் ஒரு நேர்கோட்டில் சந்திக்கக் கூடியவர்கள் அல்லர். அவர்களில் பல வகையினரும் பல கோணங்களிலும் உள்ளனர். ஒரு வகையினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயல்படும் விருப்பம் கொண்டவர்களாக இருக்கின்றனர். இன்னொரு வகையினர், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்றவர்களுடன் தொடர்பில் இருக்கின்றனர். இதில், இப்போது மணிவண்ணனும் புதிதாக சேர்ந்திருக்கின்றார். இன்னொரு பிரிவு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் அவ்வாறான செயல்பாடுகளில் ஈடுபடுபவர்களோடு தொடர்பில் இருக்கின்றது.

ரணில் - மைத்திரி ஆட்சிக் காலத்தில் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசப்பட்ட நிலையிலும் நல்லிணக்கம் தொடர்பில் சில வாக்குறுதிகள் வழங்கப்பட்ட நிலையிலும் - குறிப்பாகக் கூட்டமைப்பின் ஆதரவுடன்தான் சில அமைப்புக்கள் கொழும்புடன் தொடர்பில் இருந்தன. இப்போது நிலைமைகள் முற்றிலும் மாற்றமடைந்திருந்தாலும்கூட, ரணில் மீளவும் ஜனாதிபதியாக வந்திருக்கும் நிலையில்தான் மீளவும் புலம்பெயர் விவகாரம் சூடுபிடித்திருக்கின்றது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், புலம்பெயர் சமூகத்தின் விடயங்களை கையாள்வதற்கென ஒரு பிரத்தியேக அலுவலகம் அமைக்கப்படவுள்ளது. தமிழ் புலம்பெயர் சமூகம் முக்கியமாகக் கவனத்தில் கொள்ளப்பட்டாலும்கூட, புலம்பெயர் சமூகம் என்பதன் மூலம் மேற்கு நாடுகளில் வாழும் சிங்களவர்களும்தான் கவனத்தில் கொள்ளப்படுகின்றனர். தமிழ் புலம்பெயர் சமூகமளவுக்கு அவர்கள் வளர்ச்சியடையாது விட்டாலும்கூட, அவர்களாலும் குறிப்பிட்டளவு பங்களிப்பை வழங்க முடியும்.

தமிழ் புலம்பெயர் சமூகத்தினால் எந்தளவுக்குப் பங்களிக்க முடியுமென்பது அடுத்த கேள்வி. ஏனெனில், விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் புலம்பெயர் சமூகம் காண்பித்த ஈடுபாட்டை இனி ஒருபோதும் காண்பிக்கப் போவதில்லை. அப்போது தாயகம் தொடர்பிலும் தாயகத்தின் தலைமை தொடர்பிலும் அவர்கள் மத்தியில் ஓர் உற்சாகமும் கர்வமும் இருந்தது. 2009இற்கு பின்னரான காலத்தில் அவர்கள் பெருமளவுக்கு சோர்வடைந்துவிட்டனர் - நம்பிக்கை இழந்தும் விட்டனர்.

இவ்வாறானதொரு சூழலில் தமிழ் புலம்பெயர் சமூகம் பெருமளவு முதலீடுகளை செய்ய முன்வருமென்று எதிர்பார்க்க முடியாது. பழைய தலைமுறையை சேர்ந்தவர்கள் வேண்டுமானால் குறிப்பிட்டளவு ஆர்வத்தைக் காண்பிக்கலாம். மேலும், பெரும்பாலான புலம்பெயர் சமூக அமைப்புக்கள் அரசாங்கத்துக்கு எதிரான நிலையிலிருக்கின்றன. எனினும், சில அமைப்புகளும் தனிநபர்களும் - குறிப்பாக 2009இற்குப் பின்னரான சூழலில், தங்களின் தீவிர புலி ஆதரவு நிலைப்பாட்டை கைவிட்டுவிட்டனர். அவ்வாறானவர்கள் புலம்பெயர் அலுவலகத்துடன் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புக்கள் இல்லையென்றும் கூறிவிட முடியாது.

# சர்வதேச நீதி கோரி 30ஆம் திகதி புதுக்குடியிருப்பில் கவனவீர்ப்பு!

*முல்லைத்தீவு, ஓக. 25*

*வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் முல்லைத்தீவு மாவட்ட உறவுகள் எதிர்வரும் 30ஆம் திகதி புதுக்குடியிருப்பில் நடத்தவுள்ள மாபெரும் கவனவீர்ப்பு போராட்டத்தில் அனைவரையும் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.*

*முல்லைத்தீவு மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தங்கள் உறவுகளை தேடி 2009 ம் ஆண்டு முதல் முன்னெடுத்த போராட்டத்தில் தீர்வுகள் காணப்படாத நிலையில் கடந்த 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் எட்டாம் திகதி முதல் முல்லைதீவில் தொடர் கவனவீர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.*

*தமது உறவுகள் கிடைக்கும் வரை குறித்த போராட்டம் தொடரும் என்ற அறிவிப்போடு ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி 2000 நாட்களைக் கடக்கின்றது.*

*அன்றைய தினம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் என்பதாலும் அன்றைய தினத்தில் சர்வதேச விசாரணையை வலியுறுத்தி குற்றவாளிகளை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்துமாறு கோரி புதுக்குடியிருப்பில் மாபெரும் கவனவீர்ப்பு போராட்டத்தை நடத்தத் தீர்மானித்துள்ளார்.*

*இந்தப் போராட்டத்தில் அனைத்து தரப்பினரும் கலந்து கொண்டு தங்கள் போராட்டத்துக்க வலுசேர்க்குமாறு அவர்கள் பகிரங்க அழைப்பு விடுத்துள்ளனர்.*

*முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்க தலைவர் மரியசுரேஷ் ஈஸ்வரி மற்றும் செயலாளர் பிரபாகரன் ரஞ்சனா ஆகியோர் இந்த பகிரங்க அழைப்பை விடுத்தனர்.* (ஐ)

# வளச்சுரண்டல்களுக்கு எதிராக பேசாலை மக்கள் போராட்டம்!



*மன்னார், ஓக. 25*

*மக்களின் தொடர் எதிர்ப்புக்கு மத்தியிலும் மன்னார் மாவட்டத்தில் தொடர்சியாக கனிய மண் அகழ்வு மற்றும் ஆய்வு பணிகள் சட்டவிரோதமாக இடம் பெறுகின்றன. இதே நேரம் மீன் வளம் மற்றும் கடல் வளங்களை அழிக்கும் காற்றாலை மின் செயல்திட்டத்தை மன்னார் தீவுப் பகுதிக்குள் மேற்கொள்ள வேண்டாம் என்று வலியுறுத்தியும் பேசாலை நகரில் நேற்று புதன்கிழமை மக்கள் கண்டனப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.*


*இந்தப் போராட்டத்தில் எங்கள் வருங் காலத்தை தடைசெய்ய வேண்டாம், ஆர்பாட்டமே எங்கள் வாழ்க்கையா? எங்கள் மாவட்டம் எங்களுக்கு வேண்டும், தீர்மானமும் முடிவும் நீங்கள் மட்டும் தான நாங்கள் இல்லையா, அமைதியாய் வாழ்கின்றோம். அகோரப்படுத்தாதீர்கள், எங்கள் கடலில் மீன் வருதில்ல காற்றாடிதான் காரணம் போன்ற பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.*

*போராட்டத்தின் பின்னர் பொது மகஜர் வாசிக்கப்பட்டு, மன்னார் பிரதேச சபை தவிசாளரிடம் வழங்குவதற்காக பேரணியாக மக்கள் சென்றனர். அந்நேரத்தில் தவிசாளர் அங்கு இல்லாததால் சிறிது நேரம் அங்கு பதற்றம் ஏற்பட்டது.*

*மணல் அகழ்வு, காற்றாலை செயல்திட்ட நடவடிக்கைகளுக்கு முழுப் பொறுப்பும் பிரதேச சபை தவிசாளர் இஸ்ஸதீனே காரணம். அதனாலேயே அவர் ஓடி ஒளிந்து விட்டார் என்று மக்கள் இதன்போது குற்றஞ் சாட்டினர்.*

*அத்துடன், தவிசாளருக்கு எதிராக அவர்கள் கோஷங்களையும் எழுப்பினர். பின்னர் சபையின் உபதவிசாளரிடமோ, செயலாளரிடமோ தாம் மகஜரை கையளிக்க விரும்பவில்லை என்று கூறி அவர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். மன்னார் பேசாலை முழுவதும் கடைகள் மூடப்பட்டு பல நூறு மக்கள் போராட்டத்தில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.* (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஈழநாடு

ஓகஸ்ட் - 25 வியாழக்கிழமை
சுபகிருது வருடம் - ஆவணி 09
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : சதுர்த்தசி




**மேடம்**
நீங்கள் நினைத்த செயலைக் காலையில் முடித்துக் கொள்ளுங்கள். அதன்பின் இழுபறி உண்டாகும். உங்கள் மனம் வீண் சிந்தனைகளில் மூழ்கும். முயற்சியில் நெருக்கடியை சந்திப்பீர்கள்.

**இடபம்**
தடைகளை சந்தித்தாலும் எண்ணம் நிறைவேறும். எதிர்பார்த்தவற்றில் வெற்றி காண்பீர்கள். இரண்டு நாட்களாக இருந்த சிரமங்கள் இன்று விலகும். உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள்.

**மிதுனம்**
சிந்தித்து செயல்பட்டால் இழப்பை தவிர்க்கலாம். தொழிலில் எதிர்பார்த்ததை லாபம் குறையும். இன்று புதிய முதலீடுகள் செய்ய வேண்டாம். குடும்பத்தில் செலவு அதிகரிக்கும்.

**கடகம்**
முயற்சிகள் வெற்றியாகும். நீண்ட நாட்களாக நீங்கள் முயற்சித்தது இன்று நிறைவேறும். உங்கள் திறமை வெளிப்படும். பேச்சாற்றலால் வழக்கு வெற்றியாகும். பணியிடத்தில் செல்வாக்கு உயரும்.

**சிம்மம்**
செலவு அதிகரிக்கும். இருப்பதைக் கொண்டு திருப்தி கொள்வீர்கள். பண விஷயத்தில் கவனம் தேவை. குடும்பத்திற்காக செலவுகள் அதிகரிக்கும். நீண்ட நாள் எண்ணம் பூர்த்தியாகும்.

**கன்னி**
எதிர்பார்த்த வரவுகள் வந்து சேரும். திருமண வயதினருக்கு வரன் தேடிவரும். நிதிநிலை உயரும். மறுமண வாய்ப்புகள் தேடி வரும். எதிர் பாராத வருமானத்தினால் சங்கடங்கள் விலகும்.

**துலாம்**
குழப்பம் தீரும். புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். சுயதொழில் புரியும் எண்ணம் சிலருக்கு ஏற்படும். மறைமுக எதிரிகள் விலகிச் செல்வார்கள். உங்கள் செல்வாக்கு உயரும். செயலில் தெளிவு இருக்கும்.

**விருட்சிகம்**
இரண்டு நாட்களாக இருந்த சங்கடம் விலகும். உங்கள் செயல்கள் இன்று வெற்றியாகும். மனதில் ஏற்பட்ட குழப்பம் விலகும். சுபநிகழ்ச்சிகள் நடத்த திட்டமிடுவீர்கள். யோகமான நாள்.

**தனுசு**
செயல்களில் குழப்பம் ஏற்படும். நீங்கள் எதிர்பார்த்த ஒன்றில் இழுபறி உண்டாகும். பழைய பிரச்னை ஒன்று இன்று மீண்டும் தலையெடுத்து சங்கடத் தை உண்டாக்கும். பயணத்தில் சங்கடம் உண்டாகும்.

**மகரம்**
நீண்ட நாள் எண்ணம் நிறைவேறும். இனிய சம்ப வம் நடந்தேறும். எதிர்பார்த்திருந்த ஒன்றை இன்று அடைவீர்கள். நன்மையான நாள். தம்பதிகளுக்குள் ஏற்பட்ட பிரச்னை விலகும். வருமானம் கூடும்.

**கும்பம்**
தடைகள் விலகும். முயற்சியில் ஒன்று வெற்றி யாகும். நினைத்ததை சாதிப்பீர்கள். நீண்டநாள் எதிர்பார்ப்பு இன்று நிறைவேறும். எதிரிகள் உங் களை விட்டு விலகிச் செல்வார்கள்.

**மீனம்**
பணிபுரியும் இடத்தில் நெருக்கடி இருந்தாலும் எதிர்பார்ப்பு நிறைவேறும். பண வரவு உண்டு. பணியாளர்களுக்கு வேலைப்பளு கூடும். சிலர் மாற்றுப் பணிக்கு செல்ல வேண்டியதாக இருக்கும். உங்கள் முயற்சிகளில் இழுபறி உண்டாகும்.

# இனமானம் இல்லாதவர்களே தி. மு. க. அரசை விமர்சிப்பர்!

## முதல்வர் ஸ்டாலின்

கோவை, ஓக. 25

“அனைவரையும் அரவணைத்து அவர்களுக் காக நன்மை செய்யக்கூடிய அரசு தி. மு. க. அரசு. ” என கோவையில் நடந்த விழாவில் முதல் வர் ஸ்டாலின், “தன்மானம், இனமானம் இல் லாதவர்கள் தி. மு. க. அரசை விமர்சிகின்றனர்.” என்றும் சொன்னார்.

கோவை சென்ற தமிழக முதல்வர் அங்கு நிகழ்வு ஒன்றில் பேசியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், “இந்த அரசு மக்களுக்கான அரசாக உள்ளது. பல சாதனைகளை செய்து கொண்டி ருக்கிறது. சிலர் பெயருக்கு சில உதவிகளை செய்துவிட்டு கணக்கு காட்டுவார்கள். நாங்கள் கணக்கிட முடியாத நலத்திட்ட உதவிகளை செய்வது காட்டுகிறோம். அதுதான் தி. மு. க. அரசு.

நாட்டிலேயே அதிக முதலீடுகளை எடுத்து அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்கி கடந்த ஓராண்டு காலமாக தமிழ்நாடு முன்னேறி வருகி றது. அண்மையில் டில்லி சென்றேன். குடியரசுத் தலைவர், துணை குடியரசு தலைவரை சந்திக்க அவர்களை சந்தித்து வாழ்த்துகள் சொல்ல போனேன். அப்போது அவர்கள் தமிழகத்தின் வளர்ச்சியைப் பற்றி கேட்டார்கள்.

ஓர் உயர்ந்த கருத்து பரவலாக உள்ளது. நான் அதை உணர்ந்தேன். ஒருநாளிலே ஒரு மாதத் திலே இது பெற்றதல்ல. தந்தை பெரியார், பேரறி ஞர் அண்ணா, கலைஞரின் திட்டங்கள் வகுத்து தந்த பாதையிலே கழக ஆட்சி செல்வதால் பெற்றிருக்கக் கூடிய பாராட்டு ஆகும்.

தமிழக மக்களின் பாதை இனிமையாக இருக்க வேண்டும். அதற்காகதான் பாடுபடுகிறது கழக ஆட்சி. எந்த அளவிலும் மாறுபாடு இருக்காது என்பதை நான் உறுதியோடு தெரிவித்துக் கொள் கிறேன். பல்வேறு மாநில அரசுகளும் தமிழ்நாட் டின் திட்டங்களை உன்னிப்பாக கவனித்து தங்க ளுடைய மாநிலத்தில் இதை பின்பற்றி வருகிறார்கள்.

ஆனால், இங்கே இருக்கக்கூடிய சிலரால் இதனை தாங்கிக் கொள்ள முடியவில்லை. பொத் தாம் பொதுவாக எந்த வாக்குறுதியும் தி. மு. க. ஆட்சியை நிறைவேற்றவில்லை என சிலர் சொல் லிக்கொண்டே வருகிறார்கள். தன்மானம் இல்லா தவர்களிடம் தி. மு. க. ஆட்சி நல்ல பெயர் வாங்க வேண்டிய அவசியம் இல்லை. தன்மா னம், இனமானம் இல்லாதவர்கள் தி. மு. க. அரசை விமர்சிகின்றனர்.

அனைவரையும் அரவணைத்து அவர்களுக் காக நன்மை செய்யக்கூடிய அரசு தி. மு. க. அரசு. பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட பட்டியல் பழங்குடியின மக்களுக்காக அமைந் துள்ள அரசு, சிறுபான்மை சமூகம் எந்த சூழ்நிலை யிலும் சிதைந்து விடக்கூடாது என்கிற சகோதர மனம் கொண்ட அரசு, தி. மு. க. அரசு அனைவ ருக்குமான அரசாக செயல்பட்டுகிறோம் - என்றார்.

# தி. மு. க. கூட்டத்துக்கு ஆள்பிடிப்பதே பள்ளி கல்வித் துறையின் பணியா?

## பா. ஜ. க. தமிழக தலைவர் கேள்வி

சென்னை, ஓக. 25

தி. மு. க. கவின் கூட்டங்களுக்கு ஆள் பிடிப்பு வேலை செய்வதுதான் பள்ளிக் கல்வித் துறையின் முதன்மை பணியா? எனக் காட்டமாகக் கேள்வி எழுப்பியுள்ளார் பா. ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலை.

இது தொடர்பாக அவர் தனது ருவிட்டர் பக்கத்தில்,

“இன்று (நேற்று) கோவையிலும் ஓகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி ஈரோடு மாவட்டத்திலும் பங்கேற்கும் அரசு விழாவுக்கு மக்களை அழைத்து வர அனைத்து பள்ளி வாகனங்களைக் கொடுக்கு மாறு மாவட்டத்தின் முதன்மை கல்வி அலுவலர் அனைத்து பள்ளிகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பி யுள்ளாரென அறிகிறேன்.

மாற்று வாகனங்களில் மாணவர்கள் பயணிக்கும் போது அசம்பாவிதங்கள் நடந்தால் அதற்கு இந்த அரசு பொறுப் பேற்குமா? தி. மு. கவின் கூட்டங்களுக்கு ஆட்பிடிப்பு வேலை செய்வதுதான் பள்ளிக் கல்வித் துறையின் முதன்மை பணியா?” என்று கேள்வி எழுப்பியிருக்கிறார்.

# மாணவர்கள் தமிழிலேயே கையொப்பமிடவேண்டும்!

## பள்ளி கல்வித்துறை உத்தரவு

சென்னை, ஓக. 25

பள்ளிப் பதிவேடுகளில் ஆசிரியர்கள், மாண வர்கள் தங்கள் கையொப்பத்தையும் , பெயரின் முதல் எழுத்தையும் தமிழில் எழுதுமாறு பள்ளிக் கல்வித் துறை உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக பள்ளிக்கல்வி ஆணையர் முதன்மைக் கல்வி அதிகாரிகளுக்கு அனுப்பிய சுற்றறிக்கை:

பாடசாலை மாணவர்கள் இனி தமிழில் கையொப்பமிட்டால் முன்னெழுத்தையும் கட்டாயம் தமிழில் எழுத வேண்டும். பள்ளிக்கு மாணவர்கள் அளிக்கும் விண்ணப்பம், வருகைப் பதிவேடு பள்ளி, கல்லூரி முடித்து பெறுகின்ற சான்றிதழ் வரையில் அனைத்திலும் தமிழ் முன்னெ ழுத்து தமிழ்பெயருக்கு முன் வழங்க வேண்டும்.

முதல்கட்டமாக பள்ளி தகவல் மேலாண்மை இணையப்பக்கத்தில் (‘எமிஸ்’) பராமரிக்கப் படும் மாணவர்களின் 30 பதிவேடுகளில் மாணவர்கள்,பெற்றோர்கள் பாதுகாவலர் பெயர்கள் தமிழில் பதிவேற்றம் செய்யும் போது அதனை தமிழ் முதலெழுத்துடனேயே பதிவேற் றம் செய்ய வேண்டும். இது தொடர்பாக அனைத் துப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் உரிய அறிவுரைகள் வழங்க வேண்டும்.

# முதுமக்கள் தாழியில் பனை பொறி சின்னம்!

தூத்துக்குடி, ஓக. 25

தூத்துக்குடி மாவட்டம் ஆதிச்ச நல்லூரில் மத்திய தொல்லியல் துறை சார்பில் அக ழாய்வு பணிகள் நடைபெற்று வருகின்றன.

அகழாய்வில் 80இற்கும் மேற்பட்ட முது மக்கள் தாழிகள், தங்கத்தால் செய்யப்பட்ட நெற்றிப் பட்டலம், இரும்பு மற்றும் வெண் கலத்தால் செய்யப்பட்ட அம்புகள், வாள், ஈட்டி, சூலம், தொங்கவிட்டான் போன்ற ஏராளமான தொல்லியல் பொருட்கள் கிடைத்துள்ளன.

தற்போது வித்தியாசமான முதுமக்கள் தாழி மூடி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே கிடைத்த முதுமக்கள் தாழி மூடிகள் கூம்பு வடிவில் இருந்த நிலையில், தற்போது ஒரு முதுமக்கள் தாழியின் மூடி மட்டும் தட்டை வடிவில் உள்ளது. தட்டை வடிவிலான பகுதியில் பனை ஓலைப்பாய் அச்சு போன்ற பதிவுகள் காணப்படுகின்றன.

இது குறித்து தொல்லியல் ஆய்வாளர்கள் தீவிர ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். முதுமக்கள் தாழிகள் செய்யும் போது, அதனை காயவைப்பதற்கு பனை ஓலைப்பாய் அல்லது கோரைப்பாயின் மேல் வைத்திருக்கலாம் என கருதப்படுகிறது.

முதுமக்கள் தாழி மூடியில் காணப்படுவது பனை ஓலை பாயின் அச்சு என்றால் 3,000 ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் பனை ஓலைபொருட்களை பயன்படுத்தியிருப்பது உறுதியாகும் என தொல்லியல் ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

# கோட்டாபயவின் வருகையினால் ஜனாதிபதி ரணிலுக்கு தலைவலி!

## இந்திய ஊடகம் தகவல்

புதுடில்லி, ஓக. 25

**சீர்குலைந்துள்ள இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் கடினமான பணியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே எதிர்கொண்டுள்ளார். இந்தநிலையில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வருகை, அவருக்குத் தலைவலியை ஏற்படுத்தும் செயலாகவே இருக்கும் என்று இந்திய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.**

“சர்வதேச நாணய நிதியத்தின் பிணை எடுப்பு நடந்து கொண்டிருக்கின்றது. இதற்குச் சில காலங்கள் எடுக்கலாம்.

இதற்கு மத்தியில் இந்தியாவும் சீனாவும் வெவ்வேறு பக்கங்களில் இழுத்துக்கொண்டிருக்கின்றன.

இதன்போது இரண்டு பாரிய நாடுகளுக்கிடையில் கொழும்பு இறுக்கமான கயிறு நடையை நடத்துகின்றது.

இதனையெல்லாம் ரணில் விக்கிரமசிங்க சமாளித்துக் கொண்டிருக்கும்போது போதாக்குறைக்குக் கோட்டாபயவும் நாடு திரும்புகின்றார்.

கோட்டாபயவுக்காக ரணில் என்ன செய்தாலும் விமர்சிக்கப்படுவார்.

பொதுமக்களில் பெரும்பாலானோர் ரணிலைக் கோட்டாவின் மனிதராகவே கருதுகின்றனர்.

எனவே, ரணில் துக்கத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். ஆனால், அவர் ஒரு புத்திசாலி அரசியல்வாதி. இந்தத் தந்திரமான பிரச்சினையைத் துணிச்சலுடன் சமாளிப்பார்” என்று இந்திய ஊடகம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ)



## முல்லை விஸ்வநாதர் பாடசாலைக்கு அதிபர் நியமிக்க கோரி போராட்டம்

முல்லைத்தீவு, ஓக. 25

முல்லைத்தீவு மாவட்டத்துக்குட்பட்ட விசுவமடு பகுதியில் அமைந்துள்ள விஸ்வநாதர் பாடசாலையில் கடந்த ஒரு வருட காலமாக அதிபரொருவர் இல்லாமையால் தாம் கற்றல் நடவடிக்கையிலும் அபிவிருத்தி வேலைகளிலும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு விரைவாக புதிய அதிபரை நியமிக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

## வவுனியாவில் தாலிக்கொடி அறுப்பு; இராணுவ சிப்பாய் மடக்கிப்பிடிப்பு

வவுனியா, ஓக. 25

வவுனியாவில் தாலிக் கொடியை அறுத்து தப்பிச் சென்ற இராணுவ சிப்பாய் ஒருவர் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா கனகராயங்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் ஒருவரின் கழுத்தில் இருந்த தாலிக் கொடியை சிவில் உடையில் வந்த இராணுவ சிப்பாய் எனச் சந்தேகிக்கப்படும் ஒருவர் அறுத்துவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

போக்குவரத்து பொலிஸாரின் உதவியுடன் விரைந்து செயற்பட்ட அப்பகுதி பொதுமக்கள் சிப்பாயை துரத்திப் பிடித்தனர்.

கைதானவர் சிவில் உடையில் நடமாடிய இராணுச் சிப்பாய் என்பது உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், பொதுமக்களால் கனகராயன்குளம் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணையை வவுனியா கனகராயங்குளம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

## அரசாங்க நிறுவனங்களுக்கு சைபர் பாதுகாப்பு கொள்கை

### அனுமதி அளித்தது அமைச்சரவை

கொழும்பு, ஓக. 25

அரசாங்க நிறுவனங்களுக்கான தகவல் மற்றும் சைபர் பாதுகாப்புக் கொள்கைக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

அரச நிறுவனங்களில் டிஜிற்றல் முறைமையில் செயற்படும் போக்கு காணப்படுகின்ற போதிலும், அந்த நிறுவனங்களின் தகவல் மற்றும் தகவல் தொழில்நுட்ப முறைமைகள் மிகுந்த ஆபத்தில் உள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தகவல் மற்றும் இணையப் பாதுகாப்பில் போதிய கவனம் செலுத்தாதது, பழமையான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல் மற்றும் அரச துறையில் இணைய பாதுகாப்பு மேலாண்மைக்குத் தேவையான திறமையான பணியாளர்கள் பற்றாக்குறை ஆகியவை இதற்குக் காரணம்.

இந்த நிலைமையைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, இலங்கை கணினி அவசர நிலைத் தயார்நிலைக் குழு (SLCERT) 2019-2023 இலங்கையின் தேசிய தகவல் மற்றும் சைபர் பாதுகாப்பு மூலோபாயத்திற்கு இணங்கவும் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேசத் தகவல்களுக்கு இணங்கவும் அரச நிறுவனங்களுக்கான தகவல் மற்றும் இணையப் பாதுகாப்புக் கொள்கையை வரைந்துள்ளது.

2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் “திறமையான அதிகாரம்” என வரையறுக்கப்பட்டுள்ள அனைத்து அரச நிறுவனங்களாலும் இந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது கட்டாயம் என்று அரசாங்கம் கூறியது.

இதன்படி, அரச நிறுவனங்கள் தொடர்பில் உத்தேச தகவல் மற்றும் இணைய பாதுகாப்பு கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு தொழில்நுட்ப அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி சமர்ப்பித்த தீர்மானத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

## வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக செல்பவர்கள் விரைவாக கடவுச்சீட்டை பெற விசேட கருமபீடம்

கொழும்பு, ஓக. 25

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக செல்பவர்கள் விரைவாக தமது கடவுச்சீட்டை பெற்றுக்கொள்வதற்கு வசதியாக குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தில் விசேட கருமபீடமொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மற்றும் குடிவரவு - குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளுடன் கடந்த வாரம் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து இந்த விசேட கருமபீடத்தை ஸ்தாபிக்க வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார அனுமதி அளித்திருந்தார்.

முன்னோடித் திட்டங்களில் இருந்து பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில், வேலைவாய்ப்புக்காக வெளிநாடு செல்ல விரும்பும் அனைத்து இலங்கையர்களுக்கும் வசதியாக நேற்று முன் தினம் முதல் இந்த விசேட கருமபீடத்தை திறக்க தீர்மானிக்கப்பட்டது. (அ)

## மன்னார் மனித எச்சங்களை நீதவான் முன்னிலையில் பிரித்தெடுக்கும் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்!

மன்னார், ஓக. 25

அனுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட மன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதை குழியில் அகழ்வு செய்யப்பட்ட மனித எச்சங்கள் அனைத்தையும் மன்னார் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தி,மன்னார் நீதவான் முன்னிலையிலே பிரித்தெடுக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்ற கட்டளை ஆக்கப்பட்டுள்ளது என காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி வி.எஸ். நிறஞ்சன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணை நேற்று புதன்கிழமை மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

ஏற்கனவே அகழ்ந்து எடுக்கப்பட்ட மனித எச்சங்கள் அனுராதபுரம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில், மன்னார் நீதவான் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட கட்டளைக்கு அமைவாக அமெரிக்காவில் உள்ள புளோரிடா நிறுவனத்தில் “சி-14 காபன்“ பரிசோதனைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை வழக்கு தொடுநர் சார்பாக எடுத்திருந்த நிலையில் கடந்த தவணை அனுராதபுரம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த மனித எச்சங்களை பகுப்பாய்வு நடவடிக்கைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வழக்கு தொடுநர்கள் கோரிக்கை ஒன்றை முன்வைத்திருந்தனர்.

அனுராதபுரம் நீதவான் முன்னிலையில்,அவ்வாறான பிரிப்பு நடவடிக்கையை மேற்கொள்ளுவதற்கு அல்லது மன்னார் நீதவான் அதற்கு உறுதுணை புரிந்து அவரின் மேற்பார்வையின் கீழ் குறித்த நடவடிக்கையை மேற்கொள்ளுவதற்கு கட்டளை ஒன்றை வழங்குமாறும்,அதற்கான கட்டளை ஒன்று நேற்று புதன்கிழமை மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் வாசிக்கப்பட்டது.

ஏற்கனவே கொண்டு செல்லப்பட்ட மனித எச்சங்கள் அனைத்தையும் மன்னார் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தி, மன்னார் நீதவான் முன்னிலையில் பிரித்தெடுக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்ற கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது-என்றார். (அ)



## உலக புகைப்பட பிடிப்பாளர் தின நிகழ்வு நேற்று கிளிநொச்சியில்

கிளிநொச்சி, ஓக. 25

உலக புகைப்படப் பிடிப்பாளர் தின நிகழ்வு கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்றது. கிளிநொச்சி மாவட்ட படப்பிடிப்பாளர் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று முற்பகல் 10 மணியளவில், கூட்டுறவுச் சபை மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது, படப்பிடிப்பாளர் சங்கத்தினால் கௌரவிப்பும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன், கரைச்சி பிரதேச சபை தவிசாளர், படப்பிடிப்பாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ)

# சமன் பெரேரா கைது!

கொழும்பு, ஓக. 25

அபே ஜனபல கட்சியின் தலைவர் சமன் பெரேரா தங்காலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஜூன் மாதம் 5 ஆம் திகதி குடாவெல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபருக்கு அடைக்கலம் கொடுத்த சம்பவம் தொடர்பில் அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# பஸ்ஸில் பயணம் செய்த மூதாட்டி திடீர் மரணம்!

யாழ்ப்பாணம், ஓக. 25

யாழ்ப்பாணத்தில் இருந்து பஸ்ஸில் கொடிகாமம் சந்தைக்குத் தேங்காய் கொள்வனவு செய்யச் சென்ற மூதாட்டி திடீர் நெஞ்சு வலி காரணமாக உயிரிழந்துள்ளார்.

யாழ்., குருநகர் பகுதியைச் சேர்ந்த செபநாயகம் செல்வமலர் (வயது 64) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த மூதாட்டி நேற்று முன் தினம் பஸ்ஸில் பயணித்துக்கொண்டிருந்த வேளை, திடீரென நெஞ்சு வலி ஏற்பட்டு பஸ்ஸூக்குள் மயங்கிச் சரிந்துள்ளார்.

அதையடுத்து சாரதி, பஸ்ஸில் மூதாட்டியை சாவகச்சேரி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோதிலும் , அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று வைத்தியர்கள் அறிக்கையிட்டனர்.

மூதாட்டியின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சாவகச்சேரி வைத்தியசாலையில் வைக்கப்பட்டது. (அ)

# சர்வகட்சி அரசு உதயமாகும் சாத்தியம் குறைந்துவிட்டது!

## கூறுகின்றார் விமல் வீரவன்ஸ

கொழும்பு, ஓக. 25

**"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் சர்வகட்சி அரசு உதயமாவதற்கான சாத்தியம் குறைந்துவிட்டது." - இவ்வாறு தேசிய சுதந்தர முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ஸ எம்.பி. தெரிவித்தார்.**

சுயாதீன அணிகளுக்கிடையிலான விசேட கூட்டம் கொழும்பில் நேற்று முன் தினம் இரவு நடைபெற்றது. அந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே விமல் வீரவன்ஸ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-



நாடு தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமையை கருதியாவது, ஒன்றிணைந்து பயணிக்கும் மனநிலை நாட்டிலுள்ள அரசியல் கட்சிகளுக்கு இல்லை. ஜனாதிபதியும் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. எனவே, சர்வகட்சி அரசு சாத்தியப்படாது. தற்போதைய அரசு, தொடர்ந்து பயணிக்கவே முயற்சிக்கின்றது- என்றார். (அ)

# அக்கராயன் மகாவித்தியாலயத்துக்கு அதிபர் ஒருவரை நியமிக்கவேண்டும்

## மாணவர்கள், பெற்றோர் போராட்டம்

கிளிநொச்சி, ஓக. 25

கிளிநொச்சி அக்கராயன் மகாவித்தியாலயத்திற்கு அதிபர் ஒருவரை நியமிக்கக்கோரி மாணவர்கள், பெற்றோர் போராட்டம் ஒன்றை நேற்று மேற்கொண்டனர்.



கிளிநொச்சி தெற்கு வலயக்கல்வி பிரிவுக்குட்பட்ட அக்கராயன் மகாவித்தியாலயத்திற்கு, கடந்த 3 மாதங்களாக அதிபர் நியமிக்கப்படவில்லை.

கடமையிலிருந்த அதிபர் பாடசாலை பொறுப்புக்களிலிருந்து விலகியுள்ள நிலையில், புதிய அதிபர் நியமிக்கப்படவில்லை.

இதேவேளை, பிரதி அதிபரும் ஓய்வு நிலையை அடைந்துள்ள நிலையில், மேலதிக சேவைக்காக இணைக்கப்பட்டுள்ளார்.

42 ஆசிரியர்களையும், 800 மாணவர்களையும் கொண்ட குறித்த தேசிய பாடசாலையின் நிர்வாகச் செயற்பாடுகளை முன்னெடுக்கப்படவில்லை.

இந்த நிலையில், நிரந்தரமாக அதிபர் ஒருவரை நியமித்து தருமாறும், கல்விசார் விடயங்களை தடையின்றி மேற்கொள்ள நடவடிக்கை விரைந்து எடுக்குமாறும் நேற்று போராட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. (அ)

## எக்ஸ்பிரஸ் பேர்ள் தீ விபத்து;

# கழிவுப்பொருட்கள் அகற்ற 90 கோடி ரூபா ஒதுக்கீடு!

கொழும்பு, ஓக. 25

இலங்கையின் கடற்பரப்பில் கடந்த ஆண்டு தீப்பற்றி எரிந்த எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் இருந்து வெளியான கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கு 90 கோடியே 37 லட்சத்து 57 ஆயிரத்து 293 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த கழிவுப் பொருட்கள் மன்னாரில் இருந்து ஹம்பாந்தோட்டை கிரிந்த வரையான கடற்பரப்பில் பரவியதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# சட்டவிரோத மணல் அகழ்வு; வவுணதீவில் ஒருவர் கைது!

மட்டக்களப்பு, ஓக. 25

மட்டக்களப்பு - வவுணதீவு பொலிஸ் பிரிவில் அனுமதிப் பத்திர நிபந்தனையை மீறிமணல் அகழ்வில் ஈடுபட்ட உழவு இயந்திரத்துடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.

தாண்டியடி பகுதியில், அனுமதிப்பத்திர சட்ட விதிமுறைகளை மீறி உழவு இயந்திரப் பெட்டியில் மணல் ஏற்றியபோது பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட நபரையும் உழவு இயந்திரத்தையும் மட்டக்களப்பு நீதிமன்றில் ஆஜர்படுத்தி சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டவுள்ளதாகவும் வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# கடற்றொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்க ஜனாதிபதி ரணில் இணக்கம்

கொழும்பு, ஓக. 25

கடற்றொழிலாளர்களின் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்புக்கு விரைவில் ஏற்பாடு செய்யப்படும் எனத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மண்ணெண்ணெயின் விலை அதிகரிப்பைக் கடற்றொழிலாளர்கள் சமாளிக்கும் வகையில் நிவாரணம் வழங்குவதற்கும் ஜனாதிபதி இணக்கம் தெரிவித்திருக்கின்றார் எனவும் கூறினார்.

ஜனாதிபதியின் ஒருங்கிணைப்பாளரின் ஏற்பாட்டில் நாடளாவிய ரீதியில் உள்ள கடற்றொழில் சங்கங்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பு நேற்று முன் தினம் இடம்பெற்றிருந்தது.

இந்தச் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த கடற்றொழில் சங்கங்களின் பிரதிநிதிகள், தமது தொழில் செயற்பாடுகளுக்குத் தேவையான மண்ணெண்ணெய் மற்றும் டீசல் போன்றவை தாராளமாகக் கிடைக்க வேண்டும் என்று வலியுறுத்தியதுடன், மண்ணெண்ணெயின் விலையேற்றம் தொடர்பிலும் மீள்பரிசீலனை செய்யப்படவேண்டும் என்றும் கேட்டதுடன், ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை முன்வைத்திருந்தனர்.

இந்நிலையில், நேற்று முன் தினம் மாலை, குறித்த விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதிக்கும் கடற்றொழில் அமைச்சருக்கும் இடையிலான கலந்துரையாடலில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதன்போது கடற்றொழிலாளர்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி, அவை தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைக் கேட்டுக்கொண்டார்.

அதேவேளை, அண்மைய நாட்களில் அதிகரித்துள்ள இந்தியக் கடற்றொழிலாளர்களின் எல்லை தாண்டிய சட்டவிரோத தொழில் நடவடிக்கைகள் தொடர்பாக இந்திய மத்திய மற்றும் மாநில அரசுகளுடன் கலந்துரையாடி தீர்க்கமான முடிவைக் காண்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாகவும், விரைவில் இந்தியக் கடற்றொழிலாளர் விவகாரத்திற்கு தீர்வு காணப்படும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். (அ)

# புனர்வாழ்வு நிலையத்தில் நேற்றுப் பதற்ற நிலைமை

கொழும்பு, ஓக. 25

போதைப்பொருள் அடிமையானவர்களுக்கான சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையமாக இயங்கிவரும் பொலனறுவை-சேனாபுர புனர்வாழ்வு நிலையத்தில் பதற்றமான நிலைமை ஏற்பட்டது.

இதனையடுத்து, பொலிஸாரும் இராணுவத்தினரும் குறித்த இடத்துக்கு வரவழைக்கப்பட்டதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

போதைப்பொருள் பாவனைக்காக கைது செய்யப்படுபவர்களுக்கு ஒரு வருடம் புனர்வாழ்வு அளிக்கப்படுவதோடு, அதில் முதல் ஆறு மாதங்களுக்கு அவர்கள் கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.

பின்னர், இந்த கைதிகள் தொழில் பயிற்சிக்காக சேனாபுர தொழிற்பயிற்சி நிலையத்திற்கு அழைத்துவரப்படுவது வழக்கமாகும்.

எவ்வாறாயினும் நேற்று முன் தினமும் நேற்றும் சிலர் பொருளாதார நெருக்கடி காரணமாக வீட்டுக்குச் செல்ல விரும்புவதாக கூறி வன்முறையில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது, ஒரு குழுவினர் தப்பிச்செல்ல முயன்று போராட்டத்தை ஆரம்பித்ததாகவும் கூறப்பட்டது.

அண்மையில் கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களில் ஒருவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கோழி இறைச்சி விலையில் வீழ்ச்சி

## முட்டைக்கு தட்டுப்பாடு

கொழும்பு, ஓக. 25

சந்தையில் கோழி இறைச்சியின் விலையில் வீழ்ச்சியும், முட்டைக்கு தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை கோழிப் பண்ணையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன் தலைவர் ஆர்.எம். ரத்நாயக்க கூறுகையில், முட்டைக் கட்டுப்பாட்டு விலையில் ஏற்பட்டுள்ள சிக்கல் காரணமாக முட்டை உற்பத்தி செய்யும் விவசாயிகள் கோழிகளை விற்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக சந்தையில் ஒரு கிலோ கோழி இறைச்சியின் விலை 700 ரூபா வரை குறைந்துள்ளது-என்றார்.

சந்தையில் முட்டையின் பல்வேறு விலைகள் காரணமாக, முட்டைக்கான கட்டுப்பாட்டு விலையை நிர்ணயித்து அரசாங்கம் அண்மையில் வர்த்தமானியை வெளியிட்டது.

இதற்கு முட்டை உற்பத்தியாளர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்ததையடுத்து, வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

சில உடன்பாடுகள் ஏற்பட்டாலும், அரசாங்கம் நிர்ணயித்த கட்டுப்பாட்டு விலைக்கு சந்தையில் முட்டை விற்பனை செய்யப்படுவதில்லை என நுகர்வோர் குற்றம் சாட்டி வருகின்றனர். (அ)

# வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் கிளிநொச்சியில் ஒருவர் கைது

கிளிநொச்சி, ஓக. 25

கிளிநொச்சி பகுதியில் 560 வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் ஒருவர் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி 155ஆம் கட்டைப் பகுதியில் விசேட அதிரடிப்படையினரால் நேற்று முன்தினம் இவர் கைது செய்யப்பட்டார்.

அம்பா கோட்டே, கொங்கல்ல, பல்லேகல பகுதியை சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டு கிளிநொச்சி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ)

# இலங்கைக்கு நிதியுதவி வழங்க உலகத் தமிழர் பேரவை தயார்!

## தென்னிலங்கை ஊடகம் தகவல்

கொழும்பு, ஓக. 25

**நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்கான அந்நிய செலாவணியை வழங்குவதற்குத் தயாராக இருப்பதாக, உலகத் தமிழர் பேரவை தெரிவித்துள்ளது என தென்னிலங்கை ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.**

இதற்கான சட்டஏற்பாடுகளை பாராளுமன்றில் நிறைவேற்றுமாறு அந்த அமைப்பின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் தெரிவித்துள்ளதாகவும்-

முன்னைய அரசாங்கத்தினால் உலகத் தமிழர் பேரவை உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் மற்றும் தனி நபர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை அண்மையில் நீக்கப்பட்டது. ஜெனிவா மனித உரிமை பேரவையின் மாநாடு அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில், அதனைச் சமாளிக்கும் நோக்கிலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தாம் கருதுவதாக அவர் குறிப்பிட்டார் எனவும் குறித்த ஊடகம் தெரிவித்துள்ளது.

மேலும் அந்த அமைப்பின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் கருத்து வெளியிடும்போது, இலங்கையின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

2016ஆம் ஆண்டு தென்னிலங்கையில் வெள்ளம் ஏற்பட்டிருந்தபோது, உலகத் தமிழர் பேரவை சிங்கள மக்களுக்கு பெரும் உதவிகளை வழங்கியது.

ஆனால் கடந்த ஆண்டு இலங்கையில் கோவிட் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சுவாச கருவிகளை வழங்கியபோது, நாங்கள் தடை செய்யப்பட்ட அமைப்பு என்பதால் அதனை பெற்றுக் கொள்ள இலங்கை அதிகாரிகள் மறுத்தார்கள். இதனால் பல மரணங்கள் சம்பவித்தன.

அதற்கு அதிகாரிகள் பொறுப்பு கூறவேண்டும். இலங்கையில் புலம்பெயர் அமைப்புகள் மீது விதிக்கப்பட்ட தடை காரணமாக வருடாந்தம் 300 மில்லியன் டொலர்கள் அளவில் அந்நிய செலாவணி இழப்பு ஏற்பட்டுள்ளது.

இலங்கையை பூர்வீகமாக கொண்ட பலர் ஜேர்மனி போன்ற நாடுகளில் பில்லியனியர்களாக இருக்கிறார்கள்.

அவர்கள் இலங்கையில் பல பில்லியன் டொலர்களை முதலீடு செய்ய முடியும்.

அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவேண்டும் என்று கூறினார் எனவும் குறித்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (அ)

# மதுபோதையில் பயணிகள் பஸ்ஸை செலுத்திய இ.போ.ச. சாரதி சிக்கினார்

கொழும்பு, ஓக. 25

மதுபோதையில் பயணிகள் பஸ்ஸை செலுத்திச் சென்ற இலங்கை போக்குவரத்து சபையின் சாரதி மானிப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 7 மணியளவில் காரைநகர் நோக்கிப் பயணிகளை ஏற்றிக்கொண்டு பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்ஸின் சாரதி மது போதையில் காணப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் மானிப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை தொடர்ந்து, மானிப்பாய் பொலிஸார் சண்டிலிப்பாய், கட்டுடைப் பகுதியில் குறித்த பஸ்ஸை மறித்து சாரதியை பரிசோதித்துள்ளனர்.

இதன்போது சாரதி மது போதையில் இருந்தமையை உறுதி செய்ததை தொடர்ந்து அவரைக் கைது செய்தனர்.

பின்னர் பிறிதொரு சாரதியை வரவழைத்து பஸ்ஸை சேவையில் ஈடுபடுவதற்கு அனுப்பி வைத்தனர். (அ)

# வர்த்தகர் சுட்டுக்கொலை!

கொழும்பு, ஓக. 25

கம்பஹா, பட்டபொத்த பகுதியில் வர்த்தக நிலைய உரிமையாளர் ஒருவர் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்தவர்களே துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான குறித்த நபர் கம்பஹா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். எனினும், அவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் இடம்பெறுகின்றன. (அ)

# 124 இலங்கையர் தொழிலுக்காக தென் கொரியாவுக்குப் பயணம்

கொழும்பு, ஓக். 25

124 இலங்கையர்கள் கொண்ட குழு தொழில்வாய்ப்புக்களின் நிமிர்த்தம் நேற்று முன்தினம் இரவு தென் கொரியாவுக்குச் சென்றது. இது நாட்டில் வேலைக்காகச் செல்லும் 732 ஆவது குழுவாகும்.

இலங்கையின் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் உற்பத்தித் துறையில் வேலைகளுக்காகப் புறப்பட்டுச் சென்றுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

"உற்பத்தித் துறையில் அதிகளவிலான தொழிலாளர்களை வேலைக்கு அனுப்ப முடியும் என்ற போதிலும், கடந்த காலங்களில் மீன்பிடித் துறையில் வேலை வாய்ப்புகள் குறைவாகவே இருந்தன. கொரிய மனிதவளத் துறையின் நாட்டு இயக்குநர் லீயுடன் இது குறித்து விவாதித்தேன்" என்று அமைச்சர் கூறினார். (அ)

# மக்களின் வாழ்க்கையை சவாலுக்குள் தள்ளியுள்ளது மின் கட்டண அதிகரிப்பு

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 25

"மின்சாரக் கட்டணம் பாரிய அளவில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ள நிலையில் மக்களின் வாழ்க்கையும் பாரிய சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதாக மாறியுள்ளது."

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நேற்று முன் தினம் மின்சார பாவனையாளர் சங்கத்தின் விசேட சந்திப்பில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்நாட்டிலுள்ள சாதாரண மக்களின் வாழ்வுரிமையைப்



போன்று பாவனையாளர்களின் உரிமைகளையும் பாதுகாப்பதற்கு எதிர்க்கட்சி என்ற வகையில் முன்நிற்கின்றோம்.

நாட்டில் ஜனநாயக ரீதியில் போராட்டம் நடைபெற்றது. வீதியில் போராட்டம் நடத்துவது கூட பயங்கரவாதச் செயலாக கருதப்படுகின்ற காலகட்டமாக இருக்கின்றது.

கூட்டங்கள், அமைதியான போராட்டம் மற்றும் பேச்சுச் சுதந்திரம் ஆகியவை அரசமைப்பில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆனாலும், நாட்டு மக்களை மிகப்பெரிய ஆபத்தில் தள்ளும் பல கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இது தொடர்பில் சர்வதேச சமூகம் மற்றும் அமைப்புக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வரும் நிலையில், எதிர்வரும் காலங்களில் சர்வதேச நிவாரணங்கள் கூட கிடைக்காமல் போகலாம். இதனால் நாட்டு மக்கள் பெரிதும் பாதிக்கப்படலாம்.

அரசு அப்பட்டமாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மீறி அடிப்படை உரிமைகளையும் மீறுகின்றது-என்றார்.(அ)

# ஜீவந்த பீரிஸிற்கு பிணை!

கொழும்பு, ஓக. 25

"கோட்டா கோ கம" போராட்டத்தில் தீவிரமாக பங்குபற்றிய அருட்தந்தை ஜீவந்த பீரிஸ், தனக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மூன்றாவது வழக்கு தொடர்பில் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் சரணடைந்த நிலையில் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டார்.

மோதரை பொலிஸ் பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தொடர்பில் அருட்தந்தை ஜீவந்த பீரிஸை 500,000 ரூபா சரீரப் பிணையில் விடுவிக்குமாறு நீதவான் திலின கமகே உத்தரவிட்டுள்ளார்.

அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் ஜனாதிபதி செயலகத்துக்குள் பலவந்தமாக பிரவேசித்து ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

காலி முகத்திடலில் இடம்பெற்ற போராட்டங்களின் இரு வேறு சம்பவங்கள் தொடர்பில் கோட்டை பொலிஸார் மற்றும் கொம்பனித்தெரு பொலிஸார் தனித்தனியான பி அறிக்கைகளையும் அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் மீது தாக்கல் செய்திருந்தனர்.

காலி முகத்திடலில் இடம்பெற்ற போராட்டங்கள் தொடர்பில் பொலிஸாரும் முப்படையினரும் தம்மை கைது செய்வதைத் தடுக்குமாறு உத்தரவிடுமாறு கோரி ஜீவந்த பீரிஸ் உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றையும் தாக்கல் செய்துள்ளார்.

ஜனாதிபதி சட்டத்தரணி ரியென்சி அரசகுலரத்ன மற்றும் சட்டத்தரணி உதார முஹந்திரம்கே ஆகியோர் அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் சார்பில் முன்னிலையாகியிருந்தனர். (அ)

# பிரதமர் மோடி இப்படிப் பேசியிருந்தால்...

- ப.சிதம்பரம்



எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் இந்தியா சுதந்திரம் பெற்று விழித்தெழுந்தது. நாட்டின் முதலாவது பிரதமர் ஜவாஹர்லால் நேருவின் வார்த்தைகளில் சொல்வதானால், “விதியுடன் நாம் ஓர் ஒப்பந்தம்” செய்துகொண்டு சுதந்திர நாட்டின் பயணத்தைத் தொடங்கினோம்.

நம்முடைய அரசமைப்புச் சட்டத்தைப் பாதுகாக்க அடுத்தடுத்து வந்த அரசுகள் தங்களால் இயன்றதைச் செய்தன் நம்முடைய இறையாண்மையையும் பிரதேச ஒற்றுமையையும் தற்காத்துக் கொள்ள அவை இயன்றதைச் செய்தன. நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டிவிடவும் நடவடிக்கைகள் எடுத்தன.

நம் நாட்டு மக்களுக்கு மருத்துவ சுகாதாரம், வேலைவாய்ப்பு, வாழ்வாதாரம் மேம்படுவதற்கான உதவிகள் என்று அனைத்தையும் வழங்கின. அந்த நடவடிக்கைகளில் தோல்விகளும் லட்சியத்தை விட்டு விலகிய செயல்களும் கூட உண்டு. அப்படி எப்போதெல்லாம் தடுமாறி வீழ்ந்தோமோ அப்போதே சுதாரித்து எழுந்து பயணத்தைத் தொடர்ந்து வந்திருக்கிறோம்.

தவறுகளைத் திருத்திக்கொள்ளவும் தோல்விகளிலிருந்து மீளவும் நமக்கு ஜனநாயகமே உதவியது. அதனால்தான் ஜனநாயகப் பாதையை விட்டு விலகாமல் தொடர்ந்து நடைபோடுவோம் என்று ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் 15ல் நம்முடைய உறுதிப்பாட்டைப் புதுப்பித்துக்கொள்கிறோம்.

### உண்மையை சொல்வதற்கான நேரம்

தில்லி செங்கோட்டையின் கொத்தளத்திலிருந்து எட்டு முறை (ஆண்டுகள்) இதுவரை உரையாற்றியிருக்கிறேன். நாட்டின் பிரதம மந்திரியாகவும் ஆளுங்கட்சியின் தலைவனாகவும் பேசியிருக்கிறேன்.

இந்த முறை, வேறு வகையில் பேச விரும்புகிறேன். நாட்டின் தலைவன் என்ற உரிமையில் பேசும் அதேவேளையில், உங்களுடைய துயரங்களைப் புரிந்துகொண்ட, கவலைகளில் பங்கெடுத்துக்கொண்ட, நம்பிக்கைகளையும் லட்சியங்களையும் நிறைவேற்ற விரும்பும் - சக குடிமகனாகவும் பேச விரும்புகிறேன். நான் உண்மைகளைப் பேசப் போகிறேன், சில வகைகளில் அவை மிகுந்த வலியை ஏற்படுத்தக்கூடியதாகவும் இருப்பதால் சகித்துக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த எட்டு ஆண்டுகளில் என்னுடைய அரசு நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்கும் பல தவறுகளைச் செய்திருக்கிறது. உயர் மதிப்பு ரூபாய் நோட்டுகளைப் பணமதிப்பிழப்புக்கு உள்படுத்தினால் கறுப்புப் பணம் ஒழிந்துவிடும், ஊழல் குறையும், பயங்கரவாதம் முடிவுக்கு வந்துவிடும் என்று எனக்கு ஆலோசனைகள் கூறப்பட்டன.

அப்போது இந்திய ரிசர்வ் வங்கியின் கவர்னராக இருந்தவர், இப்படிச் செய்ய வேண்டாம் என்று விடுத்த எச்சரிக்கையை நான் கேட்கவில்லை. பணமதிப்பிழப்பு நடவடிக்கையால் நடைபெறும் என்று எதிர்பார்த்த ஒரு நோக்கமும் நிறைவேறவேயில்லை. அதற்கு மாறாக பணமதிப்பிழப்பு நடவடிக்கையால், பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிய பின்னடைவு ஏற்பட்டது, ஆயிரக்கணக்கானோர் வேலைகளை இழந்தனர், சிறு - குறு - நடுத்தரத் தொழில் பிரிவுகள் லட்சக்கணக்கில் மூடப்பட்டன.

அடுத்து நான் செய்த தவறு பொது சரக்கு - சேவை வரிச் சட்டங்களை மிக மோசமாக தயாரித்து, அவசர கோலத்தில் நிறைவேற்றியது. அப்போதைய முதன்மைப் பொருளாதார ஆலோசகர், எதிர்க்கட்சித் தலைவர்கள் ஆகியோர் - மிதமான, ஒரே விகித சரக்கு சேவை வரியை விதியுங்கள் என்று கூறிய ஆலோசனையைக் கேட்டிருக்கலாம் என்று இப்போது தோன்றுகிறது.

ஒன்றிய அரசிடம் யதேச்சாதிகாரமான அதிகாரங்களைக் குவித்து, ஒன்றிய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையில் அவநம்பிக்கையை ஏற்படுத்தி, தொழில் - வர்த்தக சமூகங்களிடையே மிகப்பெரிய எதிர்ப்புணர்வை உண்டாக்கி, விலைவாசி உயர்வையும் கடுமையாக உயர்த்திவிட்ட ஜிஎஸ்டி சட்டத்தால் இப்போது பொறியில் சிக்கிக்கொண்டுவிட்டோம். இனி இறங்கினாலும் ஆபத்து என்ற வகையில் புலி மீது சவாரி செய்கிறேன் என்பதை உணர்கிறேன். புகழ்பெற்ற பொருளாதார நிபுணர்களையும் எதிர்க்கட்சித் தலைவர்களையும் ஆலோசனை கலந்து ஜிஎஸ்டி வரிச் சட்டத்தின் அடுத்த தலைமுறையைக் கொண்டுவந்து, இப்போதுள்ள சட்டத்துக்கு விடை கொடுக்க விரும்புகிறேன்.

### தவறுகளை விலக்கிக்கொள்வேன்

வேறு சில தவறுகளையும் செய்தேன், ஆனால் எதிர்ப்புகளுக்குப் பிறகு என்னுடைய நடவடிக்கைகளைத் திரும்பப் பெற்றேன். நிலம் கையகப்படுத்தல் சட்டத்தை நீர்த்துப்போகச் செய்ய மேற்கொண்ட முயற்சியை உரிய காலத்தில் கைவிட்டுவிட்டேன். வேளாண் துறை தொடர்பாக கொண்டுவந்த மூன்று சட்டங்களும் அடிப்படையிலேயே தவறானவை என்பதை உணர்ந்தேன், அவற்றைத் திரும்பப் பெற்றது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன்.

> நம் நாட்டு மக்களுக்கு மருத்துவ சுகாதாரம், வேலைவாய்ப்பு, வாழ்வாதாரம் மேம்படுவதற்கான உதவிகள் என்று அனைத்தையும் வழங்கின. அந்த நடவடிக்கைகளில் தோல்விகளும் லட்சியத்தை விட்டு விலகிய செயல்களும் கூட உண்டு. அப்படி எப்போதெல்லாம் தடுமாறி வீழ்ந்தோமோ அப்போதே சுதாரித்து எழுந்து பயணத்தைத் தொடர்ந்து வந்திருக்கிறோம்.

எப்போது வேண்டுமானாலும் வெடித்து சிதறடிக்கக்கூடிய வெடிமருந்து கிடங்கைப் போல வேறு சில தவறுகளும் உள்ளன. தேசிய மக்கள் தொகைப் பதிவேடு (என்பிஆர்), குடியுரிமை திருத்தச் சட்டம் (சிஏஏ), சமீபத்தில் அறிவித்த - ராணுவத்துக்கு ஆள் சேர்ப்பது தொடர்பான - அக்னிபத் திட்டம் ஆகியவையே அவை. மக்களை மதரீதியாக பிளவுபடுத்தக்கூடிய, மோதல்களை வளர்க்கக்கூடிய இவற்றையும் வெகு விரைவிலேயே விலக்கிக் கொண்டுவிடுவேன் என்று உங்களுக்கு உறுதியளிக்கிறேன்.

சகோதர குடிமக்களே, நான் இப்போது மேலும் ஒரு வாக்குறுதியை அளிக்கிறேன், சில வட்டாரங்களில் தரும் அழுத்தங்களுக்கு இரையாகி வழிபாட்டு இடங்கள் தொடர்பான சட்டத்தின் வரம்பைக் குறுக்கிவிட மாட்டேன், அனைத்து மதத்தவருக்கும் பொதுவான சிவில் சட்டங்களைக் கொண்டுவர மாட்டேன். நாடாளுமன்றத்திலும் சட்டமன்றங்களிலும் பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இடங்களை ஒதுக்கும் மகளிர் இட ஒதுக்கீடு சட்டத் திருத்த மசோதாவை மீண்டும் கொண்டுவருவேன்.

ஜிஎஸ்டி வரி விகிதங்களைக் குறைக்க உத்தரவிடுவேன் என்று வாக்குறுதி அளிக்கிறேன். மாநிலங்களுடன் பகிர்ந்துகொள்ள முடியாத பெட்ரோல் - டீசல் கூடுதல் வரிவிதிப்பை (செஸ்) கைவிடுவேன், சமையல் எரிவாயு விலையைக் குறைப்பேன் என்றும் உறுதியளிக்க விரும்புகிறேன்.

### உறவுக்குப் பாலம் அமைப்பேன்

கடந்த காலங்களில் நானும் என்னுடைய அமைச்சரவை சகாக்களும் என்னுடைய அரசால் தொடங்கப்பட்ட பல முன் முயற்சிகளுக்கு உரிமை கொண்டாடியிருக்கிறோம். வெளிநாடுகளில் பதுக்கிவிட்ட கறுப்புப் பணத்தைக் கண்டுபிடித்து இந்தியா கொண்டு வந்து ஒவ்வொருவரின் வங்கிக் கணக்கிலும் 15 லட்சம் ரூபாயைப் போடுவேன் என்று தேர்தல் சமயத்தில் வாக்குறுதி அளித்தேன். ஆண்டுதோறும் 2 கோடி புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப் படும் என்றேன்.

இவையெல்லாம் தேர்தல் காலத்தில் வாக்குகளைக் கவர்வதற்காகக் கூறப்படும் வாக்குறுதிகள். இதே இடத்தில் நின்றுகொண்டு, 2022 முதல் விவசாயிகளின் வருமானம் இரட்டிப்பாகிவிடும் என்று பேசியிருக்கிறேன் வீடில்லாத ஒவ்வொரு ஏழைக் குடும்பத்துக்கும் ஒரு வீட்டு கட்டித் தருவோம் என்றேன் ஆண்டுக்கு ஐந்து லட்சம் கோடி அமெரிக்க டாலர் மதிப்புக்கு இந்தியப் பொருளாதாரத்தை உயர்த்துவேன் என்றேன். இவையெல்லாம் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் முயற்சிகள் என்ற உண்மையை ஒப்புக்கொள்கிறேன். திறந்த வெளி மலம் கழிப்பிலிருந்து இந்தியா விடுதலை பெற்றுவிட்டது என்றும் எல்லா வீடுகளுக்கும் மின்சார இணைப்பு வழங்கப்பட்டுவிட்டது என்றும்கூட பேசியிருக்கிறேன்.

இவையெல்லாமும் உண்மையல்ல. கிராமப்புறங்களில் 25.9 வீதம், நகர்ப்புறங்களில் 6 வீதம் வீடுகளுக்கு கழிப்பறைகளே கிடையாது என்று ‘தேசிய குடும்ப சுகாதார ஆய்வறிக்கை-5’ தெரிவிக்கிறது. ஆய்வு மேற்கொள்ளப்பட்ட 30 மாநிலங்களில் ஒன்றுகூட, திறந்தவெளி மலம் கழிப்புப் பழக்கத்திலிருந்து முழுமையாக விடுபடவில்லை. ‘ஸ்மார்ட் பவர் இந்தியா’ நிறுவனமும் ‘நிதி ஆயோக்’ அமைப்பும் 2020இல் நடத்திய ஆய்வில், மக்கள்தொகையில் 13 வீதம் பேரின் வீடுகளுக்கு மின் சார இணைப்பே இல்லை அல்லது மின்சாரத் தொகுப்பு மூலம் அவர்கள் பயனாளிகளாக இல்லை என்று தெரியவருகிறது. முதல்வர்களுடன் ஆலோசனை கலந்துவிட்டு, அனைத்து வீடுகளுக்கும் மின்சார இணைப்பை வழங்குவதற்கான புதிய இலக்கை அறிவிப்பேன் என்று உறுதி அளிக்கிறேன்.

இப்போது என்னுடைய மிகப் பெரிய கவலை எதுவென்றால் மதரீதியாக மக்கள் பிரிந்துகிடப்பது தான். அனைத்து மக்களும் - அதிலும் குறிப்பாக மகளிர், பட்டியல் இனத்தவர், முஸ்லிம்கள், பழங்குடிகள் தாங்கள் பாதுகாப்பாகவும் நலமாகவும் இருப்பதாக நினைக்காவிட்டால் - எந்த நாடாக இருந்தாலும் முன்னுக்கு வர முடியாது, வளர்ச்சியின் பலன்களை அனுபவிக்கவும் முடியாது.

என்னுடைய கட்சியும் அரசும் பாரபட்ணசமான போக்கைக் கைவிட வேண்டும் என்பதை ஏற்கிறேன். மக்களைப் பிளவுபடுத்தும் மேடைப் பேச்சுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும், வெறுப்பை ஊக்குவிப்போர் தண்டிக்கப்பட வேண்டும், இந்தியாவின் அனைத்துப் பிரிவு மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வேறுபட்ட கலாச்சாரங்களும் பன்மைத்துவமும் கொண்டாடப்பட வேண்டும்.

சகோதர, சகோதரிகளே! நம்முடைய பயணம் மிகவும் நீண்டது. இந்த மாபெரும் நாட்டுக்கும் அனைத்து மக்களுக்கும் சேவை செய்வேன் என்ற உறுதிமொழியை எனக்கு நானே வழங்கிக்கொள்கிறேன். இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்கப் பயணத்தில் என்னுடன் இணைந்துகொள்ளுமாறு உங்கள் அனைவருக்கும் வேண்டுகோள் விடுக்கிறேன்.

# மூன்று மாம்பழங்களை 10 லட்சத்துக்கு ஏலம் எடுத்த வவுனியா தமிழர்!

இலங்கையில் மூன்று மாம்பழங்கள் மற்றும் ஒரு மாலை ஆகியவற்றை 10 லட்சம் ரூபாவிற்கு ஏலத்தில் பெற்றுக்கொண்ட சம்பவம் பதிவாகியுள்ளது.

வவுனியா மாவட்டம் கணேசபுரம் பகுதியிலுள்ள சித்தி விநாயகர் ஆலயத்தில் அலங்கார திருவிழா உற்சவம் நடைபெற்று வருகின்றது.

இதன்படி, இந்த திருவிழா உற்சவத்தின் விசேட பூஜைகள் நேற்று முன்தினம் நடைபெற்றன.

இதன்போது, விநாயகருக்கு மாம்பழங்கள் மற்றும் மாலை அணிவித்து, விசேட பூஜைகள் நடை பெற்றன.

விநாயகருக்கு பூஜைக்காக வைக்கப் பட்டிருந்த மாம்பழங்கள் மற்றும் மாலைகள் இதன்போது ஏலத்தில் விற்பனை செய்யப் பட்டன.





இவ்வாறு ஏலத்தில் விற்பனை செய்யப் பட்ட மாம்பழங்கள் மற்றும் மாலையை ஏலத்தில் கொள்வனவு செய்வதற்காக பல ரும் முன்வந்துள்ளனர்.

குறிப்பாக வெளிநாடுகளிலிருந்து வருகைத் தந்திருந்த பலர், இந்த ஏல விற்பனையில் கலந்து கொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது, குறித்த மாம்பழங்கள் மற்றும் மாலை ஆகியன 9 லட்சத்து 70 ஆயிரம் ரூபா வரை ஏலத்தில் கோரப் பட்டுள்ளது.

இந்த நிலையில், கணேசபுரம் பகுதியில் வசிக்கும் மோகன் குமார் குடும்பம் இறுதியாக 10 லட்சம் ரூபாவிற்கு ஏலத்தை கோரியுள்ளனர்.

இவ்வாறான நிலையில், குறித்த மாம்பழங்கள் மற்றும் மாலை ஆகியன 10 லட்சம் ரூபாவிற்கு இறு தியாக ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டுள்ளது. 10 லட்சம் ரூபாவிற்கு மாம்பழங்கள் மற்றும் மாலை ஆகி யவற்றை ஏலத்தில் பெற்றுக் கொண்ட மோகன்குமார், நம்மோடு பேசினார்.

“கணேசபுரம் - சித்திவிநாயகர் ஆலயத்தில் விநாயகருக்கு மாம்பழங்கள் படைக்கப்பட்டன. மாம்பழங்கள் விநாயகருக்கு விசேசமானவை. அந்த மாம்பழங்களை ஏலத்தில் வைத்தார்கள். மூலஸ்தானத்தில் வைத்து, பிறகு எழுந்தருளி பிள்ளையாரிடம் வைத்தார்கள். எழுந்தருளி பிள்ளையார் கோவிலை சுற்றி வந்ததன் பிறகு, பிள்ளையாருக்கு அணிவித்த பெரிய ஆண்டாள் மாலையொன்றும், இந்த மூன்று மாம்பழத்தையும் ஏலத்தில் விட்டார்கள்.

இந்த ஏலத்தை மூன்று நான்கு பேர் போட்டியாக கேட்டுக்கொண்டிருந்தார்கள். நாங்களும் அந்த சமயம் கோவிலுக்கு போயிருந்தோம். ஏலம் நடந்துகொண்டிருக்கும் போதே நாங்கள் கோவிலுக்கு போனோம். பிள்ளையார் மாம்பழத்தில் பிரசித்தி பெற்றவர் தானே, ஏலத்தை கேளுங்கள் என குடும்பத்தவர்கள் சொன்னார்கள்.

2 லட்சத்துக்கு மேல் ஏலத்தில் போய் கொண்டிருக்கு, இந்தளவிற்கு கேட்க முடியாது என்றேன். கோவிலுக்கு ஒரு நேர்த்தி வைத்திருந்தோம். அதனால், அந்த நேர்த்தியுடன் கேளுங்கள் என குடும்பத்தார் கூறினார்கள். அதன் பிறகு கேட்டோம். இறுதியாக 9 லட்சத்து 70 ஆயிரம் வரை கேட்கப்பட்டது. நாங்கள் 10 லட்சம் ரூபாவிற்கு கேட்டோம். 10 லட்சம் ரூபாவோடு ஏலம் நிறைவு பெற்றது. பிள்ளையாரின் அருள் எங்களுக்கு கிடைத் தது.” என அவர் கூறினார்.

இவ்வாறு ஏலத்தில் பெற்றுக்கொண்ட ஒரு மாம்பழத்தை ஆலயத்தில் வைத்து, பக்தர்களுக்கு பகிர்ந்தளித்ததாக அவர் கூறுகின்றார்.

ஏனைய இரண்டு மாம்பழங்களையும் வீட்டிற்கு கொண்டு வந்து, அதனை பூஜை அறையில் வைத்து, தாமும் தமது குடும்பத்தாரும் உட்கொண்டதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

இந்த நிலையில், குறித்த மூன்று மாம்பழங்களின் விதைகளை தமது காணியில் விதையிட்டுள்ளதாகவும் மோகன்குமார் குறிப்பிடுகின்றார்.

# மன்னார் மாவட்டத்தில் 3000 குடும்பங்களை கடனாளிகளாக மாற்றியுள்ள வீடமைப்பு திட்டம்!

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் கடந்த 2018, 2019 ஆம் ஆண்டு “செமட்ட செவன” மாதிரி செயற்திட்டத்தின் ஊடாக முன்னெடுக்கப் பட்ட வீட்டுத் திட்டத்தின் ஊடாக மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 3022 குடும்பங்களில் சில குடும்பங்கள் பகுதி அளவிலும் பல குடும்பங்கள் முழுமையாகவும் கடனாளியாகி உள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் உள்ள மிகவும் பின்தங்கிய குடும்பங்களை முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்து நேரடி கள விஜயத்தின் ஊடாக 2018, 2019 ஆண்டு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினர் மற்றும் பிரதேச செயலகங்கள் இணைந்து வீட்டு திட்ட பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு 5 லட்சம் மற்றும் 7 லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான வீட்டுத் திட்டத்திற்கான செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தனர்.

அதன் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் தாங்கள் தற்காலிகமாக வசித்து வந்த குடிசை வீடுகளையும் உடைத்து கல் வீடு கட்டும் கனவில் அவசர அவசரமாக அடிக்கல் நாட்டும் பணிகளை முன்னெடுத்திருந்தனர்.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் நிபந்தனையின் அடிப்படையில் வீடுகளின் நிர்மாணத்திற்கு அமைய எட்டு விதமாக வரையறுத்து பகுதி பகுதியாக அவர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்குவதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொண்டிருந்தது.

குறிப்பாக வீட்டுக்கான அடித்தளம், அடித்தளம் முடிவுறுத்தப் படல், ஜன்னல் அளவு, லின்றர் அளவு, கூரை பூர்த்தி என எட்டு அளவிடையை கொண்டு கொடுப்பனவுகள் செலுத்துவதாக வீட்டுத் திட்ட பயனாளிகளுக்கு தெரிவிக்கப்பட்டு வீட்டு திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் வீட்டுத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 3 வருடங்கள் கடந்துள்ள நிலையில் பல குடும்பங்கள் அத்திவரம் அமைப்பதற்கு உரிய பணம் கிடைக்காத நிலையில் கடனாளிகளாக கடன் சுமையுடன் வாழ்ந்து வருகின்றனர்.

கல் வீடு கட்ட வேண்டும் என்ற கனவிலும் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் ஆறு மாத காலத்திற்குள் வீட்டை பூர்த்தி செய்ய வேண்டும் என்ற நிர்பந்தத்தால் காதிலும் ,கழுத்திலும் இருந்த நகைகளை அடகு வைத்து வட்டிக்கும் நுன்நிதி நிறுவனங்களிடம் கடன் பெற்றும் அமைக்கப்பட்டு வீடுகளை பூர்த்தி செய்ய முடியாத நிலையில் பலரும் பூர்த்தி செய்யப்பட்டும் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் கொடுப்பனவு பெறாத நிலையிலும் பல குடும்பங்கள் மன்னாரில் செய்வதறியாத நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, பொருட்களின் விலை ஏற்றம் என நடுத்தர குடும்பங்கள் மற்றும் வறிய குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் வீட்டு திட்டத்திற்காக பெற்ற கடன்களை செலுத்த முடியாத நிலையில் பல போராட்டங்களையும் சவால்களையும் வீட்டுத்திட்ட பயனாளிகள் அனுபவித்து வருகின்றனர். மன்னார் பிரதேச செயலக பிரிவில் மாத்திரம் சுமார் 1656 குடும்பங்கள் இந்த வீட்டுத் திட்டத்தினால் கடனாளிகளாக மாறியுள்ளனர். தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் 1656 குடும்பங்களுக்கும் 1242 மில்லியன் ரூபாய்கள் கொடுப்பனவாக செலுத்த வேண்டியிருந்தும், இதுவரை 182.987 மில்லியன்கள் மாத்திரமே செலுத்த பட்டிருக்கின்றது.

அதிலும் 684 குடும்பங்கள் அத்திவாரத்தை மாத்திரம் அமைத்து விட்டு அரச கொடுப்பனவுக்கு காத்திருக்கின்றனர். தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தகவலின் பிரகாரம் இதுவரை 28 குடும்பங்கள் மாத்திரமே வீட்டை முழுமையாக கட்டி முடித்துள்ளனர். மிகுதி 1628 குடும்பங்களின் நிலை மழை காலங்களில் கவலைக்கிடமாகவே உள்ளதுடன் பகுதியளவில் மாத்திரம் முடிக்கப்பட்ட வீட்டில் கிடுகை மேய்ந்து தற்காலிகமாக வசித்து வருகின்றனர்.

அதே போன்று நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு பிரதேச செயலகங்களை சேர்ந்த 535 குடும்பங்கள் இந்த வீட்டுத் திட்டத்தால் கடனாளிகளாக்கப்பட்டுள்ளனர்.

தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் 401.25 மில்லியன் ரூபா 535 வீட்டு திட்ட பயனாளிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிலையில் இதுவரை வெறும் 84.915 மில்லியன்கள் பகுதி பகுதியாக மக்களுக்கு பிரித்து வழங்கப்பட்டது டன், 316.335 மில்லியன் ரூபா வீட்டு திட்ட பயனாளிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவை உள்ளது.

இது ஒருபுறம் இருக்க அதே வீடமைப்பு அதிகார சபை 2018 ஆண்டு மன்னார் மாவட்டத்தில் முதல் கட்டமாக ஆரம்பித்த ‘செமட்ட செவன’ வேலை திட்டத்தில் 5 லட்சம் ரூபாய் வீட்டு திட்டம் ஒன்றை ஆரம்பித்து நடை முறைப்படுத்தியிருந்தது அவ் வீட்டுத்திட்டத்திற்கு கூட முழுமையான முறையின் கொடுப்பனவுகள் வழங்கவில்லை என்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

2018 ஆண்டு முன்னெடுக்கப்பட்ட குறித்த செயற்திட்டத்தில் 831 பயனாளிகள் உள்வாங்கப்பட்ட நிலையில் அவர்களுக்கான வீட்டு திட்டத்திற்காக 415.500 மில்லியன் ஒதுக்கப்பட்ட போதிலும் இதுவரை 310.114 மில்லியன்கள் மாத்திரமே செலுத்தப் பட்டுள்ளது. மேலதிகமாக என்னமும் 105.386 மில்லியன் ரூபா செலுத்தப்பட வேண்டியுள்ளது.

இவ்வாறு 2018 ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத் திட்டமே பூரணப் படுத்தப்படாத நிலையிலும் முழுமையான தொகை விடுவிக்கப்படாத நிலையிலும் முன்னாள் வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாச தனது சுயநல அரசியல் லாபத்திற்காக பல ஆயிரக்கணக்கான குடும்பங்களையும் பல லட்சக்கணக்கான மக்களையும் கடனாளியாகவும் அதே நேரம் தேசிய வீடமைப்பு அதிகார சபையையும் கடன் சுமைக்குள் தள்ளியுள்ளார்.

2018, 2019 பங்குனி மாதம் ஆரம்பிக்கப்பட்ட குறித்த வீட்டு திட்டத்தின் பயனாளிகள் மூன்று வருடங்கள் கடந்த நிலையில் பல போராட்டங்கள் நடத்தி பல முறை தேசிய வீடமைப்பு அதிகார சபை அலுவலகத்திற்கு சென்று இதுவரை அவர்களுக்கு மூன்று வருடங்களாக ஒரு ரூபாய் கூட கொடுப்பனவு வழங்கப்படவில்லை.

இவ்வாறான நிலையில் இலங்கை அரசாங்கம் தேசிய வீடமைப்பு அதிகார சபையினர் மற்றும் குறித்த நிறுவனத்திற்கு பொறுப்பான இன்னாள் மற்றும் முன்னாள் அமைச்சர்கள் இம் மக்களின் பிரச்சினைகளுக்கு எவ்வாறான நிவாரணத்தை வழங்க போகிறார்கள் என்பது வீட்டு திட்ட பயணாளிகளின் கேள்வியாகும்.

ஒட்டு மொத்தமாக மன்னார் மாவட்டத்தில் உள்ள 3022 குடும்பங்களுக்கு சுமார் 1480.735 மில்லியன் ரூபாய்கள் தேசிய வீடமைப்பு அதிகார சபையினர் செலுத்த வேண்டியுள்ளது. மன்னார் மாவட்டத்தில் மாத்திரம் இல்லாமல் இதே நிலைமை முல்லைத்தீவு, மற்றும் கிளிநொச்சி, வவுனியா, யாழ்ப்பாணம் மாவட்டங்களிலும் நிலவி வருகிறது.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இவ் வீட்டு திட்டமானது நீண்ட நாட்கள் கை விடப்பட்டிருந்த நிலையில் வீட்டு திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க தற்போது இந்த நாட்டின் ஜனாதிபதியாக உள்ள நிலையில் நிறுத்தப்பட்ட கொடுப்பனவுகள் ஒரு பகுதியாவது கிடைக்காதா என பல குடும்பங்கள் அன்றாடம் வீடமைப்பு அதிகார சபை அலுவலகங்களுக்கு பயணித்து கொண்டு இருக்கின்றனர்.

இவ்வாறான நிலையில் இவர்கள் வீட்டு திட்டங்களை ஆரம்பிக்கும் போது இருந்த பொருட்களின் விலை அப்போதைய நிலையை விட பல மடங்கு அதிகரித்துள்ளது.


அதே நேரம் வீட்டு திட்டத்திற்கு என இவர்கள் வாங்கிய கடன்கள் மற்றும் இவர்கள் அடகு வைத்த நகைகளின் வட்டிகளும் கணிசமாக அதிகரித்திருக்கும் என்பது உண்மையே. ஆனால் இவர்களுக்கான கொடுப்பனவு கிடைக்கும் போது அரசாங்கத்தினால் இவ்விடயங்கள் கரிசனையில் கொள்ளப்படுமா என்பது கேள்வியே.

எது எவ்வாறு இருப்பினும் கொடுப்பனவு அதிகரிக்க படாவிட்டாலும் ஒதுக்கிய தொகை கலையாவது விரைவில் விடுவிக்க மாட்டாரகளா? என்ற கேள்விகளுடனேயே இம் மக்களின் ஒவ்வொரு நாள் காலையும் விடிகின்றது. இம் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு அரசாங்கம் செவிசாய்க்குமா என்பதை காலம் தான் தீர்மானிக்க வேண்டும்.

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**18)** 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ...............................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ...............................

**19)**  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

.........................................

**20)** தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122 , 124 , 126 , ............. , ...........     ii) 18 , 15 , 12 , ............. , ...........

**21)**

| | | |
|---|---|---|
| 3, | 9, | |
| | 6, | 14, |
| 10, | | 12, |

பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

.........................................................................

**22)** ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

.........................................................................................

**23)** ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

...................................................................

**24)** பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3*l* 300*ml* பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

...................................................................

**25)** 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ..................................................

**26)** **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 | i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 | ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | | ............ | ......... |

**27)** கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

.......................................................

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?




.......................................................

**29)** ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

.......................................................     (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

**30)** சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)      2)      3) 

**31)** வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி     2) இரணைமடுக்குளம்     3) பராக்கிரமபாகு சமுத்திரம்

**32)** உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்ட எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம்     2) உதிப்பு     3) உடலைத் தளர்த்தல்

**33)** தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன்     2) வாளேந்திய சிங்கம்     3) நெற்கதிர்

**34)** பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976     2) 1851     3) 1815

**35)** வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு     2) இறப்பர், தாழம்பூ     3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

**18.** 1) 6     2) 8
**19.** $\frac{3}{10}$
**20.** 1) 128, 130     2) 9, 6
**21.** 3, 6, 9, 12
**22.** 745
**23.** 455
**24.** 1l 100ml / 1100ml
**25.** ரூபாய் 144.00
**26.** 1) 190     2) 100     3) 290
**27.** 15 : 30
**28.** 5m 50cm / 550cm
**29.** 36 பூக்கள்
**30.** 1     **31.** 2     **32.** 3
**33.** 2     **34.** 3     **35.** 2


கல்வி tv CHANNEL-1

**18.08.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

கல்வி tv CHANNEL - 2

**18.08.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |




# ஐஸ் போதைப்பொருளுடன் குடும்பஸ்தர் ஒருவர் கைது

அம்பாறை, ஓக. 25

ஐஸ் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த சந்தேக நபரை கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை விசேட அதிரடிப்படை முகாமிற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றை அடுத்து கடந்த செவ்வாய்க்கிழமை இரவு காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கர்பலா வீதி, அலியார் சந்தியில் வைத்து சந்தேக நபர் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதலில் கைதானார்.

இவ்வாறு கைதான நபர் 37 வயது மதிக்கத்தக்கவர். சந்தேக நபர் வசம் இருந்து ஐஸ் போதைப்பொருள் 5 கிராம் 10 மில்லிகிராம் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இச்சோதனை நடவடிக்கையின்போது விசேட அதிரடிப் படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ்மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய அம்பாறை வலயக்கட்டளை அதிகாரி சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சில்வெஸ்டர் விஜேசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய அதிகாரிகள் இந்த நடவடிக்கையை முன்னெடுத்து சந்தேக நபரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபர் சான்று பொருட்களுடன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (அ)

# கல்வி அமைச்சு, யுனெஸ்கோ நடத்திய நிகழ்ச்சித் திட்டம்

மட்டக்களப்பு, ஓக. 25

அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரியில் கல்வியில் ஒத்துணர்வு நிகழ்ச்சித் திட்டம் கடந்த திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் கல்லூரியின் பீடாதிபதி சட்டத்தரணி கே.புண்ணியமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

யுனெஸ்கோவின் அனுசரணையுடன் கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட இந்த நிகழ்ச்சித் திட்டம் விரிவுரையாளர்களான கே.பத்மராஜா, ஏ.நளீமுடன் மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர்களான எம்.எல்.ஏ. வாஜீத், எஸ்.ஜெயராஜா ஆகியோரின் வழிகாட்டலில் இடம்பெற்றது.

முதலாம் நாள் ஆசிரிய பயிலுநர்களுக்கு முழுமையாக பயிற்சியளிக்கப்பட்டதோடு, இரண்டாம் நாள் நிகழ்வில் கல்வி அமைச்சின் சமாதானம், நல்லிணக்கம் மற்றும் பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கான பணிப்பாளர் எஸ்.முரளீதரன் பிரதம விருந்தினராகவும், மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி எம்.ஐ.எம். நவாஸ் சிறப்பு விருந் தினராகவும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (அ)

# பிரதேச சிவில் அமைப்புக்கள் ஒன்றிணைந்தால் சமூகவிரோத செயல்களை கட்டுப்படுத்தமுடியும்

## பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக் தெரிவிப்பு

அம்பாறை, ஓக. 25

**எமது நாடும் பிரதேசமும் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி, தலை விரித்தாடும் போதைவஸ்த்து, சமூக விரோத செயல்கள் போன்றவற்றுக்கு நாம் முகம் கொடுப்பதற்கு சகல சிவில் அமைப்புக்களும் ஒன்றிணைந்து செயற்பட முன்வரவேண்டும் பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் தெரிவித்தார்.**

சாய்ந்தமருது பிரதேச செயலகத்திற்குட்பட்ட சிவில் அமைப்புகளின் வருடாந்த ஒன்றுகூடல் சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் சமூக சேவை உத்தியோகத்தர் ஏ.அஹமட் சபீரின் நெறிப்படுத்தலில் பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் தலைமையில் நடைபெற்றது.

இதில் சாய்ந்தமருது பிரதேச செயலத்தில் பதிவு செய்யப்பட்ட 25க்கு மேற்பட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

பிரதேச செயலாளர் மேலும் தெரிவிக்கையில்-

இளைஞர்கள், மாணவர்கள் போதைவஸ்துக்கு அடிமையாக்கப்பட்டு மிக மோசமாக தலைவிரித்தாடு கின்றபோதிலும் அதனை ஓரளவேனும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தாலும் முற்றாக தடை செய்வதில் பல சவால்களை எதிர் நோக்கவேண்டியுள்ளது. சாய்ந்தமருதில் பாவனையில் இல்லாத சில அரச காணிகளை ஆக்கிரமிப்பு செய்வதிலும் சிலர் முட்பட்டாலும் அதனை முடிவுக்கு கொண்டுவருவதில் நீதிமன்றத்தை நாடி தீர்வை பெற்றோம்.

இன்று கூடியிருக்கும் நாம் அனைவரும் ஒருமித்து செயற படுவோமாக இருந்தால் மேற்கூறிய பிரச்னைகளிலிருந்து எமது பிரதேசத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடியும். அதற்கமைவாக இன்று கூடியுள்ள அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து சிவில் அமைப்புக்களின் சம்மேளனம் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்து செயற்படுதல் வேண்டும். அதற்கான முழு ஒத்துழைப்பு என்னால் வழங்க முடியும்.

இதன்போது சமூகத்தின் எதிர்காலகருதி முதியோர் நலத்திட்டங்கள், சிறுவர் நலத்திட்டங்கள், போதைவஸ்த்து பாவனை தொடர்பான விழிப்புணர்வு, போதைவஸ்த்துக்கு அடிமைப்பட்டவர்களுக்கான புனர்வாழ்வளித்தல், பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கான நலத்திட்டங்கள், விஷேட தேவையுடைய பயனாளிகளுக்கான நலத்திட்டங்கள், பாடசாலை இடைவிலகள் மாணவர்களை நெறிப்படுத்தலும் அவர்களுக்கான நலத்திட்டங்கள் போன்ற செயற்பாடுகளை எதிர்காலத்தில் செயற்படுத்துவது எனவும் தீர்மானம் மேற்கொள்ளப் பட்டது. (அ)



# காத்தான்குடி ஸாவியா மகளிர் வித்தியாலய நூலக திறப்புவிழா

மட்டக்களப்பு, ஓக. 25

காத்தான்குடி ஸாவியா மகளிர் வித்தியாலயத்தின் 77ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு காத்தான்குடி நகர சபையின் அனுசரணையில் விஸ்தரிக்கப்பட்ட நூலகம் பாடசாலை பிரதி அதிபர் எம்.வை.எம் யூசுப் இம்றானின் ஒருங்கிணைப்பில் அதிபர் எஸ்.எல்.ஏ. கபூர் தலைமையில் நடைபெற்றது.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியான காத்தான்குடி நகர சபைத் தவிசாளர் எஸ்.எச்.எம் அஸ்பர் ஜே.பி கலந்து கொண்டு புதிய நூலகத்தைத் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் அதிதியாக காத்தான்குடி நகரசபை செயலாளர் எம்.ஆர்.எப் றிப்கா சபீன், விஷேட அதிதிகளாக மௌலவி எம்.ஐ.ஆதம் லெவ்வை பலாஹி, உள்ளிட்ட ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து சிறப்பித்தனர்.

நூலகத் திறப்பு விழாவுக்கு காத்தான்குடி நகர சபையினால் சுமார் 1300 க்கும் மேற்பட்ட புத்தகங்களும் உபகரணங்களும் வழங்கப்பட்டது. (அ)

# கடல் அரிப்பைத் தடுக்கும் வழிமுறை குறித்து ஆராய்வு

அம்பாறை, ஓக. 25

நிந்தவூர் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கடல் அரிப்பைத் தடுப்பதற்கான அதிகாரிகளுடனான உயர்மட்டக் கூட்டம், நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.எம் தாஹிர் தலைமையில், நிந்தவூர் பிரதேச சபையில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இதன்போது கடலரிப்பை தற்காலிகமாக தடுப்பதற்காக முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் குறித்து கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் பொறியியலாளர் விளக்கமளித்தார்.

அத்துடன், கடலரிப்புக்கு உள்ளாகும் பிரதேசங்களையும் அங்குள்ள மக்களின் வாழ்வாதாரத் தொழில் முயற்சிகளையும் மேலும் அழிவடையாத வண்ணம் பாதுகாத்து மீளக் கட்டியெழுப்ப வேண்டியதன் அவசியத்தை, நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர், அதிகாரிகளுக்கு எடுத்துரைத்தார்.

அத்துடன், கடல் அரிப்பை தடுப்பதற்காக தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் தற்காலிக பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான எரிபொருள் மற்றும் ஏனைய செயற்பாடுகளுக்குத் தேவையான நிதியை பிரதேச சபை நிதியிலிருந்து வழங்குவதாகவும் இதனைக் கொண்டு வேலைகளை துரிதப்படுத்துமாறும் பொறியியலாளரை தவிசாளர் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, நிந்தவூர் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கடலரிப்பை தடுப்பதற்கான கருங்கல்லிலான அணைக்கட்டு நிர்மாணிப்பதற்கு கடல்லோரம் பேணல் மற்றும் கடல் மூல வளமுகாமைத்துவ திணைக்களத்தால் முதல் கட்டமாக 10 மில்லியன் ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக, நிந்தவூர் பிரதேச செயலாளர் ஏ.எம்.அப்துல் லத்தீப் தெரிவித்தார். (அ)

# திருமலையில் சில பகுதிகளில் மூன்று தினங்களுக்கு நீர் வெட்டு

திருமலை, ஓக. 25

கந்தளாய் குளத்தின் சுத்திகரிப்பு பணிகள் காரணமாக திருகோணமலை மாவட்டத்தின் சில பகுதிகளில் இன்று முதல் நாளை மறுதினம் வரை நீர் வெட்டு அமுல்படுத்தப் படவுள்ளது.

நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் திருகோணமலை பிராந்திய பொதுமுகாமையாளர் எஸ்.ஜயந்தன் இதனைத் தெரிவித்தார்.

கந்தளாய், தம்பலகாமம், கிண்ணியா, ஆண்டாங்குளம், நிலாவளி மற்றும் திருகோணமலை நகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் பகல் நேரங்களில் நீர் விநியோகம் முற்றாக தடைப் படும். அத்துடன், இரவு நேரங்களில் குறித்த பகுதிகளில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நீர் விநியோகம் இடம்பெறும் என நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பிராந்திய பொது முகாமையாளர் கூறினார். (அ)



## 500ஆண்டுகளில் இல்லாத கடும் வறட்சி எச்சரிக்கை நிலையின் கீழ் ஐரோப்பா!

*லண்டன், ஓக. 25*

ஐரோப்பாவின் பெரும் பகுதி கடந்த 500 ஆண்டுகளில் இல்லாத மோசமான வறட்சியை எதிர்கொண்டுள்ளது. பிராந்தியத்தின் மூன்றில் இரண்டு பங்கு ஒருவித வறட்சி எச்சரிக்கையின் கீழ் உள்ளது.

ஐரோப்பிய கண்டத்தின் 47 வீத பகுதிகள் வறட்சி எச்சரிக்கை நிலையில் உள்ளன. அதாவது இந்தப் பகுதிகளில் மண் வறண்டு மோசமான நிலையில் உள்ளது என உலக வறட்சி ஆய்வகத்தின் சமீபத்திய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 17 வீதமான பகுதிகளில் தாவரங்கள், மரங்கள் கடும் வறட்சியால் பட்டுப்போகும் அறிகுறிகளைக் கொண்டுள்ளதாகவும் அந்த அறிக்கயில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மோசமாக வறண்ட காலநிலை பயிர் விளைச்சலை பெருமளவு பாதித்துள்ளது. அத்துடன், காட்டுத் தீயை தூண்டி வருகிறது. ஐரோப்பாவின் சில தெற்குப் பகுதிகளில் கடும் வறட்சி நிலை இன்னும் பல மாதங்கள் நீடிக்கும் என்று உலக வறட்சி ஆய்வகத்தின் சமீபத்திய அறிக்கையில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

முந்தைய ஐந்து ஆண்டுகளின் சராசரியுடன் ஒப்பிடுகையில் வறட்சி காரணமாக சோள உற்பத்தி 16 வீதம், சோயா உற்பத்தி 15 வீதம் மற்றும் சூரியகாந்தி உற்பத்தி 12 வீதம் குறைவடைந்துள்ளதாக கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

தற்போதைய வறட்சி குறைந்தபட்சம் 500 ஆண்டுகளுக்குப் பிறகு ஐரோப்பா எதிர்கொள்ளும் மோசமான நிலையாகத் தோன்றுகிறது என வறட்சி கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

தற்போதைய வெப்ப அலை மற்றும் நீர் பற்றாக்குறை முழு ஐரோப்பிய ஒன்றியத்திலும் நீர் மட்டங்களில் முன்னோடி இல்லாத அழுத்தத்தை உருவாக்கியுள்ளது என்று ஆராய்ச்சி ஆணையர் மரியா கேப்ரியல் கூறினார்.

நாங்கள் தற்போது சராசரிக்கும் அதிகமான காட்டுத் தீ மற்றும் பயிர்கள் உற்பத்தியில் பாதிப்பு என முக்கியமான தாக்கங்களை அனுபவிக்கிறோம். காலநிலை மாற்றம் சந்தேகத்திற்கு இடமின்றி இவ்வாறான பாதிப்புகளுக்கு காரணமாகியுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

ஏறக்குறைய ஐரோப்பாவின் அனைத்து ஆறுகளும் ஓரளவு வறண்டு விட்டது என உலக வறட்சி ஆய்வக அறிக்கை எச்சரித்துள்ளது.

ஆறுகள் வறண்டுள்ளமையால் ஏற்கனவே நெருக்கடியில் இருக்கும் ஐரோப்பாவின் எரிசக்தித் துறை மேலும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. நீர்மின் உற்பத்தி 20 வீதம் வரை குறைந்துள்ளது என்று அறிக்கை கூறுகிறது. (அ)

## கொங்கோவில் மீண்டும் பரவும் எபோலா வைரஸ்!

*கின்ஷாகா, ஓக. 25*

கொங்கோ ஜனநாயகக் குடியரசின் கிழக்கு மாகாணமான வடக்கு-கிவுவில் ஒருவர் எபோலா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், மீண்டும் எபோலா வைரஸ் பரவல் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எபோலா வைரஸால் பாதிக்கப்பட்ட பெண் ஒருவர் கிவுவில் கண்றியப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில் கடந்த வாரம் அவர் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் எபோலா வைரஸ் பாதிப்புடன் கண்டறியப்பட்ட இரண்டாவது நபராக இவர் உள்ளார்.

கொங்கோவில் முன்னர் பரவிய எபோலா வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தப்பட்டது. அதேபோன்று தற்போதும் அதனை எதிர்கொண்டு அதிகாரிகள் கட்டுப்படுத்துவார்கள் என நம்புவதாக உலக சுகாதார அமைப்பின் ஆபிரிக்கா பிராந்திய பணிப்பாளர் மட்ஷிடிசோ மொய்தி கூறினார்.

1976 ஆம் ஆண்டு முதன்முதலில் கொங்கோவில் எபோலா வைரஸ் கண்டறியப்பட்டது. இதனைத் தொடர்ந்து 14 தடவையாக தற்போது தொற்று பரவல் நாட்டில் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# புடினின் நெருங்கிய நண்பரின் மகளை கொன்றது உக்ரைன் சிறப்பு பிரிவுதான்!

## ரஷ்யா திட்டவட்ட அறிவிப்பு

*மொஸ்கோ, ஓக. 25*

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினின் நெருங்கிய நண்பரின் மகளை கொன்றது உக்ரைன் சிறப்பு சேவைகள் தான் என்பதற்கான ஆதாரங்கள் தம்மிடம் இருப்பதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை, ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோ அருகே காரை ஓட்டிச் சென்ற 29 வயதான தர்யா டுகினா கார் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டார்.

தர்யா டுகினாவின் தந்தையான புடினுக்கு நெருக்கமான முக்கிய தீவிர தேசியவாதியான அலெக்சாண்டர் டுகின் தாக்குதலின் நோக்கமாக இருக்கலாம் எனக் கூறப்படுகின்றது.

ஆனால், இந்த அனைத்து குற்றச்சாட்டுக்களையும் மறுத்துள்ள உக்ரைன் அதிகாரிகள், இந்த குண்டுவெடிப்பில் தமக்கு எந்த தொடர்பும் இல்லை என்று கூறியுள்ளனர்.

ஆனால், ரஷ்யாவின் மத்திய பாதுகாப்பு சேவை, இந்த வழக்கைத் தீர்த்துவிட்டதாகவும், உக்ரைன் இதற்கு நேரடியாகப் பொறுப்பு என்றும் குற்றஞ்சாட்டியது.

உக்ரைனிய சிறப்பு சேவை ஒப்பந்தக்காரரான உக்ரைனியப் பெண் ஒருவர் தனது இளம் மகளுடன் ஜூலை மாதம் ரஷ்யாவுக்குள் நுழைந்ததாகவும், அந்த பெண், டுகினா இருந்த அதே கட்டடத்தில் ஒரு அடுக்குமாடி குடியிருப்பை ஒரு மாதத்திற்கு வாடகைக்கு எடுத்து தாக்குதலுக்கு திட்டமிட்டதாகவும் ரஷ்யாவின் மத்திய பாதுகாப்பு சேவை தெரிவித்துள்ளது.

மேலும், குறித்த பெண், தாக்குதல் நடத்தப்பட்ட தினத்தன்று ஒரு மினி கூப்பரில் மொஸ்கோ வழியாக டுகினாவைப் பின்தொடர்ந்ததாகக் கூறப்படுகிறது. அதற்காக அவர் மூன்று வெவ்வேறு உரிமத் தகடுகளைப் பயன்படுத்தினார்.

குண்டு வெடிப்புக்குப் பிறகு சந்தேக நபர் எஸ்டோனியாவுக்குத் தப்பிச் சென்றதாக ரஷ்யாவின் மத்திய பாதுகாப்பு சேவை தெரிவித்துள்ளது.

உக்ரைனின் ஜனாதிபதி செலென்ஸ்கியின் ஆலோசகர், மைக்கைலோ போடோலியாக், ரஷ்யாவின் மத்திய பாதுகாப்பு சேவை ஒரு கற்பனை உலகில் இருப்பதாக கூறினார்.

இதன்பிறகு, சந்தேக நபரின் கார் ரஷ்யாவுக்குள் நுழைவதையும், அவர் டுகினாவின் கட்டடம் என்று கூறப்படும் இடத்திற்குள் நுழைந்து, ரஷ்யாவை விட்டு வெளியேறும் பாதுகாப்பு காட்சிகளையும் காட்டும் காணொளியினை ரஷ்யாவின் மத்திய பாதுகாப்பு சேவை வெளியிட்டது.

(அ)

# சிரியாவில் ஈரான் ஆதரவு குழுக்களின் இலக்குகள் மீது அமெரிக்கா தாக்குதல்!

*நியூயோர்க், ஓக. 25*

ஈரானின் புரட்சிகர காவலர் படையுடன் இணைந்த குழுக்களின் இலக்குகளை குறிவைத்து சிரியாவின் டெய்ர் அல்-ஜோர் மாகாணத்தில் வான்வழித் தாக்குதல்களை நடத்தியதாக அமெரிக்க இராணுவம் கூறியது.

முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கைவிட்ட ஈரானுடனான 2015 அணுசக்தி ஒப்பந்தத்தை மீண்டும் புதுப்பிக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் வரைவு ஒப்பந்தத்தில் அமெரிக்கா ஆர்வத்தை வெளிப்படுத்தி வருகிறது. ஜனாதிபதி ஜோ பைடன் இந்த ஒப்பந்தத்தை மீண்டும் அமுல்படுத்த ஆர்வம் கொண்டுள்ள நிலையில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

ஈரான் ஆதரவு குழுக்களின் தாக்குதலில் இருந்து அமெரிக்கப் படைகளைப் பாதுகாப்பதற்காக இத்தகைய தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக அமெரிக்க இராணுவத்தின் மத்திய கட்டளை தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தாக்குதல்கள் ஜனாதிபதி ஜோ பைடன் வழிகாட்லில் கீழ் இடம்பெற்றதாக இராணுவ செய்தித் தொடர்பாளர் கேணல் ஜோ புசினோ கூறினார்.

செவ்வாய்க்கிழமை நடந்த அமெரிக்காவின் தாக்குதல்களில் உயிரிழப்புகள் ஏற்பட்டதா என்பது குறித்த தகவல்கள் வெளியிடப்படவில்லை. வான்வழித் தாக்குதலுக்கு விமானங்கள் அல்லது ஆளில்லா விமானங்கள் பயன்படுத்தப்பட்டதா என்ற தகவலும் வெளிப்படுத்தப்படவில்லை. (அ)

# 60 ஆண்டுகளில் இல்லாத கடும் வறட்சி; சீனாவில் பயிர் அறுவடையில் பாதிப்பு

*பீஜிங், ஓக. 25*

அதிக வெப்பநிலை மற்றும் வறட்சியால் சீனாவின் கோடை கால பயிர் அறுவடை கடுமையான அச்சுறுத்தலின் கீழ் உள்ளதாக அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

நாட்டின் நிலவும் கடும் வறட்சியை எதிர்கொண்டு பயிர்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

உலகின் இரண்டாவது பெரிய பொருளாதார நாடான சீனா இந்த கோடையில் கடும் வெப்பம், வறட்சி மற்றும் திடீர் வெள்ளப் பெருக்கு உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ளது. காலநிலை மாற்றத்தால் சீனா இயற்கை அழிவுகளை எதிர்கொண்டுள்ளதாக விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

தெற்கு சீனாவில் 60 ஆண்டுகளுக்கு முன்பு பதிவுகள் தொடங்கியதில் இருந்து அதிக வெப்பநிலை இவ்வாண்டு பதிவாகியுள்ளது. அத்துடன், பல தசாப்தங்களில் இல்லாதவாறு மிகக் குறைந்த மழைவீழ்ச்சி இவ்வாண்டு பதிவாகியுள்ளது.

இவ்வாறான நிலையில் நீர் மின் உற்பத்திக்கு உதவும் வகையிலும் மழையின்மையால் அழிவின் விழிம்பில் உள்ள விவசாய செய்கைகளை பாதுகாக்கும் நோக்குடனும் ரசாயனங்களை முகிலுக்குள் செலுத்தி செயற்கை மழையை உருவாக்கும் முயற்சியில் சீனா ஈடுபட்டுள்ளது.

சீனா - தென்மேற்கில் உள்ள தொழிற்சாலைகளின் நீர் மின் உற்பத்திக்கு தண்ணீர் பற்றாக்குறையால் இன்னும் ஒரு வாரத்திற்கு மூடப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன், இந்தப் பகுதியில் அறுவடைக்கு சிறிது காலமே உள்ள பெருமளவு பயிர்கள் அழிவின் விளிம்பில் உள்ளன.

இவ்வாறான நிலையிலேயே செயற்கை மழையை உருவாக்கி நீர் மின் உற்பத்திக்கு உதவவும், விவசாயத்தைப் பாதுகாக்கவும் சீனா நடவடிக்கை எடுத்துள்ளது.


சீனாவில் 61 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தக் கோடைகாலத்தில் வெப்பநிலை அதிகமாக பதிவானது. இதனால் நீர்த்தேக்கங்களில் நீர் மட்டத்தின் அளவு பாதியாக குறைந்துவிட்டது. சிச்சுவான் மாகாணத்தில் கடந்த வாரம் வெப்பநிலை 45 டிகிரி செல்சியஸை கடந்ததால், வீடுகளில் வாயுச் சீராக்கி இயந்திரங்களின் தேவை அதிகரித்தது. இதன் காரணமாக கடந்த வாரம் மின்சாரத்தை சேமிப்பதற்காக தொழிற்சாலைகள் மூடப்பட்டன.

இதேவேளை, சீனாவின் தென் பகுதியில் அடுத்த 10 நாட்களில் நெற்பயிரில் சேதத்தைக் குறைக்க தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்படும் என விவசாய துறை அமைச்சர் தாங் ரெஞ்சியன் தெரிவித்ததாக குளோபல் ரைம்ஸ் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

சீனாவின் வருடாந்த மொத்த தேசிய விவசாய உற்பத்தியில் இலையுதிர் கால அறுவடை 75 சதவீதம் பங்கு வகிப்பதால், எவ்வித சேதமும் ஏற்படாதவாறு அறுவடையை உறுதிப்படுத்த அதிகாரிகள் அவசர நடவடிக்கைகளை கையாண்டு வருகின்றனர் எனவும் குளோபல் ரைம்ஸ் கூறியுள்ளது.

(அ)

# ஆசிய கிண்ண வலைப்பந்து இலங்கை அணியில் தர்ஜினி!



கொழும்பு, ஓக. 25

சிங்கப்பூரில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஆசிய கிண்ண வலைபந்தாட்டப் போட்டியில் விளையாடவுள்ள இலங்கை அணியில் நட்சத்திர வீராங்கனையும் ஆசியாவின் அதிஉயரமான வலைபந்தாட்ட வீராங்கனையுமான தர்ஜினி சிவலிங்கம் இணைக்கப்பட்டுள்ளார்.

தற்போது அவுஸ்திரேலியாவில் வலைபந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றிவரும் தர்ஜினி சிவலிங்கம் அங்கிருந்து நேரடியாக சிங்கப்பூர் சென்று இலங்கை அணியுடன் இணையவுள்ளார்.

ஆசிய கிண்ண வலைபந்தாட்டப் போட்டியில் ஐந்து தடவைகள் சம்பியனான இலங்கை, கடைசியாக 2018இல் வென்ற கிண்ணத்தை தக்கவைத்துக்கொள்ளும் என நம்பப்படுகிறது.

இலங்கை வலைபந்தாட்ட அணியின் தலைவியாக மத்திய நிலை வீராங்கனை கயஞ்சலி அமரவன்ஷ நியமிக்கப்பட்டுள்ளதுடன் உப தலைவியாக பக்கநிலையில் எதிர்த்தாடும் வீராங்கனை துலங்கி வன்னித்திலக்க செயல்படவுள்ளார்.

அனுபவசாலிகளும் சிரேஷ்ட வீராங்கனைகளுமான தர்ஜினி சிவிலங்கம், முன்னாள் அணித் தலைவி சத்து ரங்கி ஜயசூரிய, கயனி திசாநாயக்க, ஹசித்தா மெண்டிஸ், செமினி அல்விஸ் ஆகியோருடன் தீப்பிகா அபயகோன், ஹாஷினி டி சில்வா, மல்மி ஹெட்டிஆராச்சி, இதுஷா ஜனனி, ரஷ்மி திவ்யாஞ்சலி ஆகியோரும் வலைபந்தாட்டக் குழாத்தில் இடம்பெறுகின்றனர்.

ஆசிய வலைபந்தாட்ட சம்பியன்ஷிப் (ஆசிய கிண்ணம்) போட்டிகள் சிங்கப்பூரில் செப்ரெம்பர் 3ஆம் திகதியிலிருந்து 11ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

11 நாடுகள் பங்குபற்றும் 13ஆவது ஆசிய கிண்ண வலைபற்தாட்டப் போட்டி நான்கு குழுக்களில் லீக் முறையில் நடத்தப்படும்.

தென் கொரியாவில் 2018இல் நடைபெறவிருந்த 12ஆவது ஆசிய கிண்ண அத்தியாயம் கொவிட் - 19 காரணமாக இரத்துச் செய்யப்பட்டது.

ஏ குழுவில் இலங்கை, இந்தியா, பிலிப்பைன்ஸ் ஆகிய அணிகளும் பி குழுவில் சிங்கப்பூர், ஜப்பான், மாலைதீவுகள் ஆகிய அணிகளும் சி குழுவில் மலேசியா, புருணை, சைனீஸ் தாய்ப்பே ஆகிய அணிகளும் டி குழுவில் ஹொங்கொங், தாய்லாந்து ஆகிய அணிகளும் பங்குபற்றுகின்றன.

லீக் சுற்று முடிவில் நான்கு குழுக்களிலும் முதலிடங்களைப் பெறும் 4 அணிகள் பிரதான கிண்ணப் பிரிவில் மற்றொரு லீக் சுற்றில் விளையாடும். இந்த லீக் முடிவில் 1ஆம் இடத்தை அடையும் அணியும் 4ஆம் இடத்தை அணியும் ஓர் அரை இறுதியில் விளையாடும். 2ஆம், 3ஆம் இடங்களைப் பெறும் அணிகள் மற்றைய அரை இறுதியில் விளையாடும். வெற்றிபெறும் அணிகள் ஆசிய சம்பியனைத் தீர்மானிக்கும் இறுதிப் போட்டியில் விளையாடும்.

தோல்வி அடையும் அணிகள் 3ஆம் இடத்தைத் தீர்மானிக்கும் போட்டியில் விளையாடும். முதல் சுற்றில் ஒவ்வொரு குழுவிலும் 2ஆம் இடங்களைப் பெறும் அணிகளும் 3ஆம் இடங்களைப் பெறும் அணிகளும் வெவ்வேறு குழுக்களில் போட்டியிட்டு பின்னர் நிரல் படுத்தல் போட்டிகளில் விளையாடும். (ஐ)

---

## ஆசிய கிண்ண கிரிக்கெட்

## இந்திய அணி பயிற்றுநராக வி. வி. எஸ். லக்ஷ்மன் நியமனம்

மும்பை, ஓக. 25

எதிர்வரும் ஆசிய கிண்ணத் தொடரில் இந்திய அணியின் இடைக்கால பயிற்றுவிப்பாளராக வி. வி. எஸ். லக்ஷ்மன் செயல்படுவார் என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை அறிவித்துள்ளது.

தலைமை பயிற்சியாளர் ராகுல் டிராவிட்டுக்கு கொரோனா தொற்று உறுதியான நிலையில், இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

கடந்த 1996 முதல் 2012 வரையில் இந்திய அணிக்காக சர்வதேச கிரிக்கெட் களத்தில் சிறப்பாக விளையாடிவர் லக்ஷ்மன்.

134 டெஸ்ட் மற்றும் 86 ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி உள்ளார். மொத்தம் 11,119 ஓட்டங்களை குவித்துள்ளார். அண்மையில் அயர்லாந்து மற்றும் சிம்பாவ தொடரில் இந்திய அணியின் பதில் பயிற்றுநராக பணியாற்றி இருந்தார்.

இந்நிலையில், தலைமை பயிற்றுவிப்பாளர் ராகுல் டிராவிட்டுக்கு கொரோனா தொற்று பாதிப்பு நேற்று உறுதி செய்யப்பட்டது. அப்போது முதலே இந்திய அணியின் பயிற்சியாளராக லக்ஷ்மன் நியமிக்கப்படலாம் என்ற தகவல் வெளிவந்த வண்ணம் இருந்தது. தற்போது அதனை பி. சி. சி. ஐ. உறுதி செய்துள்ளது.

இதன் காரணமாக ஆசியக் கிண்ணத் தொடருக்கான அணியில் இடம்பெற்றுள்ள வீரர்களுடன் ஹராரே நகரில் இருந்து அவரும் டுபாய் செல்லும் விமானத்தில் இணைந்துள்ளாரெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கே.எல்.ராகுல், தீபக் ஹூடா மற்றும் ஆவேஷ் கான் போன்ற வீரர்கள் ஹராரே நகரில் இருந்து டுபாய் புறப்பட்டுள்ளனர். கிண்ணத் தொடர் 27 ஓகஸ்ட் முதல் 11 செப்ரெம்பர் வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

---

## ஆப்கான் துடுப்பாட்டகாரருக்கும் வாய்ப்புகளை வழங்க வேண்டும்!

### ரஷித் கான் கோரிக்கை



காபூல், ஓக. 25

இருபது - 20 லீக் போட்டிகளில் ஆப்கானிஸ்தான் துடுப்பாட்ட வீரர்களையும் தெரிவு செய்யவேண்டும் என்று ரஷித் கான் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் சுழல் பந்து வீச்சாளரான ரஷித் கான் ஐ. பி. எல். உள்பட பல இருபது -20 லீக் போட்டிகளில் விளையாடி வருகிறார். ரஷித் கான், முஜீப் உர் ரஹ்மான், முகமது நபி போன்ற ஆப்கானிஸ்தான் பந்துவீச்சாளர்களுக்கு இருபது - 20 லீக் போட்டிகளில் அதிக வரவேற்பு உள்ளது.

இந்நிலையில் ஒரு பேட்டியில் ரஷித் கான் கூறியதாவது:

இருபது - 20 லீக் போட்டிகளில் ஆப்கானிஸ்தான் பந்துவீச்சாளர்களை விடவும் ஆப்கானிஸ்தான் துடுப்பாட்ட வீரர்கள் இடம்பெற்றால் கூடுதலாக மகிழ்வேன். உலகமெங்கிலும் நடைபெறும் போட்டிகளில் எங்கள் நாட்டுப் பந்துவீச்சாளர்கள் பலர் விளையாடி வருகிறார்கள். அதேபோல எங்களுடைய துடுப்பாட்ட வீரர்களுக்கும் வாய்ப்பு கிடைக்கவேண்டும். அது அவர்களுடைய ஆட்டத்திறனை அதிகப்படுத்தும். ஆப்கானிஸ்தான் கிரிக்கெட்டுக்கும் அதனால் நல்லது நடக்கும். சிலர் பாகிஸ்தான் சுப்பர் லீக்கில் விளையாடியுள்ளார்கள். அவர்களுக்கு வாய்ப்பு கிடைத்தபோது அதை நன்கு பயன்படுத்திக் கொண்டார்கள். அதேபோல ஆப்கானிஸ்தான் துடுப்பாட்ட வீரர்களுக்கு இருபது -20 லீக் போட்டிகளில் வாய்ப்பு கிடைத்தால் அவர்களுடைய திறமையை நிச்சயம் நிருபிப்பார்கள். எங்களுடைய துடுப்பாட்ட வீரர்கள் இருபது - 20 கிரிக்கெட்டில் அதிரடியாக ஆடக்கூடியவர்கள் - என்றார்.

---



## மைதானம் திரும்புகிறார் கனடாவின் பௌச்சர்ட்!

சென்னை, ஓக. 25

கனடாவின் ரென்னிஸ் வீராங்கனையான ஈகியுனி பௌச்சர்ட் சென்னை ஓப்பன் ரென்னிஸ் மூலம் மீண்டும் களம் திரும்புகிறார்.

சென்னை ஓப்பன் மகளிர் ரென்னிஸ் போட்டி வரும் செப்ரெம்பர் 12ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை நடைபெறுகிறது.

இந்தத் தொடரில் மகளிர் ஒற்றையர் பிரிவில் 32 வீராங்கனைகளும், இரட்டையர் பிரிவில் 16 வீராங்கனைகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

உலகத் தரவரிசையில் 17ஆவது இடத்தில் உள்ள பிரான்ஸின் கரோலின் கார்சியா, 29ஆம் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் அலிசன் ரிஸ்க் 32-ம் நிலை வீராங்கனையான பெல்ஜியத்தின் எலிஸ் மெர்டன்ஸ் உள்ளிட்ட முன்னணி வீராங்கனைகள் சென்னை ஒப்பனில் கலந்து கொள்கின்றனர்.

இதில், கனடாவின் பௌச்சர்ட், இந்தியாவின் அங்கிதா ரெய்னா ஆகியோருக்கு வைல்ட் கார்ட் வழங்கப்பட்டுள்ளது.

முன்னாள் 5ஆம் நிலை வீராங்கனையான பவுச்சார்ட் 2014ஆம்ஆண்டு விம்பிள்டன் தொடரில் இறுதிப் போட்டிவரை முன்னேறியிருந்தார். பின்னர் அவர் சில ஆண்டுகள் வரை ரென்னிஸ் விளையாடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

---



## அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் விலகினார் சானியா மிர்சா!

புதுடில்லி, ஓக. 25

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடரில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார் இந்திய ரென்னிஸ் நட்சத்திரம் சானியா மிர்சா.

35 வயதான சானியா கடந்த ஜனவரியில் இந்த தொடருடன் ரென்னிஸ் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவாரென அறிவித்திருந்தார்.

இந்நிலையில் சானியா மிர்சா தனது சமூகவலைதளப் பதிவில்,“2 வாரங்களுக்கு முன்னர் கனடாவில் விளையாடிய போது எனது முழங்கையில் காயம் ஏற்பட்டது. நேற்று (நேற்று முன்தினம்) ஸ்கான் செய்து பார்க்கும் வரை அது எவ்வளவு மோசமானது என்பதை நான் உணரவில்லை. துரதிர்ஷ்டவசமாக எனது தசைநார் சிறிது கிழிந்துள்ளது. இதனால் சில வாரங்கள் ஓய்வு எடுக்க வேண்டி உள்ளது. எனவே 29ஆம் திகதி தொடங்கும் அமெரிக்க ஒப்பனில் இருந்து விலகுகிறேன். இது சிறந்ததல்ல, மோசமான நேரமும்கூட. காயமானது எனது ஓய்வு திட்டங்களில் மாற்றத்தை ஏற்படுத்தும். இது தொடர்பான விவரங்களை நான் பிறகு தெரிவிக்கிறேன்” என்று கூறியுள்ளார். (ஐ)



# தமிழகத்தின் மூன்றாம் கட்ட நிவாரண உதவி திருமலையில்

திருமலை, ஓக. 25

இந்தியா - தமிழ்நாட்டு அரசால் வழங்கப்பட்ட மனிதாபிமான மூன்றாம் கட்ட உதவி, தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவிலும் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வேண்டுகோளுக்கிணங்க, தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இவை வழங்கப்பட்டன.

இதில் அரிசிப் பொதி என்பன விசேட தேவையுடோருக்கும், சிறுநீரக நோய், இருதய நோய் கொடுப்பனவு மற்றும் காத்திருப்புப் பட்டியலில் உள்ளோருக்கும் நிவாரணப் பணி இடம்பெற்றன. பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக இந்த மனிதா பிமான உதவி வழங்கப்பட்டு வருகிறது.

இதில் சமூக சேவை உத்தியோகத்தர் ப.சுதன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (அ)

# பொதுஜன பெரமுன கட்சியின் பதவிகளில் விரைவில் மாற்றம்

## சாகர காரியவசம் தகவல்



**கொழும்பு, ஓக. 25**

**ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பதவி நிலைகளில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று கட்சியின் பொதுச்செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் எம். பி. ஊடகங்களிடம் தெரிவித்தார்.**

அடுத்த மாதம் நடைபெறவுள்ள கட்சியின் மாநாட்டின் போதே இந்த மாற்றங்கள் வரவுள்ளன என்றும் அவர் கூறினார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசியல் ரீதியாக மேற்கொண்ட தீர்மானங்களுக்கு எதிராகச் செயற்பட்டு, தற்போது கட்சியில் முக்கிய பதவிகளில் வகிப்பவர்களை அந்தப் பதவிகளில் இருந்து நீக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

சாகர காரியவசத்தின் அறிவிப்பின்படி கட்சியின் தவிசாளர் ஜி.எல்.பீரிஸ், டலஸ் அழகப்பெரும உள்ளிட்ட டலஸ் ஆதரவு அணி உறுப்பினர்களின் பதவிகள் பறிக்கப்படவுள்ளன.

அத்துடன், மொட்டுக் கட்சியில் முக்கிய பதவி ஒன்று நாமல் ராஜபக்ஷவுக்கு வழங்கப்படவுள்ளது. தலைமைப் பதவியில் மஹிந்த ராஜபக்ஷ தொடர்வார். (அ)

# ஜனாதிபதி ஆணைக்குழுவின் பதவிக் காலம் நீடிக்கப்பட்டது

கடந்த மார்ச் மாதம் 31ஆம் திகதி முதல் மே மாதம் 15ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நாட்டின் பல பகுதிகளில் இடம்பெற்ற சொத்துக்களுக்கு தீ வைப்பு மற்றும் கலவரங்கள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

அதன் பதவிக்காலம் எதிர்வரும் நவம்பர் 30ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ பதவிக்காலம் எதிர்வரும் 31ஆம் திகதியுடன் முடிவடையவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ரணில்-ஜப்பான் தூதுவர் நேற்று முக்கிய சந்திப்பு

கொழும்பு, ஓக. 25

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும், ஜப்பானிய தூதுவர் மிசுகோஷி ஹிடேக்கிற்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஜப்பானியப் பேரரசர் ஹிரோனோமியா நரஹிட்டோவின் வாழ்த்துகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தெரிவித்த ஜப்பானியத் தூதுவர், ஜனாதிபதியுடன் சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டார்.

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தன, 'சென்பிரான் சிஸ்கோ சமாதான மாநாட்டில்' உரையாற்றி, 70 ஆண்டுகள் நிறைவடையவுள்ளன.

இதனை முன்னிட்டு ஜப்பான் தூதரகமும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள விசேட நிகழ்ச்சி, செப்ரெம்பர் மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்தநிலையில் குறித்த விடயம் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# அரிசி, சீனி விநியோகிக்கும் அளவை அதிகரித்த சதொச!

கொழும்பு, ஓக. 25

லங்கா சதொச 12 அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளை நேற்று முன் தினம் முதல் உடன் அமுலுக்கு வரும் வகையில் குறைத்துள்ளதாக இலங்கை சதொச தலைவர் பசந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

அத்தோடு ஒருவருக்கு வழங்கும் அரிசி மற்றும் சீனியின் அளவில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

நுகர்வோர் ஒருவருக்கு வழங்கப்படும் 3 கிலோ அரிசியின் அளவு 5 கிலோவாகவும், சிவப்பு சீனி 2 கிலோவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் லங்கா சதொசவில் போதுமான பொருட்கள் இருப்பதாகவும் விநியோகத்தில் பிரச்னை இல்லை எனவும் அவர் மேலும் கூறினார். (அ)

## மரண அறிவித்தல்

தோற்றம்
16 - 04 - 1961



மறைவு
23 - 08 - 2022

### கணபதிப்பிள்ளை சுதர்சன் (குழந்தை)

யாழ். சாவகச்சேரி மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், சுவிஸ் Busswil Bern ஐ வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சுதர்சன் (ஈழம் டக்சி உரிமையாளர்) அவர்கள் 23-08-2022 செவ்வாய்க் கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை பார்வதி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தவகுலரட்ணம் மனோன்மணி தம்பதிகளின் அருமை மருமகனும், மனோறஞ்சினி அவர்களின் பாசமிகு கணவரும், நிதர்சன், அகர்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், அபர்னா, சுலேக்கா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரன், ஜெகதீஸ்வரன், மனோகரன் மற்றும் பகீரதன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், மனோகரி, மனோரதி, மாலினி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், லக்சி, சரோன், அஷ்வினி, ஜதீசன், ஆர்யா, அருவி, அதிசயன், வினய், அனன்யா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

பார்வைக்கு :
Wednesday, 24 Aug 2022 10:00 AM – 7:00 PM
Friedhof Brügg Industriestrasse> 2555 Brügg> Switzerland

கிரியை :
Thursday, 25 Aug 2022 1:00 PM – 3:00 PM
Bremgarten cemetery Murtenstrasse 51, 3008 Bern,Switzerland

தகனம் :
Thursday, 25 Aug 2022 3:00 PM
Bremgarten cemetery Murtenstrasse 51, 3008 Bern,Switzerland

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பகீரதன் - சகோதரன்**

தொடர்புகளுக்கு :
**மனோறஞ்சினி(றஞ்சி) - மனைவி** – +41319324384
**நிதர்சன்(நித்து) - மகன்** – +41787300009
**அகர்சன் (அஜி) - மகன்** – +41795510886
**பகீரதன் (பகீர்) - சகோதரன்** – +41789193435
**சிறீ - சகோதரன்** – +41323513794

# யாழில் இருந்து கிளிநொச்சி பயணித்த ரயிலிலிருந்து தப்பியோடிய அலுவலர்கள்

யாழ்ப்பாணம், ஓக. 25

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி நோக்கி நேற்றுக் காலை பயணித்த ராணி ரயிலில் பயணித்த சிலர் பளை ரயில் நிலையத்தில் இடைநடுவில் இறங்கி தப்பியோடியுள்ள சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வழமை போன்று யாழ் ராணி ரயிலில் கிளிநொச்சி நோக்கிப் பயணித்த உத்தியோகத்தர்களில் சிலர் பயணச்சீட்டு பெற்றுக்கொள்ளாது பயணித்துள்ளனர். மிகக் குறைந்த கட்டணமாக உள்ள போதும் அதனை பெற்றுக்கொள்ளாது பயணித்துள்ளனர்.

ஆனால் நேற்று பயணச்சீட்டு பரிசோதனை செய்யும் ரயில் திணைக்கள அதிகாரிகள் பயணிகளிடம் பரிசோதனைகளை மேற்கொண்டபோது ஒரு சிலர் பயணச்சீட்டு இன்றி பயணித்தமை கண்டுபிடிக்கப்பட்டு அவர்களிடம் பயணக் கட்டணமும் தண்டப் பணமும் அறவிடப்பட்டுள்ளது.

அத்தோடு மூன்றாம் வகுப்புக்கு பயணச்சீட்டைப் பெற்றுவிட்டு இரண்டாம் வகுப்பில் பயணித்தவர்களும் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் கிளிநொச்சி நோக்கிப் பயணித்த மேலும் சிலர் ரயில் திணைக்கள அதிகாரிகளின் பரிசோதனைக்கு முன்பாகவே இடைநடுவில் பளை ரயில் நிலையத்தில் இறங்கிச் சென்றமையையும் அவதானிக்க முடிந்ததாக மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ)

## பயங்கரவாத...

இது தொடர்பாக அவர் விடுத்த செய்திக் குறிப்பில்,

பயங்கரவாத தடுப்பு சட்டத்தை இரத்து செய்வதற்கான கோரிக்கை

1979ஆம் ஆண்டு ஆறு மாதங்களுக்கு ஒரு தற்காலிக ஏற்பாடுகள் சட்டமாக கொண்டுவரப்பட்டு, தற்போது, 40 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து செயல்பாட்டில் உள்ள கொடூரமான பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக் கோரி நாடு தழுவிய ரீதியாக கையொப்ப பிரசாரம் ஒன்று இந்த வருடத்தின் தொடக்கத்தில் ஆரம்பிக்கப்பட்டி ருந்தது.

அன்றைய காலகட்டத்தில் அரசாங் கத்துக்கு எதிரான அதிருப்தியை நசுக்கு வதற்கு இது பயன்படுத்தப்பட்டதை நாம் கண்டதோடு, இது தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டு இன்றும் தொடர்கிறது. மிக சமீபத்தில் பயங்கர வாத தடைச்சட்டத்தின் கீழ் தடுப்பு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு மூன்று போராட்டக்காரர்களை தடுத்து நிறுத்த வும், அறகலய அல்லது போராட்டத்தின் பகுதியாக இருந்தவர்கள் மற்றும் அர சாங்கத்தை விமர்சிப்பவர்களுக்கு எதி ராக ஓர் எச்சரிப்பின் செய்தியை அனுப்பு வதாகவும் இது காணப்படுகின்றது.

இந்தச் சட்டம் நீக்கப்பட்டு, அதற்கு பதிலாக சர்வதேச மனித உரிமைகள் தரநிலைகள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்க புதிய சட்டம் இயற்றப்படும் என்று அரசாங்கம் கடந்த காலங்களில் பல உறுதிமொழிகளை வழங்கியது.

எவ்வாறாயினும், அண்மையில் பாரா ளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட திருத் தச் சட்டமூலமானது அத்தகைய உத்தர வாதங்களுக்குப் ஏற்றதாக இல்லாதிருப்ப தோடு பயங்கரவாத தடைச் சட்டத்தில் உள்ள எந்தவொரு கடுமையான விதி களையும் நிவர்த்தி செய்யத் தவறியுள் ளது. உண்மையான சீர்திருத்தங்களின் தோல்விகள் மற்றும் பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் தொடர்ச்சியான பயன்பாடு என்பன மிகவும் கவலையளிக்கிறது.

இத்தகையதொரு சூழலில் பயங்கர வாத தடைச்சட்டத்தை இரத்து செய்யக் கோரி கையெழுத்து பிரசாரத்தை மீண் டும் தொடங்கவுள்ளோம் - என்றுள்ளது. (ஐ-2)

## இனப்படுகொலை...

கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

புகைப்பட பிடிப்பு என்பது சாதாரண விடயமல்ல. இங்கு ஓர் இனப்படுகொலை நடந்தது என்பதற்கு புகைப்படங்களே சான்றுகளாகின. வித்தியாவின் புகைப் படம் வெளியானபோது, அவருடன் அருகில் இருந்த மற்ற பெண்பிள்ளை தொடர்பில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட் டது. அதே பகுதியில் பலர் நிர்வாண மாக்கப்பட்டு கொலை செய்தமை யுத்த குற்றங்களுக்கான சாட்சியங்களாகின.

இவ்வாறான புகைப்படங்கள் எங்கள் ஊடாகவே வெளிவந்தன. அவற்றை நாங் களே கொண்டு சேர்த்தோம். தளபதிகள், போராளிகள் நிர்வாணமாக்கப்பட்டும், கண்கள் கட்டப்பட்டும் கொலை செய் யப்பட்ட படங்கள் முக்கிய ஆவணங்கள் ஆகும். இவை, உலகில் எந்த இடத்திலும் நடந்திராத இனப்படுகொலைக்கான முக்கிய ஆவணங்களாகும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## கடன் சலுகை...

சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு அளித்த நேர்காணலிலேயே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார். மேலும், "சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை எட்டுவது எளிதான காரியமல்ல. கடனை மறுசீரமைக்க வேண்டியதன் அவசியத்தை நாங்கள் சீன அரசாங்கத்திடம் தெரிவித் துள்ளோம். மேலும், அனைத்து கடன் வழங்குநர்களுக்கும் பொதுவான நிலைப் பாடு ஒன்றை முன்வைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் தெரிவித்துள்ளோம்.

"சீனா, நிச்சயமாக, ஒரு வித்தியாச மான அணுகுமுறையை ஏற்றுள்ளது. எனவே, பிற கடன் வழங்குபவர்கள் சீனாவுடன் எவ்வாறான இணக்கத்துக்கு வர முடியும்?", - என்று அவர் இதன் போது கேள்வி எழுப்பினார்.

இதேவேளை, இலங்கைக்கு பல பில் லியன் டொலர் பிணை எடுப்பு வழங்கு வதற்கு முன்னர், கடன் வழங்குநர்களு டன் போதுமான உத்தரவாதங்கள் தேவைப்படும் என சர்வதேச நாணய நிதியம் ஏற்கனவே அறிவித்திருந்தது. இதற்கு கடன் வழங்கிய நாடுகள் உத்தர வாதமளிக்காத பட்சத்தில் நாணய நிதி யத்துடனான ஒப்பந்தத்தை எட்ட முடி யாது போகும் என்பது முக்கியமானது.

தவிர, 2001 முதல் 2021 வரை இலங் கைக்கு சீனா வழங்கிய கடன் கிட்டத் தட்ட 995 கோடி டொலர்கள் என்று சில சுயாதீன பொருளாதார வல்லுநர்கள் மதிப்பிட்டுள்ள நிலையில், நாட்டின் நிலுவையில் உள்ள வெளிநாட்டுக் கடன் 5,100 கோடி டொலர்கள் ஆகும். இலங் கைக்கு 2022 இல் 690 கோடி டொலர் வெளிநாட்டுக் கடன் இருந்தது, ஆனால் வரலாற்றில் முதன்முறையாக வெளிநாட்டு இருப்புக்கள் தீர்ந்து போனதால் ஏப்ரல் மாதத்தில் திருப்பிச் செலுத்தவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சீனாவிடமிருந்து...

செலுத்தப்பட்டுள்ளது. எனினும், நாம் திருப்பியனுப்பிய சேதன உரத்துக்கு பதி லாக சீன நிறுவனம் வேறு உரம் எதனை யும் வழங்க இதுவரை முன்வரவில்லை.

இது தொடர்பான நீதிமன்ற ரீதியான செயல்பாடுகள் இடம்பெற்றுவருகின் றன. அத்துடன், அமைச்சின் மேலதிக செயலாளர் ஒருவர் தலைமையிலான குழுவினர் அந்நிறுவனத்துடன் தொடர்ந் தும் பேச்சு நடத்திவருகின்றனர்.

செலுத்தப்பட்ட பணத்தை மீள பெறுவதற்கான முயற்சிகள் முன்னெடுக் கப்பட்ட போதிலும், அது பலனளிக்க வில்லை.

இரண்டாவது முயற்சியாக குறித்த நிறுவனத்திடம், திருப்பியனுப்பிய சேதன உரத்துக்கு பதிலாக இரசாயன உரம் கோரப்பட்ட போதும் அதற்கும் இணங்கவில்லை.

எமது தரத்துக்கு அமைய உரம் வழங்குவதில் சிக்கல் உள்ளது. அவற்றை சரியான தர மதிப்பீடுகளுக்கு உட்படுத் தக்கூடிய வசதிகள் எமது தர நிர்ணய நிறுவனத்திடமில்லை.

நாட்டுக்கு இத்தகைய நெருக்கடி ஏற் பட்டுள்ள நிலையில், எமக்குரிய பெருந் தொகையான டொலரை வெளிநாட்டில் செயலற்ற வகையில் வைத்திருப்பது நாட்டுக்கு பெரும் நட்டம். இந்த விட யத்தில் இவற்றை தவிர என்னால் வேறு எந்த முயற்சிகளையும் செய்யமுடியாது. எனவே, நீதிமன்றம் ஊடாக இதற்கான தீர்வை எதிர்பார்த்து காத்திருக்கிறோம் - என்றார். (ஐ)

## கடன் வழங்கும்...

லில் மத்திய வங்கி அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இந்த பேச்சின் பின்னர் சர்வதேச நாணய நிதியத்துடன் அதிகாரிகள் மட் டத்திலான உடன்படிக்கையை எட்ட முடியும் என மத்திய வங்கியின் ஆளுநர் அண்மையில் தெரிவித்திருந்தார். இதன் பின்னர், சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக் குழுவின் அனுமதியைப் பெற வேண்டும்.

டிசெம்பர் மாதத்துக்குள் விரிவான கடன் சலுகை திட்டத்தை பெற்றுக் கொள்ள முடியும் என்பதே மத்திய வங்கி ஆளுநரின் நம்பிக்கை என்பதும் குறிப்பி டத்தக்கது. (ஐ)

## துப்பாக்கி சூடுகள்...

உரிமையாளர் ஒருவர் உயிரிழந்தார்.

கொழும்பின் கடுவலையில் இடம் பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் ஒருவர் காயமடைந்தார். மோட்டார் சைக்களில் வந்த இருவரே இந்தத் தாக்கு தலையும் நடத்தி விட்டு தப்பிச் சென் றுள்ளனர். (ஐ)

# உருவாகும் புதிய கூட்டணி அரசியல் சக்தியாக மாறும்!

## உதய கம்மன்பில எம். பி.

கொழும்பு, ஓக. 25

புதிதாக உதயமாகும் எமது அரசியல் கூட்டணி பெரும் அரசியல் சக்தியாக தோற்றம் பெறும்." - என்று பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

"சர்வகட்சி வேலைத்திட்டம் குறித்து பேசப்பட்டாலும் அதற்கான திட்டம் அரசிடம் இல்லை. அது இன்னமும் முன்வைக்கப்படவில்லை. தனியாக அல்லாமல், அனைவரும் இணைந்தே வேலைத்திட்டத்தை உரு வாக்க வேண்டும். அதற்கான அர்ப் பணிப்பு தற்போதைய அரசிடம் இல்லை." - என்றும் அவர் கூறினார்.

சுயாதீன அணிகளின் கூட்டம் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. இச்சந்திப்பின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடு கையிலேயே கம்மன் பில மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

# ஜனநாயக விரோத செயல்கள் நாட்டுக்கு பாதகத்தை தரும்!

## ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 25

நாட்டில் இடம்பெறும் மனித உரி மைகள் மீறல் மற்றும் ஜனநாயக விரோத செயல்பாடுகள் சர்வதேச நாணய நிதியத் தின் ஒத்துழைப்புகளைப் பெற்றுக் கொள்வதிலும் பாதகமான தாக்கத்தை செலுத்தும் - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கபிர் ஹசீம் தெரிவித்தார்.

அத்துடன், சர்வதேச நாணய நிதியத் தின் அங்கத்துவ நாடுகள் இலங்கைக்கு எதிராக அழுத்தம் பிரயோகிக்கத் தொடங் கினால் அதன் விளைவுகள் பாரதூர மானவையாகவே அமையும் என்றும் கூறினார்.

கொழும்பில் எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட் டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா உட்பட சர்வதேசம் பயங்கரவாத தடைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ளன. கடந்த 2015 ஆம் ஆண்டு பயங்ரவாதத் தடைச்சட் டத்தை இரத்து செய்ய வேண்டும் என்று நாம் கூறியபோது இவர்கள் அதற்கு எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

உண்மையான பயங்ரவாதிகளுக்கு எதிராக பயன்படுத்த வேண்டிய இந்த சட்டத்தை, சாதாரண மக்கள்மீதும் பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுவதை அன்றே ஊகித்தமை யாலேயே அதனை நீக்குவதற்கு நாம் நடவடிக்கை எடுத்தோம். அன்று எம்மால் ஊகிக்கப்பட்ட விடயம் இன்று நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டி ருக்கிறது.

இது சர்வதேசத்தின் உதவிகள் அத்தி யாவசியமான காலமாகும். எனவே இந்த சந்தர்ப்பத்தில் சர்வதேசத்தின் எதிர்ப் பிற்கு உள்ளாகக் கூடியவாறான செயல் பாடுகளை அரசாங்கம் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அமெரிக்கா மற்றும் இந்தியா உள்ளிட்டவை சர்வதேச நாணய நிதியத் தின் அங்கத்துவ நாடுகளாகவுள்ளன.

இலங்கையில் இடம்பெறும் மனித உரிமைகள் மீறல் மற்றும் ஜனநாயக விரோத செயற்பாடுகளை சுட்டிக் காட்டி, உதவி வழங்கலை நிறுத்துமாறு அந்த நாடுகளார் சர்வதேச நாணய நிதியத்திற்கு அழுத்தம் பிரயோகிக்க முடியும்.

எனவே, அரசாங்கம் இந்த எச்சரிக் கைகளுக்கு செவி சாய்க்க வேண்டும். அவ்வாறில்லை என்றால் பாரதூரமான விளைவுகளையே எதிர்கொள்ள நேரி டும். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர் களை கைது செய்வதற்கு பதிலாக, ஊழல் மோசடிகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக நடை முறைப்படுத்தினால் பொருளாதாரம் மேம்படும் - என்றார்.

## இனி வரிசை...

சர் மேலும் தெரிவித்தார்.

ஊழியர் சேமலாப நிதியைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பங்களை கையளிப்பதற்கு இணையம் ஊடாக முன்பதிவு செய்துக்கொள்வதற்கு நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

## சர்வதேசத்துக்கு...

ஒத்துழைப்புகளை இலங்கைக்கு பெற முடியாதென சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

"நான் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சராக இருந்தபோது மேற்குறித்த வாக்குறுதியை சர்வதேசத்துக்கு வழங்கி யிருந்தேன். இதனை ஏற்றுக்கொண்டு அப்போதிருந்த ஜனாதிபதி பாதுகாப்பு தரப்பினருக்கு ஆலோசனைகளை வழங் கியருந்தார்", என்றும் கூறினார்.

## நல்லூரான்...

திப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த விஜய சூரிய அறிவுறுத்தியுள்ளார்.

கடந்த வருடம் கோவிட்-19 நோய்த் தொற்று பரவல் காரணமாக நல்லூர் கந்த சுவாமி ஆலய வருடாந்தத் தேர்த் திருவிழா கட்டுப்பாடுகளுடன் நடை பெற்றது. எனினும் இம்முறை வழமை போன்று பல இலட்சம் பேர் பங்கேற்பர்.

வெளிநாடுகளிலிருந்தும் பல்லாயிரக் கணக்கானோர் நல்லூரானை தரிசிக்க வருகை தந்துள்ளனர். அதனால் திருடர் களின் கைவரிசை அதிமாக இருக்கும். அத்துடன், வீட்டில் ஒருவராவது தங்கி யிருப்பதுடன் அல்லது பாதுகாப்பாக வீட்டை பூட்டி ஆலயத்துக்கு செல்லுங் கள்.

வழமைபோன்று சீருடை மற்றும் சிவில் உடையில் பொலிஸார் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். எனினும், திரு டர்கள் மற்றும் கொள்ளையர்களின் நட வடிக்கைகள் தொடர்பில் எச்சரிக்கையு டன் செயல்பட வேண்டும்.

ஆலயத்துக்கு வருகை தரும் அடிய வர்கள் தமது தங்க நகைகள் மற்றும் பணத்தை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். இயன்றளவு நகைகளை அணிவதைக் குறைப்பதுடன் பணத்தை எடுத்துவருவதையும் தவிர்க்கவேண்டும்.

பெருமளவு பொலிஸார் பொலிஸார் உற்சவ காலக் கடமையில் அமர்த்தப்பட் டுள்ள போதும் பல்வேறு நடவடிக்கை களை அவர்கள் கண்காணிக்கவேண்டும் - என்றும் கூறினார். (ஐ-3)

ஈழநாடு
Eelanadu

# மீண்டும் தலைதூக்கும் கொரோனா சுகாதார அமைச்சு அக்கறையில்லை

## சுகாதார பரிசோதகர்கள் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக. 25

**"இலங்கையில் கொரோனா பரவல் எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் சமூகத்தில் அடிமட்டத்திலிருந்து அதிகரித்துள்ளது. இருப்பினும் இந்தக் கொரோனா நிலைமை மற்றும் காய்ச்சல் பாதிப்புக்களை சுகாதார அமைச்சகம் மற்றும் அரசு கருத்தில்கொள்ளவில்லை."**

-இவ்வாறு பொதுச்சுகாதார பரிசோதகர்கள் ஒன்றியத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

தடுப்பூசி திட்டத்தால் ஏற்பட்ட நோய் எதிர்ப்பு சக்தியால் கொரோனா நோய் ஓரளவு கட்டுக்குள் வந்தது. எனினும், எந்த நேரத்திலும் பேரழிவு நிலை உருவாகலாம்.

கிராமப்புறங்களில் கண்டறியப்பட்ட காய்ச்சல், பெரும்பாலும் கொரோனாப் பாதிப்புக்களாகவே அடையாளம்காணப்பட்டன.

இருப்பினும் இந்தக் கொரோனா நிலைமை மற்றும் காய்ச்சல் பாதிப்



புக்களை சுகாதார அமைச்சகம் மற்றும் அரசு கருத்தில்கொள்ளவில்லை.

எனவே, கொரோனா பரவல் எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் சமூகத்தில் அடிமட்டத்திலிருந்து அதிகரித்துள்ளது.

பாதிக்கப்பட்ட மாணவர்களைப் பாடசாலைகளுக்கு அனுப்புவதால் பாடசாலைகளில் கொரோனா பாதித்த மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

எந்தவொரு சுகாதார வழிகாட்டுதல்களுக்கும் ஆலோசனைகளுக்கும் உரிய கவனம் செலுத்தப்படாமல் பல சமூகக்கூட்டங்கள் இப்போது நடைபெறுகின்றன.

இந்தநிலையில், கொரோனா வைரஸ் மீண்டும் பரவினால், இதுபோன்ற நிகழ்வுகளை ஏற்பாடு செய்த அமைப்பாளர்கள் மீது எமது தொழிற்சங்கம் சட்ட நடவடிக்கை எடுக்கும்-என்றார். (அ)

# அனுதாப அரசியலை முன்னெடுக்கவே உலகம் சுற்றி வருகின்றார் கோட்டாபய

## குற்றம்சாட்டுகின்றார் ஹிருணிக்கா

கொழும்பு, ஒக. 25

"அனுதாப அரசியலை முன்னெடுப்பதற்காகவே முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உலகம் சுற்றி வருகின்றார்." - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் ஹிருணிக்கா பிரேமசந்திர நேற்று குற்றஞ்சாட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

கோ ஹோம் கோட்டா என்றே



நாம் வலியுறுத்தினோம். மாறாக அவரை வெளிநாடு செல்லுமாறு அழுத்தம் பிரயோகிக்கவில்லை. அவர் வெளிநாட்டில் இருப்பது எமக்கும் அவமானம். கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பவேண்டும்.

ஆனால் அனுதாபம் திரட்டவே அவர் மனைவியுடன் உலகம் சுற்றுகின்றார். மக்களால் நிராகரிக்கப்பட்ட கோட்டா, அரசியலில் இனி எந்த பதவியை வகித்தாலும் மக்கள் ஏற்கமாட்டார்கள்.அதே வேளை, போராட்டக்கா ரர்கள் வேட்டையாடப்படுவது உடன்நிறுத்தப்பட வேண்டும்-என்றார். (அ)

# கோட்டாவின் வீட்டுக்கு பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு, ஒக. 25

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் மிரிஹான வீட்டுக்கான பாது காப்பு மேலும் பலப்படுத்துவ தற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த வீட்டுக்கு ஏற்கனவே பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத் தப்பட்ட படையினரின் எண் ணிக்கையை விட, தற்போது அதிகளவான அதிரடிப் படை யினர் கடமையில் ஈடு படுத்தப் பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய நேற்று இலங்கை திரும்புவார் என முன்னர் அறிவித் திருந்த போதிலும், அவரது வருகை இரண்டு வாரங்கள் தாம தமாகும் என்ற தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத் தக்கது. (அ)



# கொரிய மொழி ஆசிரியை கோர விபத்தில் உயிரிழப்பு!

கொழும்பு, ஒக. 25

கொழும்பு வெளிவட்ட வீதியில் சப்புகஸ்கந்த பிரதேசத்தில் நேற்று முன் தினம் இரவு லொறியுடன் கொரிய மொழி ஆசிரியர் ஒருவர் பயணித்த சொகுசு ஜீப் மோதி விபத்துக்குள்ளானதில் ஜீப் சாரதிக்கு லேசான காயம் ஏற்பட்டதாகவும் ,கொரிய மொழி ஆசிரியர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாகவும் அத்துருகிரிய போக்குவரத்து கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

கோனஹேன வீதி, கடவட, ரம்முத்துகல பகுதியைச் சேர்ந்த கிதானி மானெல் பிரியந்தி (வயது 47) என்ற ஒரு பிள்ளையின் தாயே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

மாபிள் ஏற்றப்பட்ட லொறி மாத்தறையிலிருந்து கடவத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது, அதே திசையில் பின்னால் வந்த சொகுசு ஜீப் லொறியின் பின்பகுதியில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

லொறி மீது ஜீப் மோதியவுடன், அது குப்பைக் குவியலாக மாறியது. ஆசிரியர் அடையாளம் தெரியாத அளவுக்கு பலத்த காயமடைந்தார் என்று பொலிஸார் கூறினர்.

கடவத்தை வெளியேறும் முகத்துவாரத்திலிருந்து சுமார் இரண்டு கிலோமீற்றர் தொலைவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஜீப் சாரதியின் கவனக்குறைவு மற்றும் அதிவேகமே விபத்துக்கு காரணம் என பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

லொறியின் சாரதி கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (அ)

# ரஞ்சன் விடுதலையில் தாமதம் இல்லையாம்!

கொழும்பு, ஒக. 25

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு பொதுமன்னிப்பு வழங்கும் பத்திரங்களில் இனியும் தாமதிக்காமல் கையொப்பமிடுவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார் என சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். சிறைத்தண்டனை அனுபவித்து வரும் ரஞ்சனின் விடுதலைக்கு தேவையான உரிய பத்திரங்களில் கையொப்பமிட்டு மன்னிப்பு வழங்குவதாக ஜனாதிபதி உறுதியளித்தார் என அவர் கூறினார். (அ)

# கெர்னருக்கு எதிரான பிடியாணை தளர்வு!

கொழும்பு, ஒக. 25

சமூக ஊடக செயற்பாட்டாளர் பதும் கெர்னர் நீதிமன்றத்தில் சரணடைந்ததையடுத்து, அவருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட பிடியாணையை கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் நேற்று மீளப்பெற்றுள்ளது.

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தொடர்பில் நீதிமன்றில் முன்னிலையாகாமல் இருந்தமைக்காக பதும் கெர்னரை கைது செய்யுமாறு கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுனாவல ஓகஸ்ட் 23ஆம் திகதி பிடியாணை பிறப்பித்திருந்தார்.

ஜனாதிபதி சட்டத்தரணி ரியன்சி அரசகுலரத்ன மற்றும் சட்டத்தரணி உதார முஹந்திரம்கே ஆகியோருடன் பதும் கெர்னர் நீதிமன்றில் சரணடைந்தார்.

அடுத்த விசாரணைத் திகதி தொடர்பில் தவறான புரிதல் காரணமாக தமது சட்டத்தரணி கடந்த செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் ஆஜராக இயலவில்லை என பிரதிவாதி சட்டத்தரணி நீதிமன்றில் சமர்ப்பித்தார்.

கெர்னர் நீதிமன்றத்தில் மன்னிப்புக் கேட்டு, தொடர்ந்து நீதிமன்றத்தில் ஆஜராக உறுதி அளித்தார்.

மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுனாவல, சந்தேகநபரை நீதிமன்றத்தை தப்ப வேண்டாம் என அறிவுறுத்தி மேலதிக நீதவான் விசாரணையை நவம்பர் 29ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

ஜூலை 13 அன்று பொல்துவ சந்திக்கு அருகில் நடைபெற்ற வன்முறைப் போராட்டத்தின்போது பொதுச் சொத்து சட்டத்தின் கீழ் குற்றங்களைச் செய்ததற்காக பதும் கெர்னர் கைது செய்யப்பட்டார். அவர் தற்போது பிணையில் உள்ளார். (அ)

# கடற்றொழில் சார்ந்த சட்டவிரோத செயல்களை தடுக்கப் பொறிமுறை!

## அமைச்சர் டக்ளஸ் அறிவிப்பு

கொழும்பு, ஒக. 25

கடற்றொழில்சார் சட்ட விரோத செயல்பாடுகள் அனைத்தையும் கட்டுப்படுத்தும் வகையிலான 24 மணித்தியாலங்களும் செயல்படும் பொறிமுறை ஒன்றை கடற்படையினருடன் இணைந்து உருவாக்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அத்துடன், மண்ணெண்ணெய் விநியோகம் மீண்டும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில், நாடளாவிய ரீதியில் உள்ள கடற்றொழிலாளர்களுக்கும் மண்ணெண்ணெய் கிடைப்பதை உறுதிப்படுத்துவதுடன், அது தொடர்பான அறிக்கையை தனக்கு சமர்ப்பிக்குமாறும் கடற்றொழில் அமைச்சர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை கடலட்டை வளர்ப்பு தொடர்பாக குறித்த கலந்துரையாடலில் பிரஸ்தாபிக்கப்பட்ட நிலையில், இந்தியா மற்றும் சீனா போன்ற நாடுகளை சேர்ந்த தனியார் முதலீட்டாளர்கள் ஆர்வம் செலுத்தி வருகின்றமையினால், அவர்களைப் பயன்டுத்தி, உடனடித் தேவையாக எமக்கு இருக்கின்ற கடலட்டை குஞ்சு பொறிக்கும் நிலையங்களை நவீன தொழில்நுட்பத்துடன் உருவாக்க வேண்டும் எனவும் கற்றொழில் அமைச்சர் தெரிவித்தார்.

கடற்றொழில் அமைச்சில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்ற இக்கலந்துரையாடலில், கடற்றொழில் அமைச்சின் செயலாளர், கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் உட்பட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.08.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# அரோகரா

# நல்லூர் கந்தசுவாமி கோயில் தோற்றமும் வரலாறும்!

ஈழநாடு

## நல்லூர் தேர்த்திருவிழா சிறப்பிதழ்



நல்லூர் கந்தசுவாமி கோயில் யாழ்ப்பாணத்து அரசனான கூழங்கை சக்கரவர்த்தியின் அமைச்சரான புவனேகபாகு என்பவனால் கட்டப்பட்டது என்று யாழ்ப்பாண வைபவ மாலை கூறுகிறது. ஆனால், நல்லூர் கந்தசுவாமி கோயில் செண்பகப் பெருமாள் என அழைக்கப்பட்ட பின்னாளில் கோட்டை இராச்சியத்தின் மன்னனான ஆறாம் புவனேக பாகுவால் கட்டப்பட்டது என்றும் கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தை அரசாண்ட கனகசூரிய சிங்கை ஆரிய மன்னனை வென்று 1248 ஆம் ஆண்டு இந்தக் கோயில் அமைக்கப்பட்டது என்று கூறப்பட்டாலும் கோயில் கட்டப்பட்ட ஆண்டை வரலாற்று ஆசிரியர்களால் திட்டவட்டமாகக் கூற முடியவில்லை. எனினும், இந்த ஆலயம் 10ஆம் நூற்றாண்டிலேயே அமையப்பெற்றது என்று பொதுவாகக் கூறுவர்.

எனினும், தற்போது அமைந்துள்ள நல்லூர் கந்தசுவாமி ஆலயம் மூன்றாவது கோயில் கட்டுமானம் என்று கூறப்படுகின்றது.

புராதன ஆலயத்தை யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபோது செண்பகப் பெருமாள் அழித்தான் என்றும், பின்னர் அவன் எழுப்பிய ஆலயத்தை 1620இல் போர்த்துக்கேயர்கள் அழித்தார்கள் என்றும் கூறப்படுகின்றது.

தற்போது அமையப்பெற்ற நல்லூர் ஆலயம், ஒல்லாந்தர் ஆட்சியில் அரச பணியில் இருந்த தொன்ஜூவான் இரகுநாத மாப்பாண முதலியாரால் கட்டப்பட்டது. முருகன்மீது கொண்ட பக்தியால் தனது சொந்த நிலத்தைக் கொடுத்து ஆலயத்தை கட்டினார் என்று கூறப்படுகின்றது. அக்காலத்தில் ஆலயத்தை கட்டுவதற்கு ஒல்லாந்து அரசாங்கத்தின் அனுமதி கட்டாயமானது. இரகுநாத மாப்பாண முதலியார் அதிகாரம்மிக்க அரச அதிகாரியாக இருந்ததால் இந்தப் பணி சாத்தியமானது என்று கூறப்படுகின்றது.

1734 ஆம் ஆண்டு சிறிய ஆலயமாக இந்த நல்லூர் கோயில் நிறுவப்பட்டது. முருகப் பெருமானின் பெருவிருப்பத்தின் பேரிலேயே இந்த இடம் தெரிவானது.

ஆலயத்தை கட்டுவித்த இரகுநாத மாப்பாண முதலியாரின் சந்ததியினரே இந்த ஆலயத்தை இன்றுவரை நிறுவி வருகின்றனர். இந்த வகையில், ஆலயத்தின் 11ஆவது பரிபாலகராக சயந்தன மாப்பாண முதலியார் திகழ்கிறார்.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் 1921 ஆம் ஆண்டு அர்ச்சனை பற்றுச்சீட்டாக ஒரு ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. சைவ ஆலயங்களில் முதன் முறையாக அர்ச்சனை பற்றுச் சீட்டு வழங்கும் நடைமுறை இங்கேயே தோற்றம் பெற்றது. எனினும், அன்றுமுதல் இன்றுவரை அர்ச்சனை சீட்டு ஒரு ரூபாயாகவே இருப்பது சிறப்புக்குரியது.

நல்லூர் ஆலயத்தின் மற்றோர் சிறப்பு நேரம் தவறாமையாகும். பூசைகள் விழாக்கள் ஏனைய ஆலயப் பணிகள் அனைத்தும் நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் செயல்படுத்தப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது. ●

இல்லத்தரசிகளின் அரசன்
V.S.P. நல்லெண்ணெய்



போலிகளைக் கண்டு ஏமாறாமல்
V.S.P. நல்லெண்ணெய் வாங்கும் போது
பரிமளா ஸ்டோர்ஸ்
இல. 26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்
என்ற முகவரியைப் பார்த்து வாங்கவும்








பூப்பெய்திய மங்கையர்க்கும்
மகப்பேற்று தாய்மார்களுக்கும் என்றென்றும் மகத்துவமானது
V.S.P. நல்லெண்ணெய்

முகவர்கள் :
ஸ்ரீ விநாயகர் சுப்பர் மார்கெட்,
இல.60 திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை.
மகாராஜா Food City
8/3 Dr.E.R. Cooray மாவத்தை, வெள்ளவத்தை, கொழும்பு.

சுகந்தன்ஸ்
13A, மன்னார் வீதி, வவுனியா.
சண்முகா ஏஜென்ஸி,
159, திருமலை வீதி, மட்டக்களப்பு.

தொடர்புகளுக்கு :
021 222 4135, 021 222 9165

பரிமளா ஸ்டோர்ஸ்
இல. 26A, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

# ‘யாமிருக்க’ பயமேன் என்பதன் பிரதிபலிப்பான ஸ்ரீ குமார கோபுரம்!

அனந்த பாலகிட்ணர்

ஒரு சில தினங்களுக்கு முன்னர் நல்லூரில் அழகிய புதிய கோபுரத்துக்கு கலசாபிஷேகம் பக்திபூர்வ மான முறையில் இடம்பெற்றிருந்தது. இப்புதிய கோபுரம் ஸ்ரீகுமார கோபுரம் என்றழைக்கப்படு கின்றது.

1964ஆம் ஆண்டு முதல் இந்த ஆண்டுவரை 58 ஆண்டுகள் நல்லைக் கந்தனுக்கே தன்னை முழுமையாக அர்ப்பணித்து இறைபணியாற்றி மறைந்த நல்லூர் திருத்தலத்தின் பத்தாவது நிர்வாகியான குமாரதாஸ் மாப்பாண முதலியார் நினைவாகவே ஸ்ரீ குமார கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது.

நல்லைக்கந்தன் ஆலயத்தின் வடக்கு குபேர திசை யில் அமைந்துள்ள குமார இராஜ கோபுரத்துக்கு உள்ளக கோபுரமாக குபேர திக்கு குமார கோபுரம் மற்றும் மணிக்கோபுரம் ஆகியவை இந்த ஆண்டு அமைக்கப் பட்டு கலசாபிஷேகம் செய்யப்பட்டி ருந்தன.

இப்புதிய கோபுரம் நல்லைக் கந்தனிடம் தன்னை முழுமையாக அர்ப்பணித்து திருப்பணிகளைச்செய்த குமாரதாஸ மாப்பாண முதலியார் நினைவாக அமைக்கப்பட்ட கோபுரமாக அடியவர்களுக்கு புலப்படலாம். ஆனால், தனது மூதாதையர்களான நல்லைக் கந்தன் ஆலய நிர்வாகி களைவிட பெரும் சவால்களை சந்தித்தவரே குமாரதாஸ மாப்பாண முதலியார் என்பது குறிப்பிடத்தக்கது.

குமாரதாஸ மாப்பாண முதலியாரின் நிர்வாகக் காலப்பகுதியில் ஆலயத்தின் அனைத்து திசைகளிலும் இந்தியாவின் மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் காணப்படுவது போல வானுயர்ந்த கோபுரங்கள் தோற்றம் பெற்றன. மிக கம்பீரமாக யாழ்ப்பாண மண்ணின் கந்தபுராண வாழ்வியல் முறையை பிரதி பலிப்பதாக இக்கோபுரங்கள் விளங்கியிருக்கின்றன.

அழகுற அமைக்கப்பட்டுள்ள கிழக்கு, தெற்கு , வடக்கு கோபுரங்களின் பின்னணியில் நல்லைக் கந்தன் ஆலயத்துக்கு மேலும் மெருகூட்டுவதாகவே புதிதாக அமைக்கப்பட்ட ஸ்ரீ குமார கோபுரத்துக்கு கடந்த வெள்ளிக்கிழமை (19 ஆம் திகதி) கலசாபிஷேகம் செய்யப்பட்டிருந்தது.

நல்லைக்கந்தன் ஆலய நிர்வாகம் இப்புதிய கோபு ரம் பற்றி குறிப்பிடுகையில் இந்த ஆண்டு மறைந்த நல்லையம்பதியின் பத்தாவது நிர்வாகியான குமாரதாஸ மாப்பாண முதலியார் நினைவாக அமைக்கப்பட்டதே இக்கோபுரம் எனக்குறிப்பிட்டிருந்தனர்.

குமாரதாஸ மாப்பாண முதலியார் நினைவாக புதிய கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிடுவதை விட அப்பெரியாரின் உயரிய முருக பக்திக்கும் அவருக்கு நல்லைக்கந்தன் எவ்வளவு தூரம் “யாமிருக்கப் பயமேன்” என்று துணை நின்றார் என்பதை புலப்படுத்து வதாகவே புதிய கோபுரம் விளங்குகின்றது என்று குறிப்பிடுவதே பொருத்தமானதாகும்.

குமாரதாஸ மாப்பாண முதலியார் 1964ஆம் ஆண்டு நல்லைக்கந்தன் ஆலய நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அதன்பின்னர் எழுபதுகில் அவரின் திருப் பணிகள் உத்வேகம் பெறத்தொடங்கின. நல்லூர் கோபுர வாசலின் திருவாசி வடிவில் அமைந்த மணிமண்டபம், நல்லூர் தேரடி தேர் முட்டியின் புதுப்பொலிவு என்ப வற்றோடு , நல்லூர் பழனியாண்டவர் சந்நிதியை உள்ள டக்கிய தீர்த்தக் கேணியையும் ஆறுமுகசுவாமி வாசல் கோபுரத்தையும் ஊடறுத்துச் சென்ற வீதியை உள்வாங்கி ஆலய விஸ்தரிப்பை குமாரதாஸ மாப்பாண முதலியார் எந்தவித பூசல் பிணக்குகளுக்கும் இடமின்றி அழகுற அமைத்திருந்தார்.

உள்வாங்கப்பட்ட வீதிக்குப் பதிலாக புதிய தெற்கு வீதியை ஆலய நிலப்பகுதியூடாக அமைத்து அதனை அண்டியதாக அருணகிரிநாதர் தலத்தோடு பூங்கா வொன்றையும் குமாரதாஸ மாப்பாண முதலியார் வடிவமைத்திருந்தார்.

ஆண்டுதோறும் உயரிய கட்டடக்கலை அம்சங்க ளோடு முருகனுக்கு தன்கடன் பணிசெய்து கிடப்பதே என்ற வகையில் குமாரதாஸ மாப்பாண முதலியார் செய்து வந்திருந்தார்.

யாழ்பாண மண்ணை எடுத்துக்கொண்டால் திரும்பு மிடமெல்லாம் சிறிதும் பெரிதுமாக ஆலயங்கள்




இருப்பதையும் அதிகாலை வேளையில் திக்குத்திக்காக மணியோசைகள் ஒலிக்க யாழ்ப்பாண மக்கள் விழித்தெழுவதையுமே வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

இருந்தபோதிலும் எண்பதுகளில் முழு யாழ்ப்பாணக் குடாநாடுமே ஒரு ‘சபிக்கப்பட்ட பூமி’ போல சொல் லொணா இடர்பாடுகளை சந்தித்திருந்தது. இதனை யாழ்ப்பாணத்தின் ஞானசித்தராக இருந்த சிவயோக சுவாமிகள் தமது காலப்பகுதியிலேயே அனுமானித்துக் கூறியிருந்தார். கூடவே எத்தகைய அபாயகரமான சூழ்நிலைகள் தோன்றினாலும் யாமிருக்கப்பயமேன் என்று நல்லைக்கந்தன் அபயமளித்து நிற்பான் என்பதை பாடல் வரிகளாக சிவயோக சுவாமிகள் கூறியிருந்தார். யோகரின் பாடல் இதுவே:

“பஞ்சம் படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி - கிளியே
ஆறுமுகன் தஞ்சமடி“

இந்தப் பாடலடி போலவே எண்பதுகளில் யாழ்ப் பாணக் குடாநாடு வெந்தது, பஞ்சம் நிழலாடியது. மக்கள் அகதிகளாக அல்லலுற்றுத் திரிந்தனர். திரும்பு மிடமெல்லாம் யுத்தம் குண்டுமாரி பொழிய வைத்திருந் தது.

வங்கிகள் கொள்ளையிடப்பட்டன. ஆலயங்கள்கூட அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகின. கொலைவெறி தாண்டவமாடியது. அமைதியாக வாழ்ந்த மக்கள் புலம்பெயர ஆரம்பித்தனர்.

அக்காலப்பகுதியில் நல்லைக்கந்தன் ஆலய நிர்வாகியாக இருந்த குமாரதாஸ மாப்பாண முதலியா ரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருந்தார். இருந்தபோதி லும் அவரில் ஊறித்திளைத்திருந்த முருகபக்தி அவரை துணிச்சலோடு அவருக்கு ஏற்பட்ட சவால்களை எதிர்கொள்ள வைத்திருந்தது. நல்லைக்கந்தன்மீது அவர் கொண்டிருந்த அபார பக்தியின் வெளிப்பாடாகவே அவர் சந்தித்த பிரச்னைகள் யாவும் சூரியனைக் கண்டு உருகி மறைந்த பனித்துளிகள் போலாயின.

ஒரு சமயம், யாழ்ப்பாண பல்கலைக்கழக மாண வர்கள் அப்போது நிலவிய யுத்தத்தோடு இழையோடியி ருந்த யாழ்ப்பாண சமூக சூழ்நிலைகளை ‘மாய மான்’ என்ற தலைப்பிலான வீதி நாடகமாக நடத்தி வந்தனர். அச்சமயம் நல்லைக்கந்தன் திருவிழாக் காலமொன்றின் போது சுவாமி வீதி உலா நிறைவுற்றதும் பக்தர்களை பலவந்தமாக நிறுத்தி ஆலய முன்புறத்தில் ‘மாயமான்’ நாடகத்தை நடித்துக்காட்டினர்.

அவ்வேளையிலும் குமாரதாஸ மாப்பாண முதலியார் ஆலய நேர விதிமுறைகளுக்கு அமைவாக சுவாமி வீதி உலா நிறைவுற்றதுமே ஆலய கோபுர வாசல் கதவை மூடி உட்பிரகாரத்தினுள் எவ்வித பிரச்னைகளும் வரா திருப்பதை உறுதிசெய்திருந்தார்.

அண்மையில் தமிழக பாரதிய ஜனதா கட்சி தலைவர் கே. அண்ணாமலை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தி ருந்தார். அப்போது நல்லைக்கந்தன் ஆலயத்துக்கும் சென்று அவர் சுவாமி தரிசனம் செய்திருந்தார். ஆலயத் தின் தூய்மை, நேரந்தவறாமை, நிர்வாகம், கட்டடக் கலை அம்சங்கள் போன்ற அனைத்தையும் பார்த்து வியந்த பா.ஜ.கவின் கே. அண்ணாமலை தமிழ கம் திரும்பியதும் வழங்கிய பேட்டியில் நல்லைக்கந்தன் ஆலய சிறப்பை வாயாரப் புகழ்ந்திருந்தார்.

தமிழ் நாட்டில் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்துமத ஆலயங்கள் ஏராளமாக இருந்தாலும் யாழ்ப்பாணத்தின் நல்லைக்கந்தன் ஆலய நிர்வாகச் சிறப்புக்கு அவை எதுவும் ஈடாகாது என்று அண்ணாமலை குறிப்பிட்டிருந்தார். நல்லூர் கந்தன் ஆலயத்தின் நேரந்தவறாமை மற்றும் தூய்மை என்பவை தம்மை பெரிதும் கவர்ந்ததாக குறிப்பிட்ட கே. அண்ணாமலை, தமிழ்நாட்டிலே ஆலயங்கள் பலவும் நிர்வாக மற்றும் முகாமைத்துவ பிரச்னைகளால் அல்லலுற்றிருக்கின்ற தருணத்தில் இலங்கை யின் நல்லூர் ஆலய நிர்வாகம் தம்மை பெரி தும் கவர்ந்ததாக கே. அண்ணாமலை குறிப்பிட் டிருந்தார். அத்துடன், வரலாற்றுச்சிறப்பும் பிரமாண்டமான கட்டிட நிர்மாணங்களையும் கொண்டுள்ள நல்லூர் ஆலய நிர்வாகம் தனி ஒரு முகாமையாளரால் பூசல் , பிணக்குகள் இன்றி நிர்வாகிக்கப்படும் திறமை பாராட்டப் படக்கூடியது எனவும் கே. அண்ணாமலை குறிப்பிட்டிருந்தார்.

கே. அண்ணாமலை இந்திய ஆளுங்கட்சி யான பா.ஜ.கவின் தமிழக தலைவர் மட்டு மல்ல. ஒரு முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியுமாவார். எனவே கடமை, கண்ணி யம், கட்டுப்பாடு என்பவை பற்றி நன்கறிந்தவரான கே. அண்ணாமலையின் நல்லூர் கந்தன் ஆலயம் பற்றிய கணிப்பு அதன் முக்கியத்துவத்தை தெளிவுற சுட்டிக்காட்டு வதாகவே இருக்கின்றது.

எனவே ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக நல்லைக்கந்தனுக்கு அரும்பணியாற்றிய குமாரதாஸ மாப்பாண முதலியார் நினைவாக நல்லூர் ஆலய உட்பிரகாரத்தில் அமைந்துள்ள புதிய குமார கோபுரம் “என் கடன்பணி செய்து கிடப்பதே” என்று முருகனுக்கே தன்னை முழுமையாக அர்ப்பணித்த அப்பெரியாருக்கு செலுத்தக்கூடிய உயரிய நினைவுச்சின்னமாகவே அமைந்துள்ளது.



# ஆர் அறிவார் அந்த அண்ணலின் பெருமையை!

கலாநிதி ஆறு. திருமுருகன்

சரித்திரப் பிரசித்திபெற்ற நல்லூர் கந்தப்பெருமானின் தேர்த்திருவிழா இன்றாகும். நல்லூர் கந்தனின் சிறப்பு சொல்லில் வடிக்க முடியாது. குகஸ்ரீ அமரர் இரகுநாத மாப்பாண முதலியாரின் பரம்பரையில் வந்தவர்களால் இன்றைய ஆலயம் நன்முறையில் கட்டிக் காப்பதை யாவரும் அறிவர். இவ்வாலயத்தின் வளர்ச்சியில் அரைநூற்றாண்டுகளுக்கு மேல் தன்னை முழுமையாக அர்ப்பணித்து கோயிலை மகோன்னத நிலைக்கு கொண்டுவந்தவர் ஆலயத்தின் 10ஆவது அறங்காவலரான குகஸ்ரீ குமாரதாஸ் மாப்பாண முதலியார் அவர்கள். 15.12.1964 முதல் 09.10.2021 வரை இப்பெருமகனார் கண்ணை இமை காப்பது போல் நல்லைக் கந்தன் சந்நிதானத்தை நாளும் பொழுதும் அயராது காப்பாற்றினார். எளிமையான தோற்றம், எவருடனும் வீண்வார்த்தை பேசாது மறைந்து நின்று கோவில் கடமைகளை மானசீகமாக நிறைவேற்றினார். அலங்காரக் கந்தனுக்கு எண்ணிறைந்த ஆபரணங்களால் அலங்கரித்து காண்பவர்களை கருணை மழைக்குள் ஆட்படுத்திய இப்பெரியார் தனது உடம்பில் ஒரு சிறிய ஆபரணம்கூட சேர்க்காது ஒதுங்கியே நின்று தானும் பக்தர்களோடு ஒருவராக வழிபாடு செய்த காட்சி உள்ளத்தை உருக்குகின்றது. எந்த ஒரு மேடையையும் என்றுமே சந்திக்காத ஓர் ஆன்மீகத் தலைவர் இவர்.

பட்டாடை ஏதுமில்லை, பொன்னாடை மாலை மரியாதை எதையும் சந்தித்ததில்லை, பொது வைபவங்கள் எவற்றிலும் தோன்றியதில்லை. காலை முதல் மாலை வரை கந்தன் சந்நிதானமே சொர்க்கம் என்று கருதிய ஆத்மா. ஆலயத்தில் நேரம் தவறாத பூசை வழிபாடுகள் நடைபெறுவதற்கும் அந்தணர்கள், பணியாளர்கள் சீராக பணிசெய்வதற்கும் இந்த ஆத்மாவின் ஆற்றுப் படுத்தல் சிறப்பை யார்தான் அறிவர்? கோயில் விழாவில் யாருடனும் சீறிச் சினப்பதில்லை. ஆனால், அவரின் ஞானக் கண் ணுக்கு தவறிழைப்பவர்கள் அகப்பட்டு விடுவார்கள். கோயிலுக்கு பொருத்த மில்லாதவர்களை முருகன் ஏற்கவில்லை என்று சொல்லிவிடுவார்.

ஒருசில வார்த்தைகளே பேசுவார் அவையாவும் மருந்துபோல அமைந்த வையே. எவ்வளவு நட்புறவு இருந்தாலும் கோவில் பூசை வேளையில் அவர் சிரித்தது கிடையாது. அவரை விளங்கிய வர்கள் அவரை கண்டவுடன் தாங்களாகவே விலத்தி தங்களுக்குள்ளேயே எஜமானைக் கண்டோம் என்று பூரிப்படைவார்கள். 21ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் எஜமானர் என்று உயர் கௌரவத்தோடு அழைக்கப்படுபவர்கள் நல்லூர் அறங்காவலர்கள் மட்டுமே. குறியில்லாத தோய்த்துலர்ந்த வேட்டி, சால்வை, கைகளில் திறப்புக் கோர்வை, திடீர்



திடீரென கோயில்களின் மூலைகளில் நின்று முற்றாக அவதானித்துக் கொண்டே இருப்பார். காணுதற்கு அரிய கடவுளைக் காண்பது போல் பக்தர்கள் இவரைக் கண்டால் ஆனந்தம் கொள்வார்கள்.

புகைப்படம் ஏதும் எடுத்ததில்லை, பிரசுரம் எதிலும் இவர் பெயரைக் காண முடியாது. நல்லூர் சம்பிரதாயம் தனித்துவமானது எனத் தன்னை அர்ப்பணித்து நிலைநாட்டினார். 50 ஆண்டுகளுக்கு மேல் நல்லூர் கந்தனை தேசம் போற்றும் தெய்வீகத் திருத்தலமாக வளர்த்தெடுத்த இப்பெருமகனார் இந்த ஆண்டு எம்மத்தியில் இல்லையே என நினைக்கும் பொழுது இதயம் கனக்கிறது.

இவரின் இறுதி ஊர்வலம் நல்லூர் வாசஸ்தலத்திலிருந்து செம்மணி நோக்கி புறப்பட்டபோது இறப்பு ஊர்வலமாகத் தெரியவில்லை. இறை ஊர்வலமாகவே தெரிந்தது. இறப்பிலும் மாலையில்லை, மலர்வளையம் ஏதுமில்லை, அஞ்சலி உரை எதுவும் இல்லை. நெய்யால் நிரப்பப்பட்டு அக்கினியோடு சேர்க்கும் போது எங்கள் அகம் அழுதது! புறம் ஏதோ ஒரு யாகத்தில் கலந்துகொண்டது போல் இருந்தது. அப்பெருமகனார் இல்லாமல் அவர் காட்டிய வழியில் நல்லூர்ப் பெருவிழா மேலும் சிறப்பாக நடைபெறுகிறது. நல்லூர் முருகன் திருவடியில் தந்தை வழிகாட்ட தனயன் 11ஆவது நிர்வாகி அறங்காவலர் குகஸ்ரீ சயந்தன மாப்பாண முதலியார் ஆலயத்தை அற்புதமாக வழிநடத்துகிறார். என்ன புண்ணியம் செய்தோம் எம்வாழ்நாளில் நல்லூரின் அழகும் நல்லூரை ஆற்றுப்படுத்தும் அறங்காவலர் சிறப்பும் கண்களால் கண்டு ஆனந்திக்கும் வாழ்வு. நல்லூர்க் கந்தனின் இன்றைய சிறப்பை நினைக்கும்போதெல்லாம் 10ஆவது அறங்காவலர் குகஸ்ரீ குமாரதாஸ் மாப்பாண முதலியார் நிழலாக எம்முன் நிற்பதை உணர்கிறோம்.

ஆர் அறிவார் அந்த அண்ணலின் பெருமையை! ●



அசல் தங்க நகைகளுக்கு
என்றும் நம்பிக்கையுடன்
நீங்கள் நாடவேண்டிய நிறுவனம்

நியூ மைதிலி ஜுவலர்ஸ்

இல. 38, 40 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

கிளை நிறுவனம்

சந்தோஷ் ஜுவலர்ஸ்

இல. 97A, 99V
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தொ. பே. 021 221 1177, 021 221 1188

# கருணையின் பொருள் நீ நல்லை குமரா!

கருணையின் அழகன் நீ நல்லை முருகா - உயர்
கருணையின் பொருளும் நீ நல்லை குமரா - என்றும்

அடியவர் துயர் தீர்க்கும் அருட் கடல் நீயன்றோ - உன்
அன்பரின் பிணி தீர்க்கும் மருத்துவர் நீயன்றோ - கந்தா

அருட்கரம் நீட்டியன்று அருணகிரி உயிர் காத்தாய் - இடை
சிறுவனாய் வந்தன்று கனியுடன் தமிழ் தந்தாய் - உயர்
வீரனாய் வந்தன்று அமரரின் இடர் முடித்தாய் - அழகு
முருகனாய் வந்தன்று குறவள்ளிக்கு இடம் தந்தாய் - முருகா

முருகா உன் கருணைக்கோர் எல்லையும் உண்டாமோ - நல்லை
கந்தா உன் அன்புக்கு வரைவேதுமுண்டாமோ - அருள்
முருகா உன் அருளுக்கோர் அளவுகோல் உண்டாமோ - நல்லை
கந்தா உன் பதம் காணப் பேரருள் போதுமன்றோ - அன்பு

**முருகு**
யாழ்ப்பாணம்.



## கருணை புரிவாயப்பா...!

ஆர்ப்பரித்தெழுந்த சூரனையே ஆட்கொண்டு
பெரு வாழ்வீய்ந்த முருகா
காரிருள் சூழ் வாழ்வின் தொல்லை களையவே
நல்லையில் அமர்ந்தருளும் நாயகா
கார்த்திகேயா நீ காத்த தமிழும் மண்ணும்
இன்று சிதைவதைக் காணவில்லையோ
பார் மெச்சிய பண்பாடும் விழுப்பமான ஒழுக்கமும்
கல்வியும் கலையும் அருகுதே குமரா
சீரோங்கி சிறப்பாய் பொற்காலம் மீள
கருணை புரிவாய் நல்லூரானே...!

**இ. கஜிதாகரன்**
கோண்டாவில்

## வண்ண ரதமேறி வரமருளும் வடிவேலன்

எண்ணமெல்லாம் நிறைந்திருக்கும் ஏகம்பனிளையோன்
எழில் பூத்த நல்லூரிலுறைந்து
திண்ணதாய் வருமடியவர்க்கு தினம் நல்லருளீய்ந்து
திகழொளி பரப்பும் கந்தன்
மண்ணில் மகிழ்வோங்க மறத்தமிழர் வாழ்வில்
மறைந்ததே இடரென்று இன்புற்றோங்க
வண்ணரதமேறி வள்ளி தெய்வானையோடு வருகின்ற
வரங்கள் அருள்ந்திடவே வையகம் சிறந்திடவே

**க. லோஜினி**
கோண்டாவில்






# "தமிழர் இராசதானியில் நல்லைக் கந்தன் தேரேறி வருகிறான்"



மதுரகவி
காரை. எம்.பி.அருளானந்தன்

முத்தமிழால் வைதாரையும் வாழவைப்பவனாக வலிமையும், அழகும், அருளும், அன்பும் பொருந்திய பெருங்கடவுள் என கந்தபுராண காவிய நாயகனாக "சூரனுடலற வாரி சுவறிட வேலை விடவல பெருமான்" எனும் திருப்புகழ் நாயகன் - தாரகன், சிங்கன், சூரன் செருக்கடக்கிய செம்மலாக "சுற்றி நில்லாதே பகையே துள்ளி வருகுது வேல்" என்ற வரிகளுக்கு இன்றும் தனிப் பெரும் தெய்வமாய் உமையாள் பயந்த இலட்சியமாக சரவணத்தில் உதித்த ஆறுமுகனாக, திருத்தணிகை, பழனி, திருச்செந்தூர், திருவாவினன்குடி, திருச்சீரலைவாய், திருப்பரங்குன்றம் எனும் ஆறுபடை வீடுகளிலும் அமர்ந்தருள் புரியும் ஈசனாய் அழகிய சித்திரத் தேரிலே ஆறுமுகத்தோடு அபயகரம் காட்டி தேறுதலைத் தந்து தேசநலன் காக்க நல்லூரான் தேரேறி வருகின்ற திருக்காட்சி அற்புதக் காட்சியாக அமைகின்றது.

"எந்த மயமும் கந்த மயமாகவே
நல்லையம்பதி காட்சியளிக்கின்றது"

இன்று நல்லையம்பதி இந்திரவிழா போலக் காட்சியளிக்கின்றது. எந்த மயமும் கந்த மயமாகவே இருக்கிறது. முருகப் பெருமான் தன்னுடைய ஆறு முகக் கோலத்துடன் தேரேறி எழுந்தருளி வருகிறான். சிவபெருமானுடைய ஐந்து முகமும் உமா தேவியாரின் ஒரு முகமும் சேர்ந்து சிவனும் சக்தியும் கலந்த ஒரு திருவுருவமாக ஆறுமுகப் பெருமான் தோன்றினான் என்பது ஒன்று.

"ஆறுமுகப் பெருமானின் அருள்நலம்"

இறைவன் தன்னுடைய ஐந்து முகங்களையும் அதோ முகத்தையும் சேர்த்து ஆறுமுக நாதனாக திரு அவதாரம் செய்தார் என்பது மற்றொன்று. நான்கு திசையும் மேல், கீழ் இரண்டும் ஆக ஆறு இடங்களிலும் எம்பெருமான் திருவருட் பார்வை செல்கின்றது என்பதை அவனுடைய ஆறுமுகங்களும் நமக்குச் சொல்கின்றன.

ஆறுமுகத் தத்துவம் மிகப் பழமையானது, மிகப் புதுமையானது எல்லாக் காலத்திற்கும் உரியது. அதுவே ஆதியானது. அந்தமானது, இன்னொரு வகையாக ஆதியும் அந்தமும் அற்றது. இத்தகு பெருமைகளைக் கொண்ட ஆறுமுக சுவாமியே இன்று அடியார்களை அரவணைத்துக் காத்து இரட்சிப்பதற்காக தேரேறி வருகின்றார்.

"தேர்த்திருவிழாவின் மகிமை"

உற்சவம் இறைவனது ஐந்தொழிலின் தத்துவத்தை உள்ளடக்கியுள்ளது. படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய ஐந்தொழில்களின் உண்மைகளைப் புலப்படுத்தி நிற்பது மகா உற்சவமாகும்.

இன்று நல்லையம்பதில் தேர்த்திருவிழா நடைபெறுகிறது. உலகமே எம்பெருமான் தேரேறி அருள் பாலிக்கும் தெய்வீகக் காட்சியில் லயித்துவிடுகிறது.

மகோற்சவத்தில் சிறப்பிடம் பெறும் தேர்த்திருவிழா இறைவனுக்குரிய சிறந்ததொரு இராஜோபகாரமாகும். இறைவனது திருமேனியை தாங்கி இத் தேரானது ஆலய மாமணி வீதியில் அசைந்து ஆடி வருகின்றது.

"உலகமே வியந்து பார்க்கும்
நல்லைக்கந்தனின் தேரோட்டம்"

ஊர் கூடித் தேர் இழுத்தல் என்ற முதுமொழிக்கேற்ப அனைத்து மக்களும் எத்தகைய வேறு பாடுகளுமின்றி வடந் தொட்டு தேரை இழுத்து வருவது ஓர் உன்னதமான காட்சியாகிறது.

தேர் இருப்பிலிருந்து புறப்பட்டு மீண்டும் இருப்புக்கு வரும் வரை அடியார்கள் அரோகரா கோஷமிட்டு தமது மனமகிழ்ச்சியையும் பக்தியுணர்வையும் வெளிப்படுத்துவர்.

கந்தன் ஆறுதிருமுகங்களோடு தேரில் ஆரோகணித்து இலட்சோப லட்சம் மக்கள் மத்தியில் வலம் வருகிறான்.

நிச்சயமாக ஈழத்தமிழ் மக்களுக்கு நல்லதொரு தீர்வினை தேரேறி அருள் பாலிக்கும் கந்தப்பெருமான் தந்தருள வேண்டுமென எல்லோரும் இந்நாளில் எங்கள் தேசியப் பெருவிழாவில் முருகனை வேண்டுவோமாக.

வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா....!

கிருபா லேணர்ஸ்
KIRUBAA LEARNERS
அரச அங்கீகாரம் பெற்ற வடக்கின் முதல்தர கனரக சாரதிப் பயிற்சி பாடசாலை
விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
இரவு நேர வாகனப் பயிற்சி.
தவணை முறைக் கட்டணங்கள்.
சகல கிளைகளிலும் வாகனப் பயிற்சி.
விசேட பரீட்சை ஒழுங்குகள்.
வடக்கின் No 1 KIRUBAA சாரதிப் பயிற்சி பாடசாலை
-தலைமைக் காரியாலயம்-
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353, 0777 225 292
சுன்னாகம். 021 224 2022,
ஆவரங்கால். 021 222 6688
வவுனியா. 024 222 7777
பூநகரி. 021 320 1818
பருத்தித்துறை. 021 226 1100
நெல்லியடி. 021 226 0700
கிளிநொச்சி. 021 228 5505
முழங்காவில். 021 300 6544
கச்சேரி 021 222 6699
சாவகச்சேரி. 021 227 0700
விசுவமடு. 021 320 1515
மன்னார். 023 225 1656

# நல்லூர் கந்தன் ஆலயமும் மாப்பாண முதலியார்களும்



நல்லூர் கந்தசுவாமி கோயிலை மீண்டும் நிறுவி பெருங்கோயிலாக மாற்றிய பெருமை மாப்பாண முதலியார்களுக்கு உண்டு.

இவர்கள் யாழ்ப்பாணத்து அரசர்களான ஆரிய சக்கர வர்த்திகளின் காலத்தில் நகரேஷூ காஞ்சியிலிருந்து குடியேறியவர்கள். அரச சபையில் முக்கிய பிரதானிக ளாக இவர்கள் திகழ்ந்தனர் என்று கூறப்படுகின்ற போதும் இந்தத் தகவலை உறுதி செய்ய முடிய வில்லை.

இவர்கள் வசம் பரம்பரை வேலும், கந்த புராண ஏடும் ஆத்மார்த்த பூசையில் வைத்து பாதுகாக்கப்படுகிறது என்று கூறப்படுகின்றது.

கோயிலை அமைத்தவர் தொட்டு இன்றுவரை மாப்பாண பரம்பரையினர் 11 பேர் ஆலயத்தை நிர்வகித்து வருகின்றனர் அவர்களின் விவரங்கள் வருமாறு,

**ஆலய நிர்மாணம்**

*முதலாம் இரகுநாத மாப்பாண முதலியார் (1734 - 1750)*

**செங்கல் கோயில் அமைப்பு**

*இரண்டாம் இரகுநாத மாப்பாண முதலியார் (1750 - 1800)*

**விநாயகர், வைரவர் சந்நதி அமைப்பு**

*முதலாம் ஆறுமுக மாப்பாண முதலியார் (1800 - 1839)*

**பெருந்திருவிழா ஆரம்பம்**

*மூன்றாம் இரகுநாத மாப்பாண முதலியார் (1839 - 1860)*

*கந்தையா மாப்பாண முதலியார் (1860 - 1890)*

*சங்கரப்பிள்ளை மாப்பாண முதலியார் (1890 - 1915)*

**சண்முகர் திருவுருவம் நிறுவியமை - உள்பிரகார திருப்பணி**

*இரண்டாம் ஆறுமுக மாப்பாண முதலியார் (1915 - 1821)*

**முத்துக்குமார சுவாமி திருவுருவம் நிறுவுதல், சண்முக புஷ்கரணி திருக்குளம் அமைத்தல்**

*நான்காம் இரகுநாத மாப்பாண முதலியார் (1921 - 1945)*

**இராஜகோபுர திருப்பணி, தற்போது உள்ள தேர் அமைக்கப்பட்டமை**

*சண்முகதாஸ மாப்பாண முதலியார் (1946 - 1964)*

**வடக்கு, தெற்கு இராஜ கோபுரங்கள் நிர்மாணம், தங்க விமானம்(கூரை), தங்க வாகனங்கள் உருவாக்கப்பட்டமை**

*குமாரதாஸ மாப்பாண முதலியார் (1965 - 2021)*

**குபேர திக்கு ஸ்ரீ குமார கோபுரம் நிர்மாணம்**



*சயந்தன மாப்பாண முதலியார் (2021 முதல்)*

# மணல் சிற்ப கலை வளர்க்கும் தலம்!

நல்லூர் பெருந்திருவிழா காலத்தில் மணலில் சிற்பங்களை வடிவமைக்கும் கலை ஒவ்வொரு வருடமும் எழுச்சி கண்டு வருகின்றது. சிறுவர்கள், பெரியவர்கள் என்ற வேறுபாடின்றி இந்த அருங்கலையை தினமும் செய்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். ஒவ்வொரு வருடமும் நல்லூர் கந்த சுவாமி ஆலய முன்றலில் இரவு வேளைகளில் இந்தக் கலைஞர்கள் தங்கள் கைவினையை காட்டுவார்கள்.

இந்த அற்புதக் கலையை வடிப்பவர்களில் அநேகர் சிறுவர்களாக இருப்பர். மணல் சிற்பங்களை அவர்கள் வடிவமைப்பதைக் காண்பதைக் காண பலர் குமிந்திருப்பர். அந்தக் கலைஞர்கள் முருகன், விநாயகர், சிவன், அம்மன் எனப் பல்வேறு கடவுளர்களை மணலில் சிற்பமாக வடித்து தங்கள் கலைநயத்தை வெளிப்படுத்துவார்கள்.

பெருந்திருவிழாவின் 25 நாட்களும் இந்தக் காட்சியை இரவு வேளைகளில் காணமுடியும். சில மணிநேரங்கள் எடுக்கும் இந்த மணல் சிற்ப வடிவமைப்பைக் காண மக்கள் ஆர்வத்துடன் காத்திருந்து பார்வையிட்டு செல்வர். இவ்வாறு கலைஞர்கள் உருவாக்கிய மணல் சிற்பங்கள் சில இங்கே,




# முருகனின் 16 திருக்கோலங்கள்



முருகப் பெருமானின் திருக்கோலங்களில் 16 வடிவங்கள் பிரபலமானவை. அவை வருமாறு:-

**ஞானசக்திதரர்**

முருகப்பெருமானின் ஆறுபடை வீடுகளில் ஐந்தாம் வீடான திருத்தணியில் எழுந்தருளக்கூடிய முருகப்பெருமானின் வடிவத்திற்கு 'ஞானசக்திதரர்' என்று பெயர். இவரை வழிபடுவதால் நல்ல ஞானமும், நினைத்த காரியங்களுக்கு வெற்றியைத் தருவார்.

**கந்தசாமி**

பழனி மலை மீது நின்ற கோலத்தில் பாலதண்டாயுதபாணியின் திருவடிவத்தில் காட்சி தருவதை 'கந்தசாமி' வடிவமாகும். இந்த வடிவத்தை வழிபடுவதால் சகல காரியங்கள் சித்தியாகும்.

**ஆறுமுக தேவசேனாபதி**

'ஆறுமுக தேவசேனாபதி' என்ற வடிவத்தை வழிபடுவதால் மங்கலங்கள் உண்டாகும்.

**சுப்பிரமணியர்**

சுப்பிரமணியனை வணங்கினால் வினைகள் விலகி, ஆனந்தத்தை அருள்வார். நாகப்பட்டினம் திருவிடைகழியில் அருள்பவர் இவரே.

**கஜவாகனர்**

கஜவாகனரை வழிபட்டு வர துன்பங்கள் விலகி நற்பலன் கிடைக்கும். மேல்பாடி, திருமருகல், சிதம்பரம் நடராஜர் கோயில் ஆகிய கோயில் கோபுரத்தில் யானை மீது அருளக்கூடிய கஜவாகனர் முருகப் பெருமானை தரிசிக்க முடியும்.

**சரவணபவர்**

'சரவணபவர்' மங்கலங்களை அருள்வார். கொடை, ஒலி, சாத்வீகம், வீரம் உள்ளிட்ட நற்குணங்களை அருளக்கூடியவர்.

**கார்த்திகேயன்**

கார்த்திகேயரை வழிபடுவதால் சகல சௌபாக்கியங்கள் பெறலாம். குறிப்பாக கார்த்திகை நட்சத்திரத்தில் வழிபட்டால் மேலும் விசேஷமானது.

**குமாரசாமி**

குமாரசாமி முருகனை வழிபடுவதால் ஒருவரின் ஆணவம் பொடிபடும். கங்கை கொண்ட சோழபுரம் சிவாலயத்தில் குமாரசாமி திரு உருவத்தை பஞ்சலோக விக்கிரகமாக தரிசிக்கலாம்.

**சண்முகர்**

திருச்செந்தூர்க் கோயிலில் சண்முகர் திருவுருவில் காட்சி தருகிறார். இவரை வழிபட சிவ பார்வதியை வணங்கிய பலன் கிடைக்கும்.




**தாரகாரி**

முருகனுக்கு ஹதாரகாசுரன்" என்னும் அசுரனை அழித்ததால் இந்த திருப்பெயர் வந்தது. இவரை வழிபட்டு வர உலக மாயைகளிலிருந்து விடுதலை தருவார்.

**சேனானி**

பகை, பகைவர்கள், பொறாமையை அழித்து நல்ல எண்ணத்தை அருளக்கூடியவர் முருகனின் 'சேனானி' திருவுருவம்.



**பிரம்மசாஸ்தா**

முருகனின் பிரம்மசாஸ்தா திருவுருவத்தை வணங்கினால் கல்வி, கேள்வியில் சிறப்படையலாம்.

**வள்ளிகல்யாணசுந்தரர்**

திருமணத் தடைகளை அகற்றக்கூடிய வள்ளி கல்யாணசுந்தரர்.

**பாலசுவாமி**

இவரை தரிசித்தால் உடல் அங்கக் குறைபாடுகளை அகற்றுவார். அதே போல் தீராத நோய் விலகும்.

**சிரவுபஞ்சபேதனர்**

இந்த இறைவனை வழிபட்டால் துன்பங்கள் விலகும். மனச்சஞ்சலம் நீங்கும்.

**சிகிவாகனர்**

சிகி என்றால் மயில். மயில் வாகனத்தை கொண்ட தெய்வம் முருகன். மயில் மீது அமர்ந்து அழகாக காட்சி தருபவர் சிகிவாகனர். இவரை வணங்கி வந்தால் மகிழ்ச்சி நிறைந்த வாழ்வைத் தருவார்.



உங்கள் வண்ணக் கனவுகளின்
அடையாளம்
யாழ்.நகரில் தனிச் சிறப்பு மிக்க



# Hotel Lovusiyah








No. 42, Clock Tower Road, Jaffna, Sri Lanka.
021 222 1326, 021 222 1327, 077821 0122

# சிறி நதியா
நகை மாளிகை



இல. 01, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2709



# C. S. K. தெய்வேந்திரம்
அன்ஸ் சன்ஸ்

ஆயுள் வேத மருந்துக்கடை





கோவிலுக்குத் தேவையான அனைத்து வகை
பொருட்களையும் ஆயுள்வேத மூலிகைகளையும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

இல. 02, பருத்தித்துறை வீதி,
செங்குந்த சந்தை, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 844 8589

அனைத்து விதமான மங்கல நிகழ்வுகளையும்
நடத்திட நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்



# சிவகாமி மஹால்





- நவீன வசதிகளுடன் கூடிய மண்டபம்
- குளிரூட்டப்பட்ட - குளிரூட்டப்படாத மண்டப வசதிகள்,
- மண்டப, மணவறை அலங்காரங்கள்
- விருப்பத்துக்கேற்ப உணவுத் தெரிவுகள்
- தனியான வாகனத் தரிப்பிடம்



ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
021 205 2288, 075 932 6147